# உதயன்

சுடர்: 29 கதிர்: 245 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 13, செவ்வாய் 29.07.2014

stay connected with: uthayan.print uthayanprint Uthayan - A lively National Tamil Daily



பக்கங்கள்

யாழ். - 20/=

வன்னி - 20/=


தெளிவான வானிலை

காற்றுவீச்சு: தென்மேற்குக்காற்று 34 km/h

ஈரப்பதம்: 48%

காற்றமுத்தம்: 1008 hPa

வெளிச்சத் தெளிவு: மிக நன்று

சூரியோதயம்: 05:23

சூரியஸ்தமனம்: 18:04




முறிந்தது போர்நிறுத்தம் 7





காஸாவுக்கு பழி தீர்ப்போம் 8





இரத்தக் கதையை வியாபாரமாக்கும் சினிமா 14


# வடக்கு அபிவிருத்திக்கு ரூபா 6,000 மில். தேவை

## கொழும்பு அரசிடம் வடக்கு மாகாண சபை கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக, அடுத்த ஆண்டு 6 ஆயிரம் மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்றும் வடக்கு மாகாண சபையால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் அந்த நிதியை ஒதுக்கீடு செய்து தருமாறு கொழும்பு அரசிடம், வடக்கு மாகாண சபை கோரியுள்ளது என்று தெரியவருகின்றது.

வடக்கு மாகாணத்துக்கான அடுத்த ஆண்டு வரவு - செலவுத் திட்டம் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால்வடக்கு மாகாண சபை பொறுப்பேற்கப்பட்ட பின்னர் தயாரிக்கப்படும் முதலாவது வரவு - செலவுத் திட்டம் இதுவாகும்.

குறித்த வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி, சுகாதாரம், விவசாயம், மீன்பிடி மற்றும் உள்ளூராட்சி ஆகிய 5 அமைச்சுகளாலும் முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு அமைச்சும் அடுத்த ஆண்டு மாகாண சபையூடாகத் தம்மால் முன்னெடுக்கப்படவிருக்கும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு எவ்வளவு நிதி தேவை என்பதையும் சமர்பித்துள்ளன.


22 ஆம் பக்கம் பார்க்க






இன்று நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் 'உதயனின்' வாசகர்கள், விளம்பரதாரர்கள், நலன்விரும்பிகள் அனைவருக்கும் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்

## முஸ்லிம்களின் பங்களிப்பை நினைவு கூருவோம்

*ஜனாதிபதி நோன்புப் பெருநாள் வாழ்த்து*

கொழும்பு, ஜூலை 29

"ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வுக் கலாசாரத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்காக இலங்கை முஸ்லிம் சமூகம் செய்துள்ள பெறுமதியான பங்களிப்புகளை நாம் இன்றைய நாளில் நினைவு கூருவோம்"


22 ஆம் பக்கம் பார்க்க


## அனைவரும் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும்

*வாழ்த்துச் செய்தியில் வடக்கு முதலமைச்சர்*

யாழ்ப்பாணம், ஜூலை 29

இன்றைய தினம் ஈகைத் திருநாளாம் புனித நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் அனைத்து முஸ்லிம் உறவுகளுக்கும் என்னுடைய உளமார்ந்த நோன்புப் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, ஒரு சிறப்


22 ஆம் பக்கம் பார்க்க




பல வாரங்களாக ஆஸ்திரேலிய சுங்கக் கப்பலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் புகலிடக் கோரிக்கையாளர்கள் நேற்றுமுன்தினம் கொக்கோஸ் தீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து மேற்கு ஆஸ்திரேலியாவிலுள்ள கேர்ட்டின் தடுப்பு முகாமிற்கு மாற்றப்பட்டுள்ளனர். அவர்கள் நேற்று பூர்வாங்க பரிசோதனைகள் மற்றும் மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்பட்டனர் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன. (ற)

## ஒத்துழைப்புடன் செயற்படுவாராகில் பிரதம செயலர் பதவியிலிருக்கலாம்

### வடக்கு முதலமைச்சரின் சட்டத்தரணி உயர் நீதிமன்றில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு மாகாண அமைச்சரவையாலும், வடக்கு முதலமைச்சராலும் கொடுக்கப்படும் சட்டபூர்வமான உத்தரவுகளை நிறைவேற்றி வடக்கு மாகாண அரசுக்கு எதுவித தடங்கலுமின்றி செயற்பட ஒத்துக் கொள்வாரேயானால் பிரதம செயலாளர் தொடர்ந்து அந்தப் பதவியில் இருக்கலாம் - இவ்வாறு நேற்று உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார் வடக்கு முதலமைச்சர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரனால் வழங்கப்பட்ட சுற்றறிக்கை காரணமாகத் தனது அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன என்று தெரிவித்து பிரதம செயலாளர் விஜயலட்சுமி ரமேஷால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு கடந்த தவணை எடுத்துக் கொள்ளப்பட்ட போது, முதலமைச்சரால் விடுக்கப்பட்ட சுற்றறிக்கையை மீளப் பெற்றுக் கொள்வதாக முதலமைச்சர் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் நேற்று வழக்கு மீளவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அப்போது வடக்கு முதலமைச்சர் க.வி. விக்னேஸ்வரன் சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், "பிரதம செயலாளர் விடுமுறை எடுப்பதாக இருந்தால் அதை முதலமைச்சருக்கு முற்கூட்


22 ஆம் பக்கம் பார்க்க


## ஐ.நா. விசாரணை குழுவினரிடம் கெலும் மக்ரே சாட்சியமளிப்பார்



கொழும்பு, ஜூலை 29

இலங்கையில் நடைபெற்ற போரில் மேற்கொள்ளப்பட்டன என்று கூறப்படும் போர்க்குற்றங்கள் மற்றும் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் ஐ.நா. விசாரணைக் குழு முன்பாக சனல்-4 ஊடகவியலாளர் கெலும் மக்ரேயும் சாட்சியமளிக்கவுள்ளார் என்று தகவல்கள் வெளியாகி யுள்ளன.

இறுதிப்போரில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான ஆவணப்படங்களை வெளியிட்டு இலங்கைக்கு சர்வதேச


22 ஆம் பக்கம் பார்க்க


## ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மாவட்ட உத்தியோகத்தர்கள்

### முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் ஆராய்கிறது

யாழ்ப்பாணம், ஜூலை 29

கிராம அபிவிருத்தித் திணைக்களத்துக்கு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் மாவட்ட உத்தியோகத்தரை நியமிப்பது தொடர்பில் சாதகமாக பரிசீலிக்கப்படுகின்றது என்று தெரிவித்துள்ளது முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்.

ஆளணிவெற்றிடங்கள் தொடர்பிலான மீளாய்வு கடந்த வாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் கொழும்பில் நடத்தப்பட்டது. அந்தக் கலந்துரையாடலிலேயே இந்த விடயம் பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் 5 மாவட்டங்கள் உள்


22 ஆம் பக்கம் பார்க்க


## சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் விவசாயத் தேவைகளுக்கு

### திட்டம் விரைவில் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரைச் சுத்திகரித்து விவசாயத் தேவைக்குப் பயன்படுத்துவது தொடர்பான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ளது என்று தெரியவருகின்றது.

நகர்ப் பகுதியிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை உரியமுறையில் பயன்படுத்துவது தொடர்பில் யாழ்.மாவட்டச் செயலகத்தில் அண்மையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அந்தக் கலந்துரையாடலில், கழிவு நீரைச் சுத்திகரித்து விவசாயத் தேவைக்காகப் பயன்படுத்துவது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை செயற்படுத்துவதற்காக விரைவில் யாழ்.மாவட்ட அரச அதிபர், கமநலசேவைகள் நிலையம், விவசாய அமைப்புக்கள் இடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

யாழ்.நகரிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை சிராய் குளத்தில் சேகரித்து சுத்திகரித்து, அதனை நவாலி வடக்கு, சங்கரத்தை, மானிப்பாய் மேற்குப் பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் விசாயிகளுக்கு வழங்குவது என்று திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் செயற்படத் தொடங்குமானால், கழிவு நீர் சுத்திகரிக்கப்பட்டு ஒரு நாளைக்கு 10 ஆயிரம் மீற்றர் கியூப் நீர் விவசாயத் தேவைகளுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

## இலங்கையில் தற்போதும் ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்

### குற்றஞ்சாட்டுகின்றது அமெரிக்கா

யாழ்ப்பாணம், ஜூலை 29

அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு வழங்குவதற்கோ, அவ்வாறு அச்சுறுத்தலை மேற்கொள்பவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கோ பொலிஸார் முன்வருவதில்லை. இவ்வாறான நிலைமையே தற்போதும் இலங்கையில் காணப்படுகின்றது என்று தெரிவித்துள்ள இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம், ஊடகவியலாளர்களுக்கு நடத்தப்படவிருந்த பயிற்சிப் பட்டறை அமெரிக்க அரசின் நிதியுதவியுடனே மேற்கொள்ளப்படவிருந்தது என்றும் சுட்டிக் காட்டியுள்ளது.

அண்மையில் கொழும்பில் நடைபெறவிருந்த பயிற்சிப்


22 ஆம் பக்கம் பார்க்க



மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மீனவர்களை விடுவிக்கக் கோரி இராமேஸ்வரத்தில் ஆர்ப்பாட்டம்

## வேலை நிறுத்தம் தொடரும் என அறிவிப்பு

இராமநாதபுரம், ஜூலை 29
இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி இராமநாதபுரத்தில் உள்ள மீனவர்கள் நேற்று கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கையில் உள்ள படகுகள் மற்றும் மீனவர்களை விடுவிக்க வலியுறுத்தி கடந்த 24ஆம் திகதி முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம் மேற்கொண்டு வருகின்றனர். இந்த வேலை நிறுத்தம் நேற்று 6ஆவது நாளாகவும் நீடித்தது.

இந்த நிலையில் நேற்று தமிழகத்தின் 11 மீனவ சங்கத் தலைவர்கள் மற்றும் மீனவர்கள், இணைந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பேரணியாக மாவட்ட ஆட்சி அலுவலகம் சென்றனர். அங்கு தமது படகு உரிமங்களை ஒப்படைக்கப் போவதாகக் கூறிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன்போது பொலிஸார் வரவழைக்கப்பட்டு ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். எனினும் மீனவர்கள் அந்த அலுவலகத்துக்கு முன்பாக போராட்டத்தைத் தொடர்ந்தனர்.

இதனையடுத்து மாவட்ட ஆட்சி அலுவலர் நந்தகுமார், மீனவர்களை அழைத்துப் பேசினார். மீனவர்களை மீட்கவும் படகுகளை விடுவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மீனவர்களிடம் உறுதியளித்தார்.

இந்த உறுதிமொழியை அடுத்து போராட்டத்தைத் தாம் கைவிடுகின்றோம் எனத் தெரிவித்த மீனவர்கள் தமது வேலை நிறத்தம் தொடரும் எனத் தெரிவித்தனர். (ஐ-14)



## நல்லூர் ஆலயச் சூழலில் உயர் வலு மின் விளக்குகள்



யாழ்ப்பாணம், ஜூலை 29
நல்லூர்த் திருவிழாவை முன்னிட்டு உயர் வலுக்கொண்ட மின்விளக்குகளை ஆலய சூழலில் பொருத்தும் பணிகளை மின்சார சபை நேற்று ஆரம்பித்தது.

இலங்கை மின்சார சபையால் ஆலயத்தின் சூழலை அண்டிய வீதிகளுக்கு இந்த மின் விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

முதற்கட்டமாக நேற்று பருத்தித்துறை வீதியில் மின் விளக்குகள் பொருத்தப்பட்டன.

ஆலயத் திருவிழாக் காலத்தில் பொது மக்களின் பாதுகாப்பு கருதி அதிக வெளிச்சத்துடன் கூடிய மின்விளக்குகள் பொருத்தப்படுகின்றன என்று மின்சார சபை தெரிவித்தது. (ஐ-14-7)

# முதலமைச்சரின் கோரிக்கையால் பிரதேச சபை செயலர் பதவி நீக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளராக கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் நியமிக்கப்பட்ட செ.ரமேஷ் என்பவர் அந்தப் பதவியிலிருந்து வடக்கு மாகாண ஆளுநரால் நீக்கப்பட்டுள்ளார். முதலமைச்சரின் கோரிக்கைக்கு அமைவாகவே இந்தப் பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பச்சிலைப்பள்ளி மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள இரு பிரதேச சபைகளில் காணப்பட்ட செயலாளர் பதவி வெற்றிடங்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நிரப்பப்பட்டன. இதில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் செயலாளராக நியமிக்கப்பட்ட செ. ரமேஷ் முறையற்ற விதத்தில் நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்து முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இதற்கு ஆளுநர், தன்னால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டே குறித்த நபர் நியமிக்கப்பட்டார் என்று முதலமைச்சருக்குப் பதில் அனுப்பிவைத்திருந்தார். அதற்கு மீளவும் முதலமைச்சர், சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தனது சம்மதமின்றி குறித்த சபைச் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஆளுநருக்கு கடிதம் எழுதியிருந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

முதலமைச்சரின் கடிதத்துக்கு அமைவாக, பச்சிலைப்பள்ளி பிரதேச சபைச் செயலாளர் பதவியிலிருந்து செ.ரமேஷை தான் நீக்குகிறார் என்று ஆளுநர் தெரிவித்துள்ளார். அத்துடன் புதிய செயலாளரைத் தேர்வு செய்வதற்கான நேர்முகத் தேர்வையும் நடத்துமாறும் ஆளுநர் பணித்துள்ளார்.

பிரதேச சபைச் செயலாளர்களுக்கான வெற்றிடங்களை நிரப்பும் நேர்முகத் தேர்வு பிரதம செயலாளர் அலுவலகத்தினால் நடத்தப்பட்டிருந்தது. அந்த நேர்முகத் தேர்வில் குறித்த நபர் தோற்றியிருக்கவில்லை. வடக்கு மாகாண ஆளுநரினால் விசேடமாக நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வின் அடிப்படையிலேயே அவர் நியமிக்கப்பட்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ-5)

# நல்லூர் பெருந் திருவிழா காலத்தில் கலாசார உடை அணிவது கட்டாயம்

யாழ்ப்பாணம், ஜூலை 29
நல்லூர் ஆலயத் திருவிழாக் காலத்தில் தமிழ்ப் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் கலாசார உடைகளை அணிந்தே அடியார்கள் வரவேண்டும் என்று யாழ்.மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

திருவிழாக் காலத்தில் மாநகர சபையுடன் இணைந்து பண்பாட்டுப்பேரவையும் ஆலய சூழலில் விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நல்லூர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் முதனாம் திகதி ஆரம்பமாகிறது. ஆலயத் திருவிழா தொடர்பான கலந்துரையாடல் நேற்று யாழ். மாநகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கூட்டத்தில் கலந்து கொண்டவர்களால், ஆலயத் திருவிழாக் காலத்தில் பக்தர்கள் கலாசார உடை அணிந்து வர வேண்டும் எனும் கருத்து முன்வைக்கப்பட்டது.

இதற்கு கருத்து தெரிவித்த முதல்வர் இந்த தகவல் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பண்பாட்டு விழுமியங்களை பின்பற்றுவதற்கு ஏதுவாக ஆலயத்துக்கு வருகை தருவோர் கலாசார உடையுடன் வருகை தரவேண்டும். பக்தர்கள் தாங்களாகவே இதை உணர்ந்து பின்பற்ற வேண்டும். எனத்தெரிவித்தார்.

இதேவேளை சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தால் ஆலய சூழலில் விழிப்புணர்வு பதாகைகளும், துண்டுப்பிரசுரங்களும் விநியோகிக்கப்படவுள்ளன.

தேர்த் திருவிழாவின் போது தேர் இருப்பிடத்தை வந்த பின்னரே காவடிகள் ஆலய வீதிக்குள் நுழைய முடியும்.

ஆலய சூழலை அடியவர்கள் தூய்மையான பிரதேசமாக பேண வேண்டும். கழிவுகளைச் சேகரிக்கவென வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் கழிவுகளை இட வேண்டும்- என்றார். (ஐ-14-7-17)


நீங்கள்

இலஞ்சம் அல்லது ஊழல்
காரணமாக அநீதிக்கு உள்ளாகிய ஒருவரா?

இலஞ்சம் அல்லது ஊழலுக்கு
எதிராக உங்களால் செய்யக்கூடியவை பற்றி நீங்கள் அறியாது இருப்பவரா?

இலஞ்சம் அல்லது ஊழலுக்கு
எதிராக உங்களால் முன்வைக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு உரிய பதில் கிடைக்கவில்லையா?

உங்களது உரிமைகள் தொடர்பாக இன்றே செயல்படுங்கள்.
உங்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகள் வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம்.



வவுனியா நிலையம்
வைரவர்கோவில் வீதி,
02ம் குறுக்குத்தெரு
வவுனியா
தொலைபேசி இலக்கம்:
024 2227676

மட்டக்களப்பு நிலையம்
இல: 296, ½
திருகோணமலை வீதி,
மட்டக்களப்பு
தொலைபேசி இலக்கம்:
065 2229594

மாத்தறை நிலையம்
இல: 17, காளிதாச வீதி,
மாத்தறை
தொலைபேசி இலக்கம்:
041 2233522

TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

"நேர்மையின் புகலிடம்" கொழும்பு
நிலையம் 183/5 ஹைலெவல் வீதி,
கொழும்பு – 06
தொலைபேசி இலக்கம்: 0112 513313

பக்கங்கள்: இருபத்துநான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா யாழ். 20/-

கிளாசிக்

சுடர்: 29 வள்ளுவர் ஆண்டு: 2045 ஆடி 13 செவ்வாய்க்கிழமை (29.07.2014) UTHAYAN - A lively National Tamil Daily கதிர் 245

# இந்த வருட இறுதிக்குள் வடக்கில் மின்சார வசதி

## பூரணப்படுத்தப்படும் என்கிறார் வடக்கின் வசந்த திட்டமுகாமையாளர்

**யாழ்ப்பாணம், ஜூலை 29**

**வடமாகாணம் முழுவதும் இந்த வருட இறுதிக்குள் மின்சாரம் வழங்கப்படும். எனினும் கால நிலை இடையூறுகளால் சில இடங்களில் பணிகள் பாதிக்கப்பட்டாலும் 90 வீதமான பிரதேசங்களுக்கு மின் இணைப்புக்கள் வழங்கப்படும் என்று வடக்கின் வசந்தம் திட்டத்தின் வட மாகாண முகாமையாளர் ந.குணசீலன் தெரிவித்துள்ளார்.**

**இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-**

வட மாகாணத்துக்கு 100 வீதி மின்சார இணைப்பை வழங்க வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு. அதனை இந்த வருட இறுதிக்குள் வழங்குமாறு பணிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக யாழ். மாவட்டத்தில் முழுமையாக மின் இணைப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் தீவகப் பகுதிகளுக்கான மின் இணைப்புகள் சற்றுத் தாமதித்துள்ளன. நெடுந்தீவில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் தற்போது பணிகள் இடம்பெறுகின்றன. அனலைதீவு, எழுவைதீவு பிரதேசங்களுக்கு அடுத்த கட்டமாக மின் சார விநியோக பணிகள் மேற்கொள்ளப்படும்.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு இந்த வருடம் டிசெம்பர் மாத இறுதிக்குள் மின்சாரம் முழுமையாக வழங்குவதற்கான நடவ

(22ஆம் பக்கம் பார்க்க)

## சிறுமி துஷ்பிரயோகம் இளைஞருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஜூலை 29

பருத்தித்துறைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் சிறுமி ஒருவரைக் காதலிப்பதாகக்கூறி பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் நாகர் கோயிலடியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டு சிறுவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி மனமுடைந்து உயிரை மாய்த்துக் கொள்ள முயற்சித்தார் எனக் கூறி சம்பவம் தொடர்பில் பெற்றோர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். இதன்போது சந்தேக நபர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (ஜ-4-108-109)

## திருவிழாவில் திருடிய சிறார்கள் இல்லத்தில்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நயினாதீவு தேர்த்திருவிழா அன்று திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட 3 சிறுவர்களை சிறுவர் இல்லங்களில் சேர்க்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. நயினாதீவு தேர்த் திருவிழாவின் போது இவர்கள் பொருள்களைத் திருடினர் என்று சிறுமி ஒருத்தி உட்பட 3 சிறுவர்களை ஊர்காவற்துறைப் பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் மூவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது பொலிஸார் தம்மைத் தாக்கினர் என்று சிறுவர் நீதிமன்றில் கூறினர். இதனைடுத்து அவர்களை மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தி சிறுவர் இல்லங்களில் சேர்க்குமாறு மன்று உத்தரவிட்டது.

சாவற்கட்டைச் சேர்ந்த குறித்த சிறார்கள் சுமார் 3ஆயிரம் ரூபா பெறுமதியான பொருளைத் திருடினர் என்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்குவதில் காலதாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை.29

யாழ்.மாவட்டத்தில் பயிரிழப்பீட்டுக் கொடுப்பனவுக்கு 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் தெரிவு செய்யப்பட்டனர். எனினும் அவர்களுக்கான கொடுப்பனவுகள் இன்னும் கிடைக்கப்பெறவில்லை என பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலபோகத்தில் மழையினால் ஏற்பட்ட பயிரழிவுக்கு நஷ்டஈடு வழங்குவதற்கு யாழ். மாவட்டத்தில் 7 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கமக்கார அமைப்புக்கள் ஊடாக தெரிவு செய்யப்பட்டனர்.

விவசாயிகளது விவரங்கள் தனிப்பட்ட வங்கி கணக்கு இலக்கங்களுடன் கமநல சேவைத் திணைக்களத்துக்கு 4 மாதங்களுக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. கொடுப்பனவு வழங்குவதற்கு கமநல சேவைத்திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. எனினும் விவசாயிகளுக்கு கொடுப்பனவுகள் கிடைக்கப் பெறவில்லை.

கமநல சேவைத் திணைக்களத்தின் ஆணையாளர் யாழ்ப்பாணத்துக்கு பயணம் மேற்கொண்டிருந்த போது, விவசாயிகளுக்கு உரிய காலத்தில் இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று தெரிவித்திருந்தார். எனினும் அந்தக் கொடுப்பனவுகள் பல மாதங்கள் ஆகியும் வழங்கப்படவில்லை.

இது தொடர்பில் கமநல சேவைகள் திணைக்களத்தின் வட மாகாண பணிப்பாளர் பற்றிக் நிரஞ்சனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, கொடுப்பனவுகள் வழங்குவதற்கான அனுமதி திணைக்களத்திடம் இருந்து கிடைத்துள்ளது. அத்துடன் சாவகச்சேரி, நல்லூர், தொல்புரம் பகுதி விவசாயிகளுக்காக கொடுப்பனவுகளும் வந்து சேர்ந்துள்ளன. விவசாயிகளின் வங்கி கணக்கு இலக்கத்துக்கு பணத்தை வைப்பிலிடுவதில் தாமதம் ஏற்படுகிறது - என்றார். (ஜ-14)

## தமிழரசுக் கட்சி அலுவலகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதி கட்டடத் திறப்பு விழாவும், நாடாளுமன்ற உறுப்பினர் பணிமனைத் திறப்பு விழாவும் இன்று முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழையில் இடம்பெறவுள்ளன.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைத் தொகுதிக் கிளையை தெல்லிப்பழை,

(22ஆம் பக்கம் பார்க்க)

## கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ். மாவட்ட இளைஞர் கழக சம்மேளன பிரதிநிதிகள் மற்றும் யாழ். மாவட்ட இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.

ஹம்பகாவில் யாழ். மாவட்ட இளைஞர் கிரிக்கெட் அணிக்கெதிராக மேற்கொள்ளப்பட்ட சம்பவத்திற்கெதிராக யாழ்.

(22ஆம் பக்கம் பார்க்க)

## சகோதரத்துவத்தை கட்டியெழுப்புவதற்கான சிறந்த வழி இதுவே!

### வாழ்த்துச் செய்தியில் ரணில்

கொழும்பு, ஜூலை 29

தீமைகளை அழித்து நன்மைகளை பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டு ஒரு மாத காலமாக முஸ்லிம்கள் நோற்கும் நோன்பானது இஸ்லாம் கட்டியெழுப்பப்பட்டுள்ள பிரதான ஐந்து தூண்களில் ஒரு தூணாகும் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு,

நோன்பு நோற்பதன் நோக்கம் வெறுமனே பட்டினி கிடப்பது மாத்திர மன்றி நோன்பின் மூலம் பெற்றுக் கொள்ளப்படும் கருணை, அன்பு மற்றும் பொறுமை என்பவற்றை தமது வாழ்க்கையில் எடுத்து நடப்பதாகும்.

நோன்பின் மூலம் பெறப்படும் உடல் மற்றும் உள ரீதியிலான படிப்பினைகள் சிறந்த சமூக கட்டமைப்பை கட்டியெழுப்புவத:.த சிறந்த அத்திபாரமாகவும் அமைகிறது. தாம் வியர்வை சிந்தி உழைத்த பணத்தில் ஒரு தொகையை ஏழைகளுக்கு வழங்கி சமூகத்தில் ஏற்றத்தாழ்வினை இல்லாதொழிப்பதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சியானது சகோதரத்துவத்தைக் கட்டியெழுப்புவதற்கான சிறந்த வழியாகும்.

முதன் முறையாக புனித அல்-குர்ஆன் இவ்வுலகிற்கு இறக்கி வைக்கப்பட்டதும் ரமழான் மாதத்திலாகும். ரமழான் மாதத்தில் பெற்றுக்கொள்ளப்படும் நற்பண்புகளை அம்மாதத்திற்கு மாத்திரம் வரையறுத்துவிடாது வாழ்க்கையில் ஏனைய காலங்களில் அதனை செயற்பாட்டில் எடுத்து நடப்பதே முஸ்லிம்களின் பொறுப்பாகும். அந்த நோக்கத்தை இலக்காகக் கொண்டு இன்றைய தினம் நோன்புப் பெருநாளைக் கொண்

(22ஆம் பக்கம் பார்க்க)

## பஸ் நிலையத்தில் ஓய்வு பறிபோனது பணப் பை

வவுனியா, ஜூலை 29

தான் செல்லவேண்டிய இடத்துக்கான பஸ் புறப்பட நேரம் இருந்ததால் அந்தச் சந்தர்ப்பத்தில் தனது பயண அலுப்பைத் தீர்த்துக்கொள்ள பஸ் நிலையத்தில் படுத்து உறங்கிய ஒருவர் பெருமளவு பணத்துடன் தனது பேர்ஸை பறிகொடுத்தார்.

இந்தச் சம்பவம் வவுனியா பஸ் நிலையத்தில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்றது.

வவுனியா பஸ் நிலையத்தில் உறங்கிக் கொண்டிருந்த ஒருவருக்கு அருகாக வந்தமர்ந்த ஒருவர் தானும் உறங்குவது போன்று நடித்து அவருடைய ஜீன்ஸ் பொக்கெட்டுக்குள் இருந்த மணிபேர்ஸை சூட்சுமமாக திருடிக்கொண்டு மாயமாகி விட்டார்.

தூக்கத்தில் இருந்து எழுந்த அந்த இளைஞர் பேர்ஸை தேடியபோது அது களவுபோனமை தெரியவந்தது.

ஹற்றனிலிருந்து வவுனியா வந்திருந்த குறித்த இளைஞரே இவ்வாறு தனது பேர்ஸை பறிகொடுத்தார்.

சம்பவம் குறித்து பஸ் நிலையம் அருகே கடமையிலிருந்த பொலிஸாரிடம் முறையிடப்பட்டது. (ஜ-102)

## ஜே.வி.பி. தலைவர் அநுர விபத்தில் காயம்

கொழும்பு, ஜூலை 29

ஜே.வி.பியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுர குமார திஸாநாயக்க வாகன விபத்தில் காயமடைந்துள்ளார்.

இரத்தினபுரி - ஹொரணை பிரதான வீதியில் இவர் பயணித்த வாகனம் எதிரே வந்த லொறி ஒன்றுடன் மோதியதாலேயே

(22ஆம் பக்கம் பார்க்க)

## கள் உற்பத்தியாளர்களுக்கு வடக்கில் பயிற்சித் திட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடமாகணத்தில் கள் உற்பத்தியை அதிகரிக்கும் திட்டத்தின் கீழ் 250 பயனாளிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5 மில்லியன் ரூபா செலவில் பனை அபிவிருத்தி சபை இந்தத் திட்டத்தை முன்னெடுக்க உள்ளது. இதில் இளம் உற்பத்தியாளர்கள் பயனாளிகளாக தெரிவு செய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இன்னும் இரு மாதங்களில் இதற்கான வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. யாழ். மாவட்டத்தில் 115 பயனாளிகளுக்கும், கிளிநொச்சி மாவட்டத்தில் 25 பயனாளிகளுக்கும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 40 பயனாளிகளுக்கும், வவுனியா மாவட்டத்தில் 30 பயனாளிகளுக்கும், மன்னார் மாவட்டத்தில் 40 பயனா

(22ஆம் பக்கம் பார்க்க)

## வரணி ம.க. புதிய ஆய்வுகூடங்களுக்கு 350 பிளாஸ்ரிக் கதிரைகள் வழங்கப்படும்

### நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் தெரிவிப்பு


தென்மராட்சி, ஜூலை 29

தென்மராட்சிப் பிரதேசத்தில் கல்வியில் வளர்ச்சியடைந்து வரும் வரணி மத்திய கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆய்வுகூடங்கள் மற்றும் மஹிந்தோதய திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆய்வு கூடம் ஆகியவற்றில் மாணவர்கள் பயன்பாட்டுக்காக 350 பிளாஸ்ரிக் கதிரைகள் அன்பளிப்பாக வழங்கவுள்ளதாக யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திர குமார் தெரிவித்தார்.

வரணி மத்திய கல்லூரியில் 3 மாடிக் கட்டடத் தொகுதிகள் திறப்பு விழா ஞாயிறன்று நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

முன்னைய காலங்களில் நகர்ப்புறப் பாடசாலைகள் மட்டும் கல்விச் செயற்பாடுகளில் அபிவிருத்தி கண்டு வந்துள்ளன. ஆனால் தற்போது கிராமப்புறப் பாடசாலைகளும் கல்வியில் முன்னேற வேண்டும் என்ற கல்விக் கொள்கைத் திட்டத்தின் கீழ் நாட்டில் உள்ள அனைத்துக் கிராமப்புறப் பாடசாலைகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் வழங்கப்பட்டு நகர்ப்புறப் பாடசாலைகளை நோக்கி மாணவர்கள் செல்லும் நிலை மாறிவருவதுடன் கிராமப்புறப் பாடசாலைகளும் கல்வியில் பெருவளர்ச்சி கண்டு வருகின்றன.

இந்த நிலையில் அவற்றுக்குத் தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுப்பதில் கல்வி அமைச்சு பல்வேறு கல்விச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவதுடன் இதுவரை வடமாகாணத்தில் 600இற்கு மேற்பட்ட பாடசாலைகளை அபிவிருத்தி செய்ததுடன் மாணவர்களின் கல்விக்குத் தேவையான அனைத்து வளங்களையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகிறது. அந்த வகையில் தென்மராட்சி கல்வி வலயத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட கிராமப் பாடசாலைகளில் வரணி மத்திய கல்லூரி, கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி ஆகியவையும் அடங்கும்- என்றார். (வ-9)



*இலங்கை திரிசாரணர் பயிற்சிப் பாசறை யாழ்.மாவட்டத்தில் முதன்முதலாக கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சாரணியத்தில் 63 வருட கால சேவையை நிறைவுசெய்த சாரணிய கலாநிதி மா.புவனேந்திரனுக்கு அதிசிரேஷ்ட தலைவர் விருது வழங்கிக் கௌரவித்தார். (ஒ-11)*

## மாணவனின் காயத்துக்கு மருந்து கட்டாது தொலைக்காட்சியை ரசித்த மருத்துவர்கள்

### தெனியாய மருத்துவமனையில் சம்பவம்

தலையில் ஏற்பட்ட காயத்துக்கு மருந்து கட்டுவதற்காக தெனியாய ஆதார மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட மாணவனொருவனுக்கு மருந்து கட்டாது மருத்துவர்கள் தொலைக்காட்சி முன்பாக அமர்ந்திருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெனியாய மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பிரிவில் பயிலும் ஒன்பது வயது மாணவரொருவன் பாடசாலையில் சறுக்கி விழுந்ததால் அவனது தலையில் காயமேற்பட்டது.

இதை அடுத்து மருந்து கட்டுவதற்காக அந்த மாணவனின் பெரிய தாயாரால் அந்த மாணவன் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தபோதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாகத் தெரியவருவதாவது:-

இந்த மாணவன் காயமடைந்திருப்பதாக பாடசாலையின் பாதுகாப்புப் பிரிவினர் அறிவித்தனர். இதனை அடுத்து அவனது பெரிய தாயார் தெனியாய நகரிலுள்ள தனியார் மருத்துவமனைக்குக்கொண்டு சென்றுள்ளார். காயத்துக்குத் தையல்போட வேண்டியிருப்பதால் அரச மருத்துவமனைக்கு செல்லுமாறு அங்கு தெரிவிக்கப்பட்டது. உடனடியாக தெனியாய வைத்தியசாலைக்கு மாணவன் எடுத்துச் செல்லப்பட்டான்.

சுமார் ஒரு மணித்தியாலத்தின் பின்னர் மருத்துவர் ஒருவர் அங்கு வந்துள்ளார். எவ்வளவு நேரம் காத்திருக்கிறீர்கள் என மருத்துவர் கேட்டபோது தாங்கள் வந்து சுமார் ஒரு மணித்தியாலம் வரையில் இருக்குமென மாணவனின் பெரிய தாயார் தெரிவித்தார்.

ஆனால் அங்கிருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் சுமார் 40 நிமிடங்கள்தான் அவர்கள் காத்திருந்ததாகக் கூறினார்.

அதைக் கேட்டதும் கோபத்தினால் திகைத்துப் போன அந்த மருத்துவர்,அந்தப் பெண்மணியைத் தாறுமாறாகப் பேசியதோடு மருந்து கட்டுவதற்கு பிற்பகல் நான்கு மணி வரையிலும் நில்லுங்கள் எனத் துண்டொன்றில் குறிப்பொன்றையும் எழுதி அவர்களிடம் நீட்டியுள்ளார்.

அதனால் தெனியாய நகரிலுள்ள தனியார் மருத்துவமனையொன்றுக்கு அந்த மாணவனைக் கொண்டு சென்று சிகிச்சை அளிக்கப்பட்டது.

இதேவேளை - மாணவனை மருத்துவமனைக்குக்கொண்டு சென்றபோது அங்கிருந்த மருத்துவர்கள் தொலைக்காட்சியை ரசித்துக் கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. இது தொடர்பாக மாவட்ட வைத்திய அதிகாரியான பிரேமரத்ன ரண்கடுவவிடம் தொடர்பு கொண்டபோது தமக்கு சம்பவம் குறித்து எதுவும் தெரியாது எனவும் அது பற்றி விசாரிப்பதாகவும் தெரிவித்தார். (க-22)

## அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தின் சரஸ்வதி சிலை திறப்பு விழா நாளை

வடமராட்சி, ஜூலை 29

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தில் சுமார் 3 லட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்டுள்ள சரஸ்வதி சிலை நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படும். அதிபர் வி.இந்திரலிங்கம் தலைமையில் நடைபெறும் திறப்புவிழா நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா கலந்து கொண்டு சிலையைத் திறந்து வைப்பார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சபை உறுப்பினர் வே.சிவயோகன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், பிரதிக் கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்வர்.

பாடசாலையின் முன்னாள் ஆசிரியர் அமரர் எஸ்.கணேசனின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினரால் இந்தச் சிலை நிறுவப்பட்டுள்ளது. (ஒ-173)

## மோ.சைக்கிள் சில்லில் சேலைத் தலைப்பு சிக்கி வீசப்பட்டு காயம்

தென்மராட்சி, ஜூலை 29

மோட்டார் சைக்கிள் சில்லுக்குள் சேலைத் தலைப்பு சிக்கியதில் தூக்கி வீசப்பட்டு குடும்பப் பெண்ணொருவர் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை சாவகச்சேரி தனங்களப்பு வீதியில் இடம்பெற்றது.

தனங்களப்பு பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் ஆடி அமாவாசை பொங்கல் உற்சவத்துக்குச் சென்ற வேளையில் இந்த விபத்து இடம்பெற்றது.

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த முத்துலிங்கம் தயாநிதி (வயது-48) என்பவர் தலையில் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். (ஒ-9)

## ஓட்டோவிலிருந்து பாய்ந்தார் பாட்டி; வேலியில் மோதிக் காயம்

தென்மராட்சி, ஜூலை 29.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ மின்கம்பத்துடன் மோதும் நிலை காணப்பட்ட போது ஓட்டோவிலிருந்து வெளியே பாய்ந்த மூதாட்டி வேலித் தூணுடன் மோதிப் படுகாயமடைந்தார்.

ஓட்டோ மின்கம்பத்துடன் மோதியதில் சாரதியும் காயமடைந்தார். ஓட்டோ பலத்த சேதமடைந்தது. அதனுள் இருந்த சிறுபிள்ளைகள் தெய்வாதீனமாக காயமின்றித் தப்பிக் கொண்டனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை நுணாவில் பருத்தித்துறை வீதியில் மட்டுவில் மகாவித்தியாலயத்துக்கு அருகில் இடம்பெற்றது.

சம்பவத்தில் யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த மரியநாயகம் செல்வமணி (வயது-67), சாரதியான மரியநாயகம் மரியதாஸ் (வயது-47) ஆகியோர் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (ஒ-9)

## வவுனியா வலயக் கணித வினாடி வினாப் போட்டி முடிவுகள்

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் கணித வினாடி வினா போட்டியில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

தரம்- 6

முதலாம் இடம்: ச.சபிஷன் - வ/கனகராஜன் குளம் மகா வித்தியாலயம், 2 ஆம் இடம்: ச.யதுர்சிகா-வ/கிடாச்சூரி அ.த.க. பாடசாலை, 3 ஆம் இடம்: ந.டிலக்ஷன்- வ/ஒலுமடு அ.த.க.பாடசாலை.

தரம் -7

முதலாம் இடம்: தி.நதுசன் - கனகராஜன் குளம் ம.வி, 2 ஆம் இடம் : ஜெ.விதுர்சன் -நெடுங்கேணி ம.வி, 3 ஆம் இடம்: வி.ரேணுகா- சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்.

தரம்- 8

முதலாம் இடம்: கி.சுகிர்தா - புதுக்குளம் ம.வி, 2 ஆம் இடம்: கு.புகழ்நிலா- கனகராயன் குளம் ம.வி, 3 ஆம் இடம்: ரா.மோகனா- சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்.

தரம் -9

முதலாம் இடம்: ம.லக்சன் - புதுக்குளம் ம.வி, 2 ஆம் இடம்: ம.அம்ஷினி -புளியங்குளம் ம.வி, 3 ஆம் இடம்: யோ.நிரோஜன்- ஓமந்தை மத்திய கல்லூரி.

தரம்- 10

முதலாம் இடம்: சோ.பிருதிவி - கனகராயன்குளம் ம.வி., 2ஆம் இடம் : ஸ்ரீ.டிலெக்சனா- ஓமந்தை மத்திய கல்லூரி, 3 ஆம் இடம்: ம.சுலக்சனா- புதுக்குளம் ம.வி., ர.சாயிபிரியங்கா- கல்மடு ம.வி.

தரம் -11

முதலாம் இடம்: பி.தரன்சிகா - கனகராயன்குளம் ம.வி., 2ஆம் இடம் : ச.கன்னியா -ஓமந்தை மத்திய கல்லூரி, 3 ஆம் இடம்: ப.வினோத்- கனகராயன் குளம் ம.வி., இ.தனுசிகன்- குளவிசுட்டான் அ:த.க.பாடசாலை. (வ-422)

## நிர்வாகிகள் தெரிவு

கொழும்புத்துறை மேற்கு வதரிபீட விநாயகர் ஆலய பரிபாலன சபையின் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது பின்வருவோர் பரிபாலன சபையின் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவராக- ஜெ.முத்துக்குமாரசாமி, உபதலைவராக- பொ.சிவப்பிரகாசம், செயலாளராக நா.காந்தீபன், உபசெயலாளராக இ.தனஞ்சயன், பொருளாளராக ந.ஆனந்தராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (க-17)

## ஓட்டோ விபத்து; இருவர் படுகாயம்

அளவெட்டி, ஜூலை 29

மல்லாகம் ஜெட்மோட்டர்ஸ் சந்திப் பகுதியில் ஓட்டோ ஒன்று தடம்புரண்டதில் அதில் பயணித்த இருவர் படுகாயமடைந்த சம்பவம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இடம்பெற்றுள்ளது.

முன்னால் சென்று கொண்டிருந்த ஹைஏஸ் வாகனத்தை முந்திச்செல்ல முற்பட்ட வேளையிலேயே ஓட்டோ தடம் புரண்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் சுன்னாகம் சூராவத்தையைச் சேர்ந்த கனகசபை ஜெகதீஸ்வரன் (வயது - 33), வாமதேவன் (வயது-25) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர். (ஒ-36)

## மாசேரியில் டெங்கு ஒழிப்பு சிரமதானம்

வரணி, ஜூலை 29

மாசேரி கிராம அலுவலர் பிரிவில் நேற்று முன்தினம் ஞாயிறு மாலை சிரமதான நிகழ்வொன்று இடம்பெற்றது.

டெங்கு ஒழிப்புத் திட்டத்தின் கீழ் பிரிவு கிராம அலுவலர் தலைமையில் பிரதேச பொது மக்கள் இணைந்து மாசேரி கிராம அபிவிருத்திச் சங்க மண்டப சுற்றாடல் மற்றும் மாசேரி குடத்தனை பிரதான வீதியின் இருமருங்கிலும் உள்ள புல்பூண்டு மற்றும் பற்றைகளை வெட்டித் துப்புரவு செய்து எரியூட்டினர். இந்த நிகழ்வில் ஆண்களும் பெண்களுமாக சுமார் ஐம்பதுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டனர். (ஒ-122)

## 'இப்தாருக்கு, அழைக்கப்படாத பிரதான முஸ்லிம் அமைச்சர்கள்

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அரச தரப்பு முஸ்லிம் அமைச்சர்களுக்கு அழைப்பு விடுக்காது 'இப்தார்' நிகழ்வைக் கொண்டாடினார்.

கொழும்பிலுள்ள பிரபலமான ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மேற்காசிய நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ராஜதந்திர அதிகாரிகள், அமைச்சரின் அரசியல் சகாக்கள், நண்பர்கள் என ஏராளமானவர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

ஆனாலும் அந்த விழாக் கொண்டாட்டத்துக்கு அமைச்சரவையில் இருக்கும் முஸ்லிம் அமைச்சர்களான ரவூப் ஹக்கீம் மற்றும் ரிஷாத் பதியுதீன் ஆகிய பிரமுகர்களுக்கு அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அழைப்பு விடுத்திருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-22)

## மருந்துக் கலவை உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கு விண்ணப்பம்


யாழ்ப்பாணம்,ஜூலை 29
சுகாதார அமைச்சின் கீழ் மருந்துக் கலவை உத்தியோகத்தர் பயிற்சி நெறிக்கு பயிற்சியாளர்களைச் சேர்த்துக்கொள்வதற்கு குறிப்பிட்ட தகைமைகளுக்கு ஏற்ப விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்ப முடிவு நாள் எதிர்வரும் 8ஆம் திகதியாகும்.
மேலதிக விவரங்களை ஜூலை 4ஆம் திகதிய வர்த்தமானியில் பார்வையிடலாம் என்று யாழ்.சுகாதார சேவைகள் பணிமனை அறிவித்துள்ளது. (ஓ)

## தமிழரசுக் கட்சியின் கிளை புனரமைப்பு கூட்டம்

வலி. வடக்கு, ஜூலை 29
இலங்கை தமிழரசுக் கட்சியின் காங்கேசன்துறைக் கிளையின் புனரமைப்புக் கூட்டமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் அலுவலகத் திறப்பு விழாவும் இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு தெல்லிப்பழை காங்கேசன் துறை வீதி, ஆனைக் குட்டி மத வடியில் இடம்பெறவுள்ளது.
இந்த நிகழ்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின்முக்கிய உறுப்பினர்கள்மற்றும்நாடாளுமன்றஉறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைகளின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொள்ளவுள்ளனர். (வ-86)

## நகர சபையின் பொதுநூலக சிறுவர் பிரிவை மேம்படுத்த தளபாடங்கள் அன்பளிப்பு

### சம்பத் வங்கி வழங்கியது



தென்மராட்சி, ஜூலை 29
சாவகச்சேரி நகர சபையின் பொது நூலக சிறுவர் பிரிவை மேம்படுத்தும் நோக்குடன் சம்பத் வங்கியால் அதற்குரிய தள பாடங்கள், புத்தக இறாக்கைகள், மாணவர்கள் கற்பதற்கான கணினி ஆகியவை வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக் கிழமை இடம்பெற்றது.
நகர சபைத் தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சம்பத் வங்கியின் சந்தைப் படுத்தல் பிரிவு பிரதிப் பொது முகாமையாளர் தாரகரன் வெய, தலைமை அதிகாரி திலக் அபேசிங்க, சாவகச்சேரி கிளை முகாமையாளர் பா.கிரிதரன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.
நிகழ்வில் சாவகச்சேரி றோ.க.த.க.பாடசாலை, சாவகச்சேரி புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையம் ஆகியவற்றின் சிறார்களும் கலந்து கொண்டனர். (வ-9)

## 'இந்து வணிகன்' நூல் வெளியீடு

தென்மராட்சி, ஜூலை 29
சாவகச்சேரி இந்துக் கல்லூரி உயர்தர வணிக மாணவர் மன்றத்தின் "இந்து வணிகன்" நூல் வெளியீட்டு விழா, நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கல்லூரி அருணாசலம் மண்டபத் தில் இடம்பெறும்.
மன்றத் தலைவர் க.சிவனுஷன் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் ந.சர்வேஸ்வரனும், சிறப்பு விருந்தினராக செலான் வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ச.சந்திரகுமாரும், கௌரவ விருந்தினராக மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதய மகா வித்தியாலய அதிபர் வே. கந்தசாமியும் கலந்து கொள்வர். நூலை முதன்மை விருந்தினர் வெளியிட சுவிஸ் நாட்டு 'அட்லெக்லிக்' நிறுவன உரிமையாளர் ச.கேதீஸ்வரன் பெற்றுக் கொள்வார். (ஓ-9-122)

## மஞ்சள் கோட்டைக் கடக்க அஞ்சி நடுங்கும் பாதசாரிகள்

### வவுனியா வீதிகளில் இந்த நிலைமை

மஞ்சள் கோட்டுப் பகுதியில் வாகனங்கள் வேகக் கட்டுப்பாட்டை மீறிச் செல்வதால் மஞ்சள் கோடுகளைக் கடக்க முயலும் பயணிகள் அச்சமடைந்த நிலையில் காணப்படுகின்றனர்.
வவுனியாவிலுள்ள பிரதான வீதிகளில் டிப்பர் வாகனங்கள் உட்பட ஏனைய வாகனங்கள் பயணிகள் மஞ்சள். கோடுகளைக் கடப்பதற்கு வசதியாக நிறுத்தி வழிவிடாது வேகமாகச் செல்வதால் வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன. வவுனியா பொலிஸார் பிரதானமான சில வீதிகளில் காணப்படும் மஞ்சள் கோடு களுக்கு அருகில் பணிபுரிகின்றனர். ஆனாலும் வேகக் கட்டுப்பாட்டை மீறிவரும் வாகனங்கள் பயணிகளுக்கு அச்சுறுத்தல் விடுப்பதுடன் விபத்துக்களையும் ஏற்படுத்துகின்றன. இத்தகைய வாகனங்களைச் செலுத்தி வரும் வாகனச் சாரதிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து, தண் டனை பெற்றுக் கொடுக்க வேண்டுமென பாதிக்கப்பட்டு வரும் மக்கள் பொலிஸாருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-402)

## சைவசமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 29
அச்சுவேலி உலவிக்குளம் பிள்ளையார் கோவிலின் வருடாந்தப் பெருந்திருவிழா நாளை மறுதினம் வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறவுள்ளது. எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக் கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.
உற்சவ நாள்களில் இரவு வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் வழங்கும் சைவ நற்சிந்தனை உரை இடம் பெறும்.
இந்தச் சிந்தனை உரையை மையப்படுத்தி இந்துக் குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சமஸ்கிருத விற்பன்னர் அமரர் அச்சுவேலியூர் ச.குமார சுவாமிக் குருக்கள் நினைவுச் சைவ சமய அறிவுப் போட்டி இடம் பெறவுள்ளது.
இந்தப் போட்டியில் வெற்றியீட்டுவோருக்கு தேர்த்திரு விழா நாளில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை தலைவர் பேராசிரியர் மா.வேதநாதனும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கவுள்ளனர். (ஓ)

# பிறந்த தின நினைவுகள்

85ஆவது

பிறப்பு 20 . 07 . 1929



கந்தையா இராசேந்திரம்

பண்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய்
அன்பின் திருவுருவாய் எமக்கு வழிகாட்டியாய்
உற்றார், உறவினர், நண்பர்களுக்கு இனியவனாய்
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் தந்தையே
நீர்தந்த அன்பின் நிழலில் வாழும் உன்...

75ஆவது

பிறப்பு 29 . 07 . 1939



திருமதி
பாக்கியம் இராசேந்திரம்

எம் உயிரின் பாதி உன்னுடன் உதிர்ந்ததம்மா
ஆண்டுகள் ஆயிரம் அகன்றாலும்
ஆருயிர் அன்னையே...
நீர்தந்த அன்பின் நிழலில்
வாழும் உன்...



830, கே.கே.எஸ். வீதி,
தட்டாதெரு, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(50324) (7.6.3)

## சிகிரியா சிங்க பாதத்தை பார்வையிட தற்காலிக தடை



கொழும்பு, ஜூலை 29
சிகிரியா சிங்க பாதத்தின் மேற்பகுதியை பார்வையிடுவதற்கு சுற்றுலாப் பயணிகளுக்கு தற்காலிக தடை விதிக்கப்பட்டுள்ளது.
காலை முதல் நண்பகல் 12 மணி வரை சிகிரியா சிங்கமலையின் மேற்பகுதியை பார்வையிடுவது தடை விதிக்கப்பட்டுள்ளதாக மத்திய கலாசார நிலையம் தெரிவித்துள்ளது.
தற்போது நிலவும் அதிக காற்றுடன் கூடிய காலநிலை காரணமாக குளவிகள் கலைந்து, மனிதர்களைத் தாக்குவதற்கான சந்தர்ப்பம் உள்ளதன் காரணமாக தாம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக மத்திய கலாசார நிலையம் குறிப்பிட்டுள்ளது.
கடந்த சில தினங்களாக குறித்த பிரதேசத்தில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் உட்பட பலர் குளவித் தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
சிகிரியா மலையில் 16 குளவிக் கூடுகள் காணப்படுவதாகவும் அவற்றில் இரண்டு கூடுகளில் உள்ள குளவிகள் அடிக்கடி கலைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## குளவிக் கொட்டுக்கு இலக்காகி 10 பேர் மருத்துவமனையில்

பொகவந்தலாவை, பொகவான தோட்டத்தில் நேற்று முற்பகல் 11.45 மணியளவில் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் 10 பெண் தொழிலாளர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.
மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பெண்களின் நிலை தேறி வருவதாக பொகவந்தலாவை மருத்துவமனையின் பிரதான மருத்துவ அதிகாரி யூ.ஏ.எஸ்.கே. ஜயசூரிய தெரிவித்தார்.




குளவி கொட்டுக்குக்கு இலக்காகி மருத்துவமனையில் சிகிச்சை பெறுவோர்.

அண்மைக்காலமாக மலையகத்தில் குளவிக் கொட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ)

## மதிய உணவுக்காக வத்திக்கான் ஹோட்டலுக்கு வந்தார் பாப்பரசர்

### அனைவருடனும் ஒன்றாக அமர்ந்து சாப்பிட்டார்

வத்திக்கான், ஜூலை 29
பாப்பரசர் பிரான்ஸிஸ் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விடும் விதமாக தமது மதிய உணவுக்காக வத்திக்கானில் உள்ள ஹோட்டல் ஒன்றுக்கு வந்திருந்தார்.
அண்மையில் ஒருநாள், மதிய உணவுக்கான நேரம் ஆரம்பமாகிய வேளையில் அந்த ஹோட்டலுக்கு வந்திருந்த ஏனையோரைப் போன்று புனித பிரான்ஸிஸ் பாப்பரசரும் வரிசையில் நின்றே மதிய உணவைப் பெற்றுக்கொண்டார்.
பாப்பரசர் சோஸ் கலக்காத



பாப்பரசர் பிரான்ஸிஸ்

பாஸ்ட்ரா, உருளைக்கிழங்கு மற்றும் அன்றைய தினத்தின் விசேட அம்சங்களில் ஒன்றான மீன் கறியையும் வரவழைத்தார். குடி தண்ணீர் போத்தல் ஒன்றையும் அவர் பெற்றுக் கொண்டார்.
உணவைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர் அங்கு வந்திருந்தவர்களுக்கு மத்தியில் சென்று அவர்களுடன் அமர்ந்தவாறே உணவை உட்கொண்டார்.
உணவை முடித்துக் கொண்டதன் பின்னர் அந்த ஹோட்டலில் இருந்த அனைவருக்கும் பாப்பரசர் ஆசீர்வாதம் வழங்கவும் தவறவில்லை. (ஒ-22)

## சுகாதார அமைச்சுக்கு மட்டும் ஓர் ஆண்டில் 600 பரீட்சைகள்

கொழும்பு, ஜூலை 29
அரச நிர்வாக சேவைகள். அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள 6/2006 சுற்றறிக்கைக்கு அமைய பதவி உயர்வுகள், ஆள்சேர்ப்புக்கள் தொடர்பாக சுகாதார அமைச்சுக்கு ஓர் ஆண்டில் 600 பரீட்சைகள் வரையில் நடத்த வேண்டி நேர்ந்திருப்பதாகத் தெரிய வந்துள்ளது.
இந்தவிதமாகப் பரீட்சைகளை நடத்தி முடிக்க வேண்டுமானால் குறைந்த பட்சமாக நாள் ஒன்றுக்கு இரண்டு பரீட்சைகள் வீதம் நடத்த வேண்டியிருப்பதாகவும் இதன் காரணமாக இந்தச் சுற்றறிக்கையானது சுகாதார அமைச்சின் சிக்கல்கள் பலவற்றுக்கும் காரணமாகியிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
அரச நிறுவனங்கள் சிலவற்றின் பலவீனங்கள் மற்றும் தாமதங்களின் காரணமாக இந்தச் சுற்றறிக்கையை மீளாய்வு செய்வதற்கு இயலாது போயிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-22)

## சைக்கிள் விபத்துக்களில் 2,691 பேர் உயிரிழப்பு

### கடந்த பத்து வருடங்களில்

கொழும்பு, ஜூலை 29
கடந்த பத்து வருடங்களாக இடம்பெற்ற சைக்கிள் விபத்துக்களில் இரண்டாயிரத்து 691 பேர் உயிரிழந்துள்ளதாக வீதி பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை தெரிவித்துள்ளது.



கோப்புப்படம்

கடந்த வருடத்தில் மாத்திரம் சைக்கிள் விபத்துக்களில் 258 பேர் உயிரிழந்துள்ளதாக சபையின் தலைவர் சட்டத்தரணி காமினி ஏக்கநாயக்க குறிப்பிட்டார்.
மின்விளக்குகள் இன்றி இரவு நேரத்தில் செலுத்தப்படுகின்ற சைக்கிள்களே பெரும்பாலும் விபத்துக்குள்ளாகின்றன.
சைக்கிள்களின் முன்புறத்தில் வெள்ளை நிற மின்விளக்கும் பின்புறத்தில் சிவப்பு நிற மின்விளக்கும் பொருத்தப்பட்டிருக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும் என்று வீதிப் பாதுகாப்பு தொடர்பான தேசிய சபை குறிப்பிட்டுள்ளது.
இந்த நடைமுறையைப் பின்பற்றாமல் சைக்கிள்களைச் செலுத்துவோருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரமுள்ளதாகவும் சட்டத்தரணி காமினி ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார். (வ)

## ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்காக அம்பாந்தோட்டையில் 9 ஏக்கர் நிலம்

கொழும்பு, ஜூலை 29
அம்பாந்தோட்டையில் 5 நட்சத்திர ஹோட்டல் ஒன்றை நிர்மாணிப்பது தொடர்பாக அம்பாந்தோட்டை கடற்கரையோரப் பூங்காவை அண்டியுள்ள 9 ஏக்கர் நிலப்பரப்பை 99 வருட குத்தகை அடிப்படையில் தனியார் நிறுவனம் ஒன்றுக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.
அதில் 6 ஏக்கர்கள் கொண்ட நிலப்பரப்புக்கு 99 வருட குத்தகைப் பெறுமதியாக 9 கோடியே 76 லட்சம் ரூபாய்களை அறவிட்டுக் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
எஞ்சியுள்ள மூன்று ஏக்கர்கள் வரையிலான நிலம் தொடர்பாக அறவிட்டுக் கொள்ளப்படும் குத்தகைப் பெறும்தி அரசின் பிரதான மதிப்பீட்டாளரால் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படவுள்ளது.
ஹெலன்கோ ஹோட்டல்ஸ் அன்ட்ஸ்பா தனியார் நிறுவனத்தால் 250 அறைகளுடன் நிர்மாணிக்கப்படும் இந்த ஹோட்டலின் அபிவிருத்தித்திட்டம் தொடர்பாக செலவிடப்படவுள்ள தொகை 550 கோடி ரூபாவாகும். (ஒ-22)

## 34 ஆண்டுகளுக்குப் பின்னர் ஆனையிறவில் இருந்து உப்பு

போர் காரணமாக அழிந்து போயிருந்த ஆனையிறவு உப்பளத்தின் உற்பத்திச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படுகின்றன.
கிளிநொச்சி பாதுகாப்புப் படையணியின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்கவின் தலைமையில் ஆனையிறவு உப்பளத்தில் மீள் உற்பத்தியை ஆரம்பித்து வைக்கும் விழா அண்மையில் இடம்பெற்றிருந்தது.



கோப்புப்படம்

கடந்த 1980 ஆம் ஆண்டில் ஆனையிறவு பிரதேசத்தில் தொடங்கப்பட்டிருந்த பயங்கரவாதத் தாக்குதல்களினால் ஆனையிறவு உப்பளத்தின் உற்பத்திச் செயற்பாடுகள் அனைத்தும் முழுமையாக நின்று போயின.
தற்போது கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் அனுசரணையின் கீழ் கிளிநொச்சி பாதுகாப்புப் படையணிகள் தலைமையகத்தினால் இந்த ஆனையிறவு உப்பளத்தின் உற்பத்திச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (ஒ-22)


முதியோர் பராமரிப்பு
நோய்வாய்ப்பட்ட, நோயற்ற முதியோர் பராமரிக்கப்படும்.
தொடர்பு: 078 884 7111
(43684) (12.3.6)

கடைகள் வாடகைக்குண்டு
இல.381, Stanley வீதி,
யாழ்ப்பாணத்தில் நான்கு கடைகள் வாடகைக்குண்டு.
தொடர்பு: Dr.Roy Johnson
071 660 2527
(50332) (12.3.6)

கார் விற்பனைக்கு
WP GR-xxxx
இலக்கமுடைய Toyata Corolla
White Colour
கார் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 843 5257 (50330) (4.6.3)

தேவை
யாழ்.நகரில் இயங்கும் மொத்த வியாபாரம் செய்யும் தொழில் ஸ்தாபனத்திற்கு வேலை ஆள் தேவை.(ஆண்) 18-25 வயதுகுட்பட்டவராக இருப்பது விரும்பத்தக்கது.
தொடர்பு:077 914 5923
(50328)(5.6.3)

சொக்கட்டான் பந்தல், பந்தல் பொருள்கள் விற்பனைக்குண்டு
நல்ல நிலையிலுள்ள
அலங்காரப்பந்தல்- 40 அடி, சாதாரண பந்தல்-30 அடி, மணவறை, பூமணவறை, மேடை (சிறியது) கதிரை-150, சாப்பாட்டு மேசை-10, லான்ட் மாஸ்ரர்
என்பன விற்பனைக்குள்ளன.
தொடர்பு: 077 815 2444, (50331) (4.6.3)
077 886 4275, 077 151 7921

சேவைநலன் பாராட்டு
சர்வணமுத்து இரத்தினசிங்கம்
(கால்நடை அபிவிருத்தி உத்தியோகத்தர் - LDO)






அவர்களின் 31 வருட திணைக்கள சேவையில் 12 வருடங்கள் எமது அலுவலகத்தில் அளப்பெரிய சேவையாற்றி பண்ணையாளர் மத்தியிலும் அலுவலர்கள் மத்தியிலும் நன் மதிப்பைப் பெற்ற சேவை நாயகன் 26.07.2014 உடன் அரச சேவையில் இருந்து ஓய்வுபெற்றுச் செல்லும் இவர் பல்லாண்டு காலம் சகல நலன்களும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்: கால்நடை வைத்தியர், உத்தியோகத்தர்கள்,
கால்நடை வைத்திய நிலையம், சாவகச்சேரி.

தேவை
நிலையத்தில் தங்கியிருந்து வேலை செய்ய, வேலை பழக
20 வயதுக்குட்பட்ட ஆண் மாற்றுவலுவுள்ளோர் வரவும்.
ஆதரவு கைத்தொழில் நிலையம், மீசாலை
தொடர்பு:077 735 1148
(சி/15302)(5.6.3)

விற்பனைக்கு
வீட்டில் பாவித்த பொருள்கள் மலிவு விலையில் விற்பனைக்குண்டு.
(T.V, Frige (Sisil), SHE LL, Gas Cooker)
தொடர்பு : 077 959 0692 (50325)(7.6.3)

வீடு விற்பனைக்கு
தொண்டமானாற்றுச் சந்தியில் இருந்து உடுப்பிட்டி வீதியில் கதிர்காம வைத்திய நிலையம் இயங்கும் ஒரு பரப்பில் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு.
தொடர்பு:077 240 8462
(சி/15260)(5.6.3)

பதவி வெற்றிடம்
01) பக்க வடிவமைப்பாளர் (Page Designer)
02) புத்தகம் கட்டுநர் (Book Binding)
ஆகிய பணிநிலைகளுக்கு வெற்றிடங்கள் நிலவுவதால் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புவோரும் சுயவிவரத்துடனும், தகுதிச் சான்றிதழ்களுடனும் 29.07.2014 தொடக்கம் 31.07.2014 ஆகிய நாள்களுக்குள் நேரில் சமுகம் தரவும்.
வைரஸ் பிறிண்டேர்ஸ்
# 568, கே.கே.எஸ்.வீதி, இணுவில்.
(மக்கள் வங்கி, கிளைக்கு அருகில்)
தொ.பே.: 021 224 1815/021 320 2585
(50323)(5.6.3)

# முறிந்தது போர்நிறுத்தம்

## காஸாவில் நேற்று வெடித்தது உக்கிர மோதல்

காஸா,ஜூலை 29

இஸ்ரேல் அரசு அறிவித்த 24 மணி நேரப் போர் நிறுத்தத்தை ஹமாஸ் இயக்கத்தினர் ஏற்க மறுத்து ஞாயிற்றுக்கிழமை ரொக்கெட் குண்டுகளை வீசி தாக்குதல் நடத்தினர். இதற்குப் பதில டியாக இஸ்ரேல் இராணுவமும் காஸாவை குறிவைத்து மீண்டும் தாக்குதலைத் தொடங்கியுள்ளது.

இந்நிலையில் சனிக்கிழமை 12 மணி நேர போர் நிறுத்தத்தை இஸ்ரே லும் ஹமாஸ் இயக்கமும் மேற்கொண்டன. அப்போது ஹமாஸ் இயக்கத்தினர் பயன்படுத்திய பாதாள சுரங்கங்களை இஸ்ரேல் இராணுவம் அழிக்கத் தொடங்கியது.

இந்நிலையில் ஐ.நா. சபை கேட்டுக் கொண்டதைத் தொடர்ந்து போர் நிறுத்தத்தை மேலும் 24 மணி நேரம் இஸ்ரேல் நீடித்தது. இதை ஹமாஸ் இயக்கத் தினர் ஏற்க மறுத்து ரொக்கெட் குண்டு களை வீசித் தாக்குதல் நடத்தினர்.

இதற்குப் பதிலடியாக இஸ்ரேல் இராணுவமும் பதில் தாக்குதல் நடத்தியது. இதில் 2 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

**இஸ்ரேல் இராணுவ அறிக்கை**

இஸ்ரேல் இராணுவம் வெளியிட்டுள்ள அறிக்கையில், ஹமாஸ் இயக்கத்தினர் 5 ரொக்கெட் குண்டுகளை வீசினர். இவற்றில் 2 ரொக்கெட் குண்டுகள் நடு வானில் அழிக்கப்பட்டன, 3 குண்டுகள் இஸ்ரேல் பகுதியில் விழுந்தன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹமாஸ் தீவிரவாதிகள் இடைவிடாத ஏவுகணைத் தாக்குதலை நடத்தத் தொடங்கியுள்ளனர். இதையடுத்து வான்வழி, கடல்வழி, தரைவழித் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப்பட்டுள் ளன என்று இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் ஹமாஸ் தீவிரவாத இயக்கம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், "காஸா பகுதியிலிருந்து இஸ்ரேலின் இராணுவ பீரங்கிகள் திரும்பப் பெறப்படும் வரை போர் நிறுத்தம் என்பது சரியான முடிவாக இருக்காது.

"ஏனெனில், பொதுமக்கள் தங்களது வீடுகளுக்குத் திரும்புவதற்கும், காஸா பகுதியில் உயிரிழந்தவர்களின் உடல் களை அம்புலன்ஸ்களில் சுதந்திரமாக எடுத்துச் செல்வதற்கும் அது பெரும் அச்சுறுத்தலாக இருக்கும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இஸ்ரேலின் இந்தப் போர் நிறுத்தம் காஸா பகுதி மீதான தாக்கு தலை தீவிரப்படுத்துவதற்கு ஆயத்தமா கும் முயற்சி' 'என்றும் அதில் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.



தாக்குதலால் புகைமூட்டமான காஸா

**சாவு எண்ணிக்கை 1,060 ஆனது:** இதனிடையே காஸா பகுதியில் சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்ட 12 மணி நேர போர் நிறுத்தத்தின்போது, 130 உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. இது வரை சாவடைந்தோரின் எண்ணிக்கை 1,060ஆக உயர்ந்துள்ளது. அவர்களில் 80 சதவீதத்தினர் பொதுமக்கள் என்றும் பலஸ்தீன சுகாதாரத்துறை தெரி வித்துள்ளது. அதேபோல் இஸ்ரேல் தரப்பில் 46 பேர் உயிரிழந்துள்ளனர் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.


காஸாவின் மீது இஸ்ரேல் போர் தொடுத்த ஜூலை 8ஆம் திகதி முதல் இதுவரை சுமார் 1,060 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 6,000 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர். இவர்களில் 80 சதவீதத்துக் கும் அதிகமானோர் பொது மக்கள் ஆவர்.

சுமார் 1,20,000 பலஸ்தீனர்கள் வெளியேற்றப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. இந்தப் போரில் 192 குழந்தைகள் கொல்லப் பட்டுள்ளனர் என யுனிசெஃப்' நிறுவனம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் தரப்பில் இது வரை 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

**இஸ்ரேலில் இந்திய வம்சாவளி சிப்பாய் சாவு**

காஸா பகுதியிலிருந்து நடத்தப்பட்ட பீரங்கித் தாக்குதலில் பலத்தகாயமடைந்த இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இஸ்ரேல் இராணுவ சிப்பாய் பராக் ரஃபேல் தேகோர்கொ் (வயது27) உயிரிழந்துள்ளார் என இஸ்ரேலிய இ ராணுவம் தெரிவித்துள்ளது.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பராக் ரஃபேல் தேகோர்கொ், பெனி-இஸ்ரேல் சமூகத்தைச் சேர்ந்தவர். இந்த சமூகத்தைச் சேர்ந்த சுமார் 50,000 பேர் இஸ்ரேலில் தற்போது வசித்து வருகின்றனர். அவர்களில் இராணுவத்தில் பணியாற்றி வரும் பெரும்பாலான இளைஞர்கள் சண்டை நடைபெற்ற பகுதிகளில் தற்போது பணியில் உள்ளார்கள் எனத் தெரிவிக்கப் Ãå] ' ám. (த)



பலஸ்தீனக் கிளர்ச்சியாளர்கள் இஸ்ரேலிய எல்லைக்குள் ஊடுருவித் தாக்குதல் நடத்துவதற்கு பயன்படுத்திய சுரங்கப் பாதைகளைத் தாம் கண்டுபிடித்துள்ளதாக இஸ்ரேலியப் படையினர் அறிவித்துள்ளனர். கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்தச் சுரங்கப் பாதைகள் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. (த)

## நோன்பு விதியை மீறி உணவு உண்டோருக்கு சவுக்கடி

தெஹ்ரான்,ஜூலை 29

ஈரானில் ரமழான் மாத நோன்பு விதிகளை மீறி, உணவு உட்கொண்ட 5 பேருக்குத் தண்டனையாகப் பொலிஸார் பொது இடத்தில் சவுக்கடி கொடுத்தனர்.

இதுகுறித்து ஈரானிய செய்தி நிறுவனமான இர்னா வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மேற்கு மாகாணமான கொ்மான் ஷாவில் பொலிஸாரின் எச்சரிக்கையை மீறி பொது இடத்தில் உணவு உட் கொண்ட 5 பேர் கைது செய்யப்பட்டு அந்த மாகாண நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தப்பட்டனர்.

அவர்கள் 5 பேருக்கும் பொது இடத்தில் சவுக்கடி கொடுக்கும்படி மாகாண நீதிமன்ற தலைமை நீதிபதி அலி மொசாஃபாரி உத்தரவிட்டார்.

இதையடுத்து அவர்கள் 5 பேருக்கும் சவுக்கடி தண்டனையை பொலிஸார் நிறைவேற்றினர் - இவ்வாறு இர்னா வெளியிட்டுள்ள செய்தி தெரிவிக்கிறது. (த)

## எகிப்தில் படையினரின் தாக்குதலில் 14 தீவிரவாதிகள் சாவு; 47 பேர் கைது

கெய்ரோ,ஜூலை 29

எகிப்தில் பாதுகாப்புப் படையினர் நடத்திய தாக்குதலில் 14 தீவிரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். 47 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதுகுறித்து, எகிப்து இராணுவ செய்தித் தொடர்பாளர் முகமது சமீர் அப்துல் அஜீஸ் விவரிக்கையில்-

"எகிப்திலுள்ள வடக்கு சினாய் நகரில் தீவிரவாதிகள் பதுங்கியிருந்த பகுதிகளில் வெள்ளிக்கிழமை தாக்குதல் நடத்தப்பட்டது.

"இந்தத் தாக்குதலில் அவர்கள் பதுங்கியிருந்த 36 வீடுகளும், 40 கூடாரங்களும் அழிக்கப்பட்டன.

"மேலும், அவர்கள் பயன்படுத்தி வந்த 5 கார்களும், 12 இரு சக்கர வாகனங்களும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன.

"எகிப்தின் தெற்குப் பகுதியான அல்-வாடி, அல்-கெடிட் பகுதிகளிலுள்ள இராணுவச் சோதனைச் சாவடிகளைக் குறிவைத்து கடந்த வாரம் ரொக்கெட் லாஞ்சர் மூலம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

"இந்தத் தாக்குதலில் எகிப்தின் எல்லைப் பாதுகாப்புப் படையினர் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 4 பேர் காய மடைந்துள்ளனர் "என்று தெரிவித்தார்.

எகிப்தில் ஜனாதிபதியாக இருந்த முகமது மோர்ஸி கடந்த ஆண்டு பதவி நீக்கம் செய்யப்பட்டதிலிருந்து, இராணுவத்தை யும், பொலிஸாரையும் குறி வைத்து முஸ்லிம் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்குப் பதிலடியாக, அவர்களைக் கைது செய்தல், அவர்களின் பதுங்கு மிடங்களை அழித்தல், காஸா பகுதிக் குச் செல்லும் சுரங்கப் பாதைகளை அழித்தல் ஆகிய நடவடிக்கைகளில் எகிப் திய இராணுவம் ஈடுபட்டு வருகின்றது. (த)

## 7 வயது மாணவி சாதனை

தூத்துக்குடி,ஜூலை 29
தூத்துக்குடியில், 7வயது பாடசாலை மாணவி 16 நிமிடங்களில் 369 ஆசனங்கள் செய்து சாதனை படைத்தார். கோவில்பட்டி பாலமுருகன்-கிருஷ்ணவேணி தம்பதியரின் மகள் சக்திபிரபா (வயது-7). இவர், அங்குள்ள தனியார் பாடசாலையில் 3 ஆம் வகுப்பு படித்து வருகிறார். சிறு வயது முதலே யோகா பயின்று வருகிறார்.
மாணவி சக்திபிரபாவின் சாதனை முயற்சி நிகழ்ச்சி, தூத்துக்குடி எஸ்.டி. ஆர்.மெட்ரிக் பாடசாலையில் சுவாமி விவேகானந்தா யோகா ஸ்கேட்டிங் கழகம் சார்பில் செவ்வாய்க் கிழமைநடைபெற்றது. பாடசாலை முதல்வர் டயானா சிவக்குமார் தலைமை வகித்தார். கோவில்பட்டி டெம்பிள் சிட்டி பட்டயத் தலைவர் முருகேசன் முன்னிலை வகித்தார். (த)



முஸ்லிம்களின் நோன்புப் பெருநாள் இன்று கொண்டாடப்படுகிறது. இந்தியாவிலும் நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்கள் பெருமெடுப்பில் இடம்பெறுகின்றன. மும்பாயில் நேற்று நோன்புப் பெருநாள் கொண்டாட்டங்களுக்கான பொருள் கொள்வனவில் முஸ்லிம்கள் ஆர்வத்துடன் ஈடுபட்டனர். (த)

# காஸாவுக்கு பழி தீர்ப்போம்

## இந்தியாவுக்குத் தீவிரவாதிகள் மிரட்டல்

மும்பாய்,ஜூலை 29
மும்பாய் மீது தாக்குதல் நடத்தப் போவதாக தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர். இதைத் தொடர்ந்து அந்த நகரம் முழுவதும் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.
மும்பாய் பொலிஸ் அதிகாரி ராகேஷ் மரியாவுக்கு அண்மையில் ஒரு கடிதம் வந்தது. அதில் பலஸ்தீனத்தின் காஸா தாக்குதலுக்குப் பதிலடியாக மும்பாய் நகரம் மீது தாக்குதல் நடத்தப்போவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கடிதத்தின் இறுதியில் இந்தியன் முஜாகிதீன் என்று குறிப் பிடப்பட்டுள்ளது. இந்தத் தீவிரவாத அமைப்பு பல்வேறு குண்டுவெடிப்பு வழக்குகளில் தொடர்புடையது என்பதால் மும்பாய் முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் அதிகாரி ராகேஷ் மரியா 1993 மும்பாய் தொடர் குண்டு வெடிப்பு வழக்கை விசாரித்து பல்வேறு குற்றவாளிகளுக்குத் தண்டனை பெற்றுக்கொடுத்தவர் ஆவார். அதுமட்டுமன்றி, தாவூத் இப்ராகிமின் கூட்டாளிகள் பலரை வளைத்துப் பிடித்தவர்.
மும்பாயை தாக்கப் போகிறோம், முடிந்தால் தடுத்துப் பாருங்கள் என்று அவருக்கு நேரடியாக சவால் விடுத்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதால் நகரின் அனைத்து பொலிஸ் நிலையங்களும் உஷார்படுத்தப்பட்டுள்ளன. (த)

## மும்பாய் திறனாளிக்கு ஒபாமா விருந்து



வொஷிங்டன்,ஜூலை 29
உலக அளவில் மனநலம் பாதிக்கப்பட்டும் மாற்றுத் திறனாளிகளான சாதனை புரிந்த 12 பேருக்கு அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா விருந்தளித்து கௌரவிக்கவுள்ளார். அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா அலுவலகம் உலக அளவில் அனைத்து விடயங்களையும் கவனித்து வருகிறது.
இதன்படி மனித நேய எண்ணத்துடன் பல்வேறு செயற்பாடுகள், நிதி வழங்குதல் போன்றவற்றை வழக்க மாக ஒரு பணியாகக் கொண்டுள்ளது. இதன் அடிப்படையில் ஊனமுற்ற குழந்தைகளில் சாதனை புரிந்தவர்களைக் கௌரவிக்கும் நிகழ்ச்சி வரும் 31 ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
இந்த நிகழ்ச்சியில் மும்பாய் புறநகர் மாவட்ட பகுதியான கோர்கான் பகுதியைச் சேர்ந்த 23 வயதுப் பெண்ணும் அழைக்கப்பட்டுள்ளார். கோவாவை பூர்வீகமாகக் கொண்ட பிரகாஷ் நாயக், ஆகாஷ் தம்பதியினரின் ஒரே மகளான நேகா தற்போது மும்பாயில் வசித்து வருகிறார். தடகள வீராங்கனையான இவர் சிறப்பு ஒலிம்பிக் சர்வேதச தூதராகவும், மேலும் 100 மீற்றர், ஷொட் புட்டில் நிகழ்ச்சியிலும் பங்கேற்றுள்ளார்.
விருந்தில் பங்கேற்க அமெரிக்கா புறப்பட்டுக் கொண்டிருக்கும்போது தொடர்பு கொண்டு நிருபர்கள் பேசுகையில்,
இந்த விருந்து அழைப்பு என்பது எனக்கு மிக கௌரவமானதாக நான் உணர்கிறேன். எனது இந்தப் பிறந்த நாளில் கிடைத்த அரும் பெரும் பரிசு என்றும் கூறியுள்ளார். (த)

# இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவியுங்கள்

## இராமேஸ்வரம் மீனவர்கள் மீண்டும் கோரிக்கை

இராமேஸ்வரம்,ஜூலை 29
தமிழக மீனவர்கள் இந்தியக் கடல் எல்லையில் உள்ள கச்சதீவுக்கு அருகே மீன் பிடிக்கும் போது இலங்கை கடற்படையினர் வந்து தாக்குதல் நடத்தி சிறைப்பிடிப்பதும், படகுகளைச் சேதப்படுத்துவதும் வாடிக்கையாக நடைபெறுகிறது. இதனைத் தடுத்துநிறுத்த மத்திய- மாநில அரசுகளை வலியுறுத்தி மீனவர் அமைப்புகள் பலமுறை கோரிக்கை விடுத்தபோதும் சிறைப்பிடிப்பு மட் டும் நின்றபாடில்லை.
கடந்த சில நாள்களுக்கு முன்பு இராமேஸ்வரம் மற்றும் புதுக் கோட்டை மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச்சென்று நீதிமன்றில் முன்னிலைப்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர். இந்தச் சம்பவம் மீனவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
இது தொடர்பாக இராமேஸ்வரத்தில் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் கூடி ஆலோசனை நடத்தினர். அப்போது இலங்கைச் சிறையில் உள்ள 43 மீனவர்களை விடுதலை செய்ய வலியுறுத்தியும், இது வரை பிடிக்கப்பட்டு இலங்கை துறைமுகங்களில் நிறுத்தப்பட்டுள்ள 55 விசைப் படகுகளை திரும்ப ஒப்படைக்க கேட்டும் ஆர்ப்பாட்டம் நடத்துவது என கூட்டத்தில் முடிவு செய்யப் பட்டது. ஆர்ப்பாட்டத்துக்குப் பின்னர் விசைப்படகுகளின் ஆர்.சி. புத்தகங்களை இராமநாதபுரம் கலெக்டரிடம் ஒப்படைப்பது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.
அதன்படி நேற்று (திங்கட் கிழமை) இராமநாதபுரம் அரசு போக்குவரத்துக்கழக புறநகர் கிளைப் பணிமனை முன்பு மீனவர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்துக்கு தமிழ்நாடு- பாண்டிச்சேரி விசைப்படகு மீனவர் சங்கங்களின் கூட்டமைப்பு பொதுச் செயலாளர் போஸ் தலைமை தாங்கினார். (த)

# உ.பி. கலவரத்துக்கு மாநில அரசே பொறுப்பு

புதுடில்லி,ஜூலை 29
உத்தர பிரதேச மாநிலம் சஹாரன்பூரில் நடந்த கலவரம் - வன்முறைக்கு மாநில அரசே முழுப்பொறுப்பேற்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சி கூறியது.
பா.ஜ.கவைச் சேர்ந்த ஷாநவாஸ் ஹுசைன் செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை இது தொடர்பாகக் கூறியவை வருமாறு:-
கலவ்ரத்துக்கு மாநில அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும். அரச நிர்வாகம் முற்றிலும் செயலிழந்துவிட்டது. வாக்கு வங்கி அரசியலுக்காக, ஆட்சி யாளர்களே மத ரீதியான பதற்ற நிலை இருப்பதை விரும்புவது போலிருக்கிறது.
பா.ஜ.க. அமைதியையும் நல்லிணக்கத்தையும்விரும்புகிறது. அனைவரும் அவரவர் நம்பிக்கைக்கு ஏற்ப வழிபாடு செய்ய உரிமை உள்ளது. அதில் யாரும் குறுக்கிட முடியாது. அகிலேஷ் யாதவ் தலைமையிலான மாநில அரசு எல்லா தரப்பிலும் பலவீனமடைந்துள்ளது. மாநிலத்தில் அரசு நிர்வாகம் அறவே செயற்படவில்லை என்று ஷாநவாஸ் ஹுசைன் கூறினார்.
மாநில அரசின் நிர்வாகத் திறன் குறைவுதான் சஹாரன் பூர் வன்முறைக்கு காரணம் என்று காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது. இந்த விவகாரத்தில் உள்ளூர் நிர்வாகம் செயற்படத் தவறிவிட்டது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ரீதா பகுகுணா ஜோஷி கூறியுள்ளார். (த)

# உ.பி. கலவரம் தொடர்பாக பிரதமர் அவசர ஆலோசனை

புதுடில்லி,ஜூலை 29
உத்தர பிரதேச மாநிலம், சஹாரன்பூர் மாவட்டத்தில் நிகழ்ந்த கலவரம் தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்குடன் கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசர ஆலோசனை நடத்தினார்.
உத்தரபிரதேச மாநிலம், சஹாரன் பூர் மாவட்டத்தில் நிலத்தகராறைத் தொடர்ந்து இரு பிரிவினரிடையேயும் கடந்த சனிக்கிழமை கலவரம் மூண்டது. இரு பிரிவினரும் கல்வீச்சு, துப்பாக்கிப் பிரயோகம், தீவைப்பில் ஈடுபட்டனர். இதில் மூவர் உயிரிழந்தனர்.
பொலிஸார் உட்பட 20 பேர் காயமடைந்தனர். குண்டு வீச்சில் காயமடைந்த ஒரு பொலிஸாரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.
இந்நிலையில், பிரதமர் மோடியை மத்திய உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் புதுடில்லியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை சந்தித்துப் பேசினார். சுமார் அரை மணி நேரம் நீடித்த இந்தச் சந்திப்பின் போது சஹாரன்பூர் நிலைவரம் குறித்து ஆலோசனை நடத்தினர்.
அப்பகுதியில் அமைதி திரும்புவதற்கு எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து பிரதமரிடம் ராஜ்நாத் சிங் விளக்கினார். மத்திய துணை இராணுவப்படையைச் சேர்ந்த 600 சிப்பாய்கள் உத்தரபிரதேசத்துக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என ராஜ்நாத் கூறினார்.
அங்குள்ள நிலைவரத்தை தானே நேரடியாகக் கண்காணித்துவருவதாக குறிப்பிட்ட அவர், வன்முறையைக் கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்குமாறு அந்த மாநில முதல்வர் அகிலேஷ் யாதவை அறிவுறுத்தியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# தமிழ்க் கூட்டமைப்பை பிளவுபடுத்த அரசு சதி

## அதன் தலைவர் சம்பந்தன் குற்றச்சாட்டு

கொழும்பு.ஜூலை 29
தமிழ்த் தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்துவதற்காக அரசு பலமுயற்சிகளைமேற்கொண்டு வருகிறது என்றும், அந்த முயற்சிகள் ஒருபோதும் வெற்றியளிக்கப் போவதில்லை என்றும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.




இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகிய வற்றின் தலைவராகச் செறய்பட்டு வருகின்ற அவர், தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகி வேறு ஒருவருக்கு வழி விட்டுக் கொடுத்து விட்டு, தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் தலைவராக மட்டும் செயற்படப் போவதாகத் தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட போதே, கூட்டமைப்பை பிளவுபடுத்துவதற்காக அரசு முயற்சிகளை மேற் கொண்டு வருவது பற்றி சம்பந்தன் குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தொடர்ந்து பதவி வகித்துவருகின்ற சம்பந்தன் , தமது வயது காரணமாக அந்தப் பொறுப்பில் இருந்து விலகியி ருக்க விரும்பியிருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்.

தனது இந்த விருப்பமானது, கூட்டமைப்பின் ஒற்றுமையை எந்த வகையிலும் பாதிக்க மாட்டாது. பாதிக்கப் போவதில்லை என்று அவர் உறுதிபட கூறியிருக்கின்றார்.

கூட்டமைப்பின் உறுப்பினர்கள் எவரும் பதவி மோகம் கொண்டவர்களல்லர். அவர்கள் தமிழ் மக்களின் ஈடேற்றத்துக்காக மிகுந்த அர்ப்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றனர். அந்த வகையில் கூட்டமைப்பைப் பிளவுபடுத்த எடுக்கும் முயற்சிகள் பய னற்றதாகவே முடியும் என்றும் அவர் கூறியிருக்கின்றார்.

அது மட்டுமல்லாமல் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவியும், கூட்டமைப்பின் தலைமைப் பதவியும் ஜனநாயக முறைப்படியே முடிவு செய்யப்படும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருக்கின்றார். (ஓ)



பணப்பரிசை வழங்குகிறார் ஜனாதிபதி

## ஜனாதிபதி மஹிந்த தலைமையில் 'ரணவிரு ரியல் ஸ்டார்' போட்டி

கொழும்பு.ஜூலை 29
முப்படையினரின் கலைத் திறமைகளை வெளிக் கொண்டு வரும் முகமாக நான்காவது கட்டமாக நடத்தப்பட்ட ரணவிரு ரியல் ஸ்டார் இசை நிகழ்வின் மாபெரும் இறுதிப் போட்டி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் சுகததாஸ உள்ளக அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது.

பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் நேரடி வழிகாட்டலின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்சிக்கு ரூபவாஹினி கூட்டுத்தாபனம் மற்றும் டய லொக் ஆகியன அனுசரணை வழங்கி இருந்தன.

ரணவிரு ரியல் ஸ்டார் முதல் வெற்றியாளராக இராணுவத்தைச் சேர்ந்த அருணி சில்வா தெரிவானார். இவருக்கு 20 மில்லியன் ரூபா பெறுமதியான ஆடம்பர இல்லத்தின் சாவியை முதற் பெண்மணி ஷிரந்தி ராஜபக்ஷ வழங்கினார்.

இரண்டாம் இடத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட விமானப்படையை சேர்ந்த தயாரத்னாவுக்கு 1 மில்லியன் ரூபா பணப் பரிசுடன் 6.7 மில்லியன் ரூபா பெறுமதியான புத்தம் புதிய ஒரு கார் வழங்கப்பட்டது. (ஓ)

## தாக்குதல் திட்டமிட்ட பாக். அதிகாரி கொழும்புடன் டில்லி விவரம் பகிர்வு

தென்னிந்தியாவிலுள்ள அமெரிக்க - இஸ்ரேல் தூதுரகங்கள் மீது தாக்கு தல்களுக்கு திட்டமிட்ட பாகிஸ்தானிய தூதரக அதிகாரி குறித்த தகவல்களை இலங்கையுடன் இந்தியா பகிர்ந்து கொள்ளவுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் கீழ் இந்தியாவின் தேசிய விசாரணை முகவர்அமைப்புஇந்ததகவல்களை பகிர்ந்து கொள்ளவுள்ளது.

இலங்கையை சேர்ந்த நபர் ஒருவர் புலனாய்வு தகவல்களின் கீழ் கைது செய்யப்பட்ட பின்னர் தெரிய வந்த சதிச் செயல்கள் குறித்த விசாரணைகளை கடந்த மாதம் குறிப்பிட்ட விசாரணை பிரிவு பொறுப்பேற்றது.

சாஹிர் குசைன் என்ற நபரே வேவு நடவடிக்கைகளில் ஈடுபட்ட வேளை கைது செய்யப்பட்டார். எனினும், பாகிஸ்தான் தூதரக அதிகாரிகள் இந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்துள்ளனர். (ஓ)

## வடபகுதிக்கான ரயில் பாதைப் பணி; ஜனவரியில் முற்றுப்பெற்று விடும்

### ரயில்வே திணைக்கள பொது முகாமையாளர் தெரிவிப்பு

கொழும்பு.ஜூலை 29
வடபகுதிக்கான ரயில் பாதையின் வேலைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அந்தப்பணிகள் யாவும் அடுத்த வருடம் ஜனவரி மாதம் முடிவடையும் எனவும் ரயில்வே திணைக்களப் பொது முகாமையாளர் பீ.ஏ.பீ. ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான 36 கிலோ மீற்றர் பாதை இந்தவருடம் செப்ரெம்பர் மாத இறுதியில் புனர் நிர்மாணம் செய்யப்பட்டு முற்றுப்பெறும். அவ்வாறே மடுவிலிருந்து மன்னார் வரையிலான 63 கிலோ மீற்றர் நீளமான பாதை இந்த வருடம் டிசெம்பரில் முடிவடையும்.

அதற்கமைய யாழ்ப்பாணம் வரையிலான பாதையை இந்த வருடம் ஒக்டோபர் மாத முதல் வாரத்திலும், மன்னார் பாதையை ஜனவரி 2015 இலும் திறக்க உத்தேசித்துள்ளோம். இருபது வருடங்க ளுக்குப் பிறகு இந்த ரயில் மார்க்கம் முற்றாகப் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

2010இல் ஆரம்பிக்கப்பட்ட வடபகுதிக்கான ரயில் பாதைகளின் புனரமைப்புப் பணிகள் இலங்கை ரயில்வே திணைக்களத்தினதும் இந்திய ரயில்வே கொன்ஸ்ட்ரக்ஷன் கம்பெனியினதும் (IRCON) கூட்டு முயற்சியில் நிறைவேறி வருகின்றன.

பளையிலிருந்து யாழ்ப்பாணம் வரையிலான புனர மைப்புக்கு 15 கோடி அமெரிக்க டொலர்களும் பளையிலி ருந்து காங்கேசன்துறைக்கும், மடுவில் இருந்து தலைமன் னாருக்கும் இடைப்பட்ட பாதை அபிவிருத்திக்கு 6.3 கோடி அமெரிக்க டொலர்களும் ஒதுக்கப்பட்டுள்ளன.

ரயில் பாதைகளின் வேலைகள் கிட்டத்தட்ட பூர்த்தியாகி விட்டன. சமிக்ஞை விளக்குகள் (சிக்னல் லைட்ஸ்) மற்றும் ரயில் நிலையங்கள் பூரணமாகிக் கொண்டிருக்கின்றன. இரண்டு மார்க் கங்களிலும் உள்ள ஒரு சில பாலங்களின் வேலைகள் மட்டுமே எஞ்சியுள்ளன- என்றார். (ஓ)

## 50 ஆயிரம் மெ.தொன் அரிசி இறக்குமதி செய்ய அங்கீகாரம்

### தட்டுப்பாட்டை தவிர்க்க அவசர ஏற்பாடு

கொழும்பு.ஜூலை 29
நாட்டில் தற்போது நிலவும் வறட்சியினால் அரிசி தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கும் வகையில் மேலதிக கையிருப்புக்காக 50 ஆயிரம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் அரிசி உடனடியாகச் சந்தைப்படுத்தப்படமாட்டாது.

அதனால் விவசாயிகள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த் தக அமைச்சின் பேச்சாளர் நிப்புள் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அரிசி கொள்வனவின்போது விவசாயிகளுக்கு நிர்ணய விலையும் வாடிக்கை யாளர்களுக்காக கட்டுப்பாட்டு விலையும் விதிக்கப்பட்டுள்ள நிலையில், பாதுகாப்பின் நிமித்தம் மேலதிக கையிருப்புக்காக இறக்குமதி செய்யப்படும்.

அரிசி இறக்குமதியினால் விவசாயிகள் எந்தவிதத்திலும் பாதிப்படையப் போவதில்லை யெனவும் அவர் கூறினார். எதிர் பார்த்தளவு மழையின்மை காரணமாக பெரும்போக மற்றும் சிறுபோக பயிர்ச் செய்கைகளில் போதியளவு விளைச்சலின்மையால், சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்படலாமென கூட்டுறவு மற்றும் உள்ளூர் வர்த்தக அமைச்சு அச்சம் தெரிவித்துள்ளது. (ஓ)

# ஊவா மாகாணத் தேர்தல் குறித்து முடிவெடுப்பதில் சிறுபான்மை இனக் கட்சிகள் திரிசங்கு நிலையில்

கொழும்பு.ஜூலை 29
ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கு இன்னமும் ஒரு சில நாள்களே உள்ள நிலையில், சிறுபான்மை இனக் கட்சிகளை பொறுத்த வரை தனித்து அல்லது கூட்டாக போட் டியிடுவது தொடர்பாக இதுவரை அதிகாரபூர்வமான முடிவுக்கு வரவில்லை.

பதுளை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய ஊவா மாகாண சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நாளை புதன் கிழமை தொடக்கம் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் என தேர்தல் செயலகத்தினால் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மாகாண சபைக்கான தேர்தல்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய சிறுபான்மை இன கட்சிகள் குறிப்பாக பதுளை மாவட்டத்தில் தமது வேட்பாளர்களை நிறுத்துவது வழமையாகும்.

இந்த முறையும் இந்தத் தேர்தலில் போட்டியிடுவதற்கு அந்தக் கட்சிகள் தயாராகிவருகின்ற போதிலும் தனித்து அல்லது கூட்டாக போட்டியிடுவது தொடர்பாக எந்தவொரு தீர்மானத்தையும் இதுவரை அறிவிக்கவில்லை.

2009 ஆம் ஆண்டு இந்த மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி- 27, ஐக்கிய தேசியக் கட்சி - 7, மலையக மக்கள் முன்னணி -1, ஜே.வி.பி. - 1 என்ற எண்ணிக்கையில் உறுப்பினர்கள் தெரிவாகியிருந்தார்கள்.

இவர்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையகமக்கள்முன்னணி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சிகள் சார்பாக தலா ஒவ்வொரு தமிழ் உறுப்பினர்களும் தெரிவாகியிருந்தார்கள்.

2009ஆம் ஆண்டு இறுதியாக நடைபெற்ற தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து போட்டியிட்டு ஒரு உறுப்பினரை பெற்றிருந்த இ.தொ.கா. இந்த முறையும் கூட்டாக போட்டியிடுவதையே விரும்புகின்றது.

பதுளை மாவட்டத்தில் மூவரும் மொனராகலை மாவட்டத்தில் ஒருவரும் என தமது கட்சி வேட்பாளர்களுக்கு வேட்பாளர் பட்டியலில் இடமளிக்கப்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இ. தொ. கா உள்ளது.

தமது இந்த எதிர்பார்ப்பு சாத்தியப்படாத பட்சத்தில் தனித்து போட்டியிட வேண்டிய நிலை ஏற்படலாம் இ.தொ.கா.வின் துணைத் தலை வர்களில் ஒருவரான முத்து சிவலிங்கம் கூறுகின்றார்.

பதுளை மாவட்டத்திலிருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் மூன்று அங்கத்துவம் இந்த முறை குறைக்கப்பட்டு மொனராகலை மாவட்டத்தில் மூன்று அங்கத்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த தேர்தலில் பதுளை மாவட்டத்தில் தனித்து போட்டியிட்டு ஒரு உறுப்பினரை பெற்றிருந்த மலையக மக்கள் முன்னணி, இந்த தேர்தலில் தனித்து அல்லது கூட்டாக போட்டியிடுவது தொடர்பாக நாளை புதன் கிழமையே கூடி முடிவுசெய்யும் என அந்தக் கட்சியின் நிதிச் செயலாளரான எஸ். அரவிந்தக்குமார் தெரிவிக்கிறார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அல்லது ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டாக போட்டியிட வேண்டும். அல்லது தனித்து போட்டியிட வேண்டும் ஆகிய யோசனைகள் கட்சியின் அரசியல் பீடத்தில் உறுப்பினர்களினால் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகின்றார்.

பதுளை மாவட்டத்துக்கான உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ள நிலையில், தனித்து போட் டியிடுவதை கூட்டாக போட்டியிடுவதே பொருத்தமானதாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.

2004ஆம் ஆண்டு ஊவா மாகாண சபையில் இரு முஸ்லிம்கள் பிரதிநிதிகளாக இடம்பெற்றிருந்தார்கள். 2009 ஆம் ஆண்டு தேர்தல் முடிவுகளின் படி அவை இழக்கப்பட்டன.

இந்நிலையில் இழக்கப்பட்டுள்ள முஸ்லிம் பிரதிநிதித்துவத்தை இந்த முறை பெற்றுக்கொள்வதற்கு முஸ்லிம் கட்சிகள் கூட்டாக பொதுச் சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு முஸ்லிம்களிடம் பொதுவாக காணப்படுகின்றது.

இதற்கான முயற்சிகளில் தற் போது ஈடுபட்டுள்ள மலையக முஸ்லிம் கவுன்ஸில் பொது சின்னத்தில் போட்டியிடுவது தொடர்பாக ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சியுடன் பேச்சு நடத்தியுள்ளன. (ஓ)



# ஒரே இரவில் சிவப்பு நிறத்தில் மாறிய நதி

சீனாவில் வற்றாமல் ஓடிக்கொண்டிருந்த நதி ஒன்று ஒரே இரவில் சிவப்பு நிறமாக மாறியமை மக்களிடம் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.
சீனாவில் உள்ள வென்சோ (Wenzhou) என்ற நகரில் உள்ள நதியில் எப்பொழுதும் வற்றாமல் தண்ணீர் ஓடிக் கொண்டே இருக்கும். அந்தப் பகுதியினர் குடிப்பது முதல் ஏனைய அனைத்து உபயோகத்துக்கும் இந்த ஆற்றின் தண்ணீரைத்தான் பயன்படுத்தி வந்தனர்.
இந்த நிலையில் இந்த நதியில் ஓடும் தண்ணீர் ஒரு நாள் இரவில் திடீரென சிவப்பு நிறமாக மாறிவிட்டது.
முதல் நாள் இரவு சாதாரண நிறத்தில் இருந்த தண்ணீர் ஒரே ஒரு இரவில் எப்படி நிறம் மாறியது என்று புரியாமல் அந்தப்பகுதி மக்கள் அதிர்ச்சியில் உறைந்துள்ளனர்.
அந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் செய்தியாளர்களிடம் தெரிவித்தபோது, அதிகாலை நான்கு மணியளவில் தண்ணீரின் நிறம் சாதாரணமாகத்தான் இருந்தது என்றும் காலை 6 மணியில் இருந்து சிறிது சிறிதாக நிறம் மாறி சில நிமிடங்களில் ஆற்றின் தண்ணீர் முழுவதும் இரத்த நிறத்துக்கு மாறிவிட்டது என்று தெரிவித்தார்.
இதற்கு முன்பு இது மாதிரியான நிகழ்ச்சி சீனாவில் உள்ள எந்த நதியிலும் ஏற்பட்டது இல்லை என்றும், இது ஏதோவொரு சாத்தானின் சூழ்ச்சி என்றும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.
இதுகுறித்து தகவல் அறிந்த அதிகாரிகள் இந்த ஆற்றின் தண்ணீரை எடுத்து ஆய்வுக்கூடத்தில் சோதனை செய்து வருகின்றனர். இந்த ஆற்றின் கரையில் உள்ள ஏராளமான தொழிற்சாலைகள் அதன் கழிவுகளை இந்த ஆற்றில் கலந்து வருகின்றன என்றும், ஏதோ ஒரு இரசாயன மாற்றமே இந்த நிற மாறுதலுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது.

# நடிகர் விஜய் எந்த மதத்தை சேர்ந்தவர்? உடைந்தது உண்மை



ரசிகர்கள் மனதில் நீங்காது என்றும் இளைய தளபதியாக இருப்பவர் விஜய். இவர் சமீபத்தில்கூட நான் பழசை என்றும் மறக்கமாட்டேன், நான் என்றும் இப்படியே இருக்க விரும்புகிறேன் என்று கூறியிருந்தார். தற்போது அவரைப் பற்றி சுவாரசியமான தகவல் ஒன்று வெளிவந்துள்ளது, இந்தத் தகவலை அவரது தந்தை சந்திரசேகரே பகிர்ந்துள்ளார். இதில் விஜய்யை பாடசாலையில் ஆரம்ப வகுப்பில் சேர்த்தபோது சான்றிதழில் மதம் என்ற இடத்தில் இந்தியன் என்று குறிப்பிட்டேன். தற்போதும் விஜய்யின் பாடசாலைச் சான்றிதழில் அவரது மதம் இந்தியன் என்று தான் இருக்கும் என்று கூறினார்.

# சங்கினுள் கேட்கும் சத்தம் என்ன?



கடற்கரையில் ஒரு சங்கைக் கண்டால் எல்லோரும் அதை எடுத்துக் காதில் வைத்துக் கேட்பார்கள். அப்படி வைக்கும்போது கடல் அலைகளின் சத்தம் போல் ஓர் இரைச்சல் கேட்பதை உணர்ந்து இருப்பீர்கள். ஆனால் உண்மையில் நீங்கள் கேட்கும் அந்த இரைச்சல் கடலில் எழும் ஒலி அல்ல. கடற்கரையில் எடுத்த சங்கை நீங்கள் வீடு எடுத்துச் சென்று அங்கே வைத்து காதில் வைத்தாலும், அதே போன்று கடல் அலையின் இரைச்சலைத்தான் உணர்வீர்கள். எனவே அந்த இரைச்சல் கடல் அலைகளின் சத்தம் இல்லை என்பது தெரிந்து விடும்.
உண்மையில் அந்த இரைச்சலுக்குக் காரணம் வேறு ஒன்றும் இல்லை. எம்மைச் சுற்றியுள்ள மற்றும் எமக்குள் ஒலிக்கும் சத்தங்கள்தான் எமக்கு அவ்வாறு சங்கினுள் இரைச்சல் போன்று கேட்கின்றது. அது எப்படி என்றால், காதால் இலகுவாகக் கேட்க முடியாத எமது சூழலில் உள்ள மிகவும் மெதுவான சத்தங்கள் தூரத்தில் இருந்து வந்து, நாம் கையில் வைத்திருக்கும் சங்கினுள் நுழைந்து, உட்புறம் பல முறைகள் பட்டுத்தெறிப்பதால் அந்த மெதுவான சத்தம் அதிகரிக்கின்றது. அவ்வாறு அதிகரித்து எமது காதினுள் செல்லும் போது, அந்த ஒலி எமக்கு அலைகளின் இரைச்சல் போல் கேட்கின்றது. சங்கின் வடிவம் மற்றும் அளவைப் பொறுத்து இந்த இரைச்சல் வெவ்வேறு விதங்களில் கேட்கின்றது.

# 16 வயதுக் கனேடியப் பெண்ணின் நிதி திரட்டும் நீச்சல் சாதனை



16-வயதுடைய பெண் ஒருவர் 75 கிலோமீற்றர் லேக் ஏரியை நீந்திக் கடந்து நீச்சலில் சாதனை படைத்துள்ளார்.

அன்னலீஸீ கார் என்ற இந்தப்பெண் தமது நீச்சல் பயிற்சியாளர் மற்றும் அதிகாரிகளிடமிருந்து ஆலோசனை பெற்ற பின்னர் தனது நீச்சல் சாதனையை திட்டமிட்டதற்கு சிறிது முன்னராகவே புரிந்துள்ளார்.
தனது நீச்சல் சாதனை மூலம் 130,000 டொலர்களைத் திரட்டியுள்ளார். இந்த நிதி ஒரு குழந்தை பருவ புற்றுநோய் மையத்துக்காகத் திரட்டப்பட்டது.
வோல்ஸ், ஒன்ற் என்ற இடத்தைச் சேர்ந்த இவர் தனது 14 ஆவது வயதில் லேக் ஒன்ராறியோவுக்கு ஊடாக நீந்தி முதலாவது இளம் நீச்சலாளர் என்ற கௌரவம் பெற்றவர்.



# வாயில்லாமல் கனடாவில் பிறந்த குழந்தை

கனடாவில் பிறந்த ஒரு குழந்தைக்கு இதுவரை உலகில் யாருக்கும் ஏற்படாத ஒருபுதுவிதமான குறைபாடு ஏற்பட்டுள்ளது. அந்த குழந்தை சமீபத்தில் தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடியது. ஆனால் அந்த குழந்தையால் வாயைத் திறக்க முடியாது என்பதுதான் கொடுமை. இதுவரை வாய்பேச முடியாத ஊமைக் குழந்தைகள் பிறப்பதைத்தான் நாம் கேள்விப்பட்டிருக்கின்றோம். ஆனால் இந்த குழந்தையால் வாயைத் திறக்கவே முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.
கனடாவின் ஒட்டாவோ பகுதியைச் சேர்ந்த தம்பதியினருக்கு கடந்த 2013ஆம் ஆண்டு ஜூன் மாதம் ஆண் குழந்தையொன்று பிறந்தது. பிறந்த குழந்தையிடம் இருந்து அழுகைச் சத்தமே கேட்கவில்லை என்பதால் தாதி அந்த குழந்தையின் வாயில் விரலை உள்ளே நுழைக்க முயன்றார். அப்போது அந்த தாதி கடும் அதிர்ச்சி அடைந்தார். காரணம் வாய் ஒட்டியே அந்த குழந்தை பிறந்துள்ளது. வாயைத் திறக்கவே முடியாத அந்த குழந்தையை அனைவரும் அதிசயமாக பார்த்தனர்.

# தூக்கத்தைக் கண்காணிக்க புதிய சாதனம் உருவாக்கம்

தொழில்நுட்ப வளர்ச்சி, உடல் ஆரோக்கியத்தில் அளப்பரிய பங்கு வகிப்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.
இவற்றின் வரிசையில் ஸ்மார்ட் கைபேசிகளின் வருகையின் பின்னர் உடல் ஆரோக்கியத்தைக் கண்காணிக்க பல்வேறு அப்பிளிக்கேஷன்கள், கருவிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.
தற்போது ஒருவரின் தூக்கத்தைக் கண்காணிக்கக்கூடிய சென்ஸ் என்ற புதிய கருவியொன்று உருவாக்கப் பட்டுள்ளது.
ஸ்மார்ட் கைபேசிகளுடன் இணைத்துப் பயன்படுத்தக் கூடிய இந்த கருவி, ஒருவருடைய தூக்க மாதிரி, தூங்கும் சூழல் என்பவற்றைத் துல்லியமாக அறிந்து நிம்மதியான தூக்கத்துக்கு வழி வகுக்கின்றது.




அதாவது தூங்கும் சூழலிலுள்ள சத்தங்கள், வெளிச்சம், வெப்பநிலை, காற்றிலுள்ள ஈரப்பதம், துணிக்கைகள் என்பவற்றை அறிந்து கொள்கின்றது.
இந்த அளவீடுகளில் இருந்து குறித்த இடம் நிம்மதியாக தூங்குவதற்கு வசதியானதா என அறிந்து கொள்ள முடியும்.

# சி.பி.எல். விருதுகள் வழங்கும் நிகழ்வு





இலங்கையின் முன்னணி உள்நாட்டு உணவு மற்றும் இனிப்பு உற்பத்திகளைத் தயாரிக்கும் சிலோன் பிஸ்கட்ஸ் லிமிடெட் (சி.பி.எல்.) நிறுவனமானது, அண்மையில் அதன் 2013/14 வருடாந்த விநியோகஸ்தர் மாநாடு மற்றும் விற்பனை நட்சத்திர விருதுகள் வழங்கும் நிகழ்வை முன்னெடுத்திருந்தது.

இந்த வருடாந்த நிகழ்வின் குறிக்கோள், கடந்த நிதியாண்டில் நிறுவனத்தின் முன்னேற்றத்துக்கு பங்களிப்பு வழங்கிய கள விற்பனைப் படையினர் மற்றும் விநியோகஸ்தர்களை மதிப்பிடல் மற்றும் கௌரவித்தல் ஆகும். அத்துடன் கடந்த பல தசாப்தங்களாக சி.பி.எல். உற்பத்திகளை விநியோகிக்கும் தனிநபர்களையும் பாராட்டி அங்கீகரித்தல் ஆக இந்த நிகழ்வு அமைந்திருந்தது.

இந்த நிகழ்வில் போது சி.பி.எல். நிறுவனம், குழுமத்தின் தற்போதைய வலுவான நிதி நிலைமையை உறுதி செய்து கவர்ச்சிகரமான விற்பனை இலக்குகளை எய்திய அதன் சாதனையை அறிவித்தது. இந்த வளர்ச்சியானது தொழிலாளர்கள் மற்றும் நட்சத்திர விற்பனை செயற்பாட்டாளர்களின் சாதனை மற்றும் பங்களிப்புக் காரணமாகவே சாத்தியமானது என நிறுவனம் குறிப்பிட்டது.

சி.பி.எல்லின் தலைவர் மினேக விக்ரமசிங்கவின் தலைமையின் கீழ் இடம்பெற்ற வர்ணமயமான 2013/14 வருடாந்த விநியோகஸ்தர் மாநாடு மற்றும் நட்சத்திர விருதுகள் வழங்கும் நிகழ்வில் பணிப்பாளர் சபை, கள விற்பனை அதிகாரிகள், நாட்டின் பல்வேறு பிரதேசங்களைச் சேர்ந்த விநியோகஸ்தர்கள், சி.பி.எல். சிரேஷ்ட முகாமையாளர்கள் மற்றும் விற்பனைப் பங்காளர்கள் எனப் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்த மாநாட்டில் கடந்த நிதியாண்டில் கணிசமான வளர்ச்சியைக் காட்டிய சி.பி.எல்லின் வெற்றிகரமான வர்த்தகநாமங்களான மஞ்சி, லங்காசோய், சமபோஷ, டியாரா மற்றும் ரிட்ஸ்பரி போன்றவற்றின் உற்பத்தி விளக்கக்காட்சிகள் காட்சிப்படுத்தப்பட்டன. எதிர்வரும் நிதியாண்டில் சி.பி.எல். ஆனது, கிரக்கர்ஸ், மாரி மற்றும் லெமன் பப் ஆகியவற்றின் வலுவான சந்தைத் தலைமை ஊடாக இலங்கையின் பிஸ்கட் துறையில் மறுக்கமுடியாததலைமைத்துவஸ்தானத்தைத்தொடர்ந்து பேணவுள்ளது. உற்பத்தி வரிசையில் வாடிக்கையாளரால் மிக விரும்பப்படும் தயாரிப்பாக மஞ்சி உள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வில் குழுமத்துக்குப் பங்களிப்பு வழங்கிய நாடு முழுவதும் உள்ள நீண்டகால விநியோகஸ்தர்கள் கௌரவிக்கப்பட்டமை விசேட அம்சமாக அமைந்திருந்தது. 2013/14 நிதியாண்டில் விற்பனை இலக்குகளை அடைவதில் சி.பி.எல்லின் வெற்றிக்கு கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட விற்பனைப் படையினரின் அளப்பரிய பங்களிப்பும் கௌரவிக்கப்பட்டது. (த)

# நோன்புப் பெருநாள் தினத்தன்று கொமர்ஷல் வங்கியின் சேவை

நோன்புப் பெருநாள் தினமான இன்று செவ்வாய்க்கிழமை வாடிக்கையாளர்களின் நலன் கருதி கொமர்ஷல் வங்கியின் 65 கிளைகள் வங்கி நடவடிக்கைகளுக்காகத் திறந்திருக்கும்.

இன்றைய தினம் வங்கி விடுமுறை தினமாகும். வங்கியின் 28 சுப்பர்மார்க்கெட் வங்கி நிலையங்கள், வருடம் 365 நாளும் திறந்திருக்கும் 20 கிளைகள், என்பன அன்றைய தினம் தமது வழமை யான கடமைகளில் ஈடு படும்.

மேலும் 17 கிளைகள் இன்றையதினம் காலை 9 மணி முதல் ஒரு மணிவரை திறந்திருக்கும் என வங்கி அறிவித்துள்ளது.

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, கொட்டாஞ்சேனை, மகரகம, பொரளை, நுகேகொடை, நாரஹேன்பிட்டி, பத்தரமுல்லை, பஞ்சிகாவத்தை, யூனியன் பிளேஸ், வத்தளை, தெஹிவளை, கிரிபத்கொடை, அவிஸ்ஸாவலை, பிலியந்தலை, வெளிநாட்டுக் கிளை, பிரதான வீதி (கொழும்பு-1) என்பனவே இன்றையதினம் திறந்திருக்கும் கிளைகளாகும். (த)

# இலங்கைச் சந்தையில் சினெய்டர் எலெக்ரிக்




இலங்கையின் இல்லங்கள் மற்றும் சிறிய மற்றும்நடுத்தர வியாபாரங்களுக்குப்பொருத்தமான சுவிட்ச்கள், சொக்கட்கள் மற்றும் விநியோக கட்டமைப்புகளை சினெய்டர் எலெக்ரிக் ஸ்ரீலங்கா அறிமுகம் செய்துள்ளது.

இந்த அறிமுக நிகழ்வு கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றதுடன், இதன் போது சுவிட்ச் வகைகள் மற்றும் விநியோக கட்டமைப்புகளும் அறிமுகம் செய்யப்பட்டிருந்தன.

இலங்கையின் இல்லங்கள் மற்றும் சிறிய மற்றும் நடுத்தர வியாபாரங்களை உள்ளடக்கி சில்லறை விற்பனைத் துறையில் சினெய்டர் எலெக்ரிக் பிரவேசிக்கும் [illegible] இது என்பதுடன், இலங் [illegible] தேசிய விற்பனை வலையமைப்பை விஸ்தரிக்கும் நடவடிக்கைகளையும் அது மேற்கொண்டுள்ளது.

2014 ஆம் ஆண்டின் இறுதியில் இந்த நடவடிக்கைகள் பூர்த்தியடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. 3000 சில்லறை விற்பனைப் பகுதிகளை ஆண்டின் இறுதியில் நிறுவ சினெய்டர் எலெக்ரிக் திட்டமிட்டுள்ளது.

சகல பிரிவுகளையும் சேர்ந்த பொருள்கள் சினெய்டர் எலெக்ரிக் வர்த்தக நாமத்தின் கீழ் வழங்கப்படும். இந்த அறிமுக நிகழ்வு தொடர்பில் இலங்கை, மாலைதீவுகள் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கான பணிப்பாளர் பிரதீப் சைகியா கருத்துத் தெரிவிக்கையில்,

சினெய்டர் எலெக்ரிக்கை சேர்ந்த நாம், எமது வர்த்தக நாமத்தின் பெறுமதிகள் நுகர்வோரைச் சென்றடையச் செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கிறோம். இதன் மூலம் உயர் தரம், உறுதித்தன்மை, பாதுகாப்பு மற்றும் சிக்கனத்தன்மை போன்றன உறுதி செய்யப்படுகின்றன-என்றார். (த)

# கொகா-கோலா, மக்டொனால்ட்ஸ் அறிமுகப்படுத்தியுள்ள சின்னம்

கொகா-கோலா மற்றும் மக்டொனால்ட்ஸ் ஆகியன ஒன்றிணைந்து உலகக் கிண்ண ஞாபகார்த்த சின்னம் ஒன்றை வெளியிட்டுள்ளன.

பிரேஸிலில் நடைபெற்ற உலகக்கிண்ணத்தின் பரபரப்பை இலங்கையில் கொண்டு வரும் நோக்கில், இவ்விரண்டு பங்காளர்களும் ஆறு வித்தியாசமான நிறங்களிலுள்ள ஆறு தொகுதிக் கண்ணாடிக் கோப்பைகளை அறிமுகப்படுத்தியுள்ளன.

இந்தக் கோப்பைகளை நாடளாவிய ரீதியிலுள்ள எந்தவொரு மக்டொனால்ட்ஸ் உணவகத்திலும் பெற்றுக்கொள்ளலாம். கொகா- கோலா மற்றும் மக்டொனால்ட்ஸ் ஆகியன உலகளாவிய பங்குடைமையாளர்களாக விளங்குவதுடன், சர்வதேச ரீதியிலுள்ளஉதைபந்தாட்ட ரசிகர்களின் மனதைக்கொள்ளைகொண்ட உலகக் கிண்ணத்துடன் நீண்டகால ஒருங்கிணைவையும் கொண்டுள்ளன.

மக்டொனால்ட்ஸ் லார்ஜ் எக்ஸ்ட்ரா வேல்யூ மீல் கொம்போ உலகக் கிண்ணம் ஒன்றை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர்கள் அனைவரும் விசேட உலகக் கிண்ண ம் மற்றும் கொகா-கோலா வர்த்தக நாமமிடப்பட்ட ஞாபகார்த்த கண்ணாடிக் குவளை ஒன்றை பெற்றுக்கொள்வார்கள்.



கொகா-கோலா மற்றும் மக்டொனால்ட்ஸ் ஆகியவற்றுடன் உலகக்கிண்ண உதைபந்தாட்ட போட்டித் தொடரின் மகிழ்ச்சி கரமான தருணங்களை பகிர்ந்துகொள்வதை ஊக்குவிக்கும் வகையிலும், அனைத்து உதைபந்தாட்ட ரசிகர்களுக்கும் இந்த ஞாபகார்த்தச் சின்னம் கிடைக்கும் வகையிலும் ராஜகிரிய, கொள்ளுப்பிட்டி, ரேஸ்கோர்ஸ், நுகேகொடை, கொட்டாஞ்சேனை, வெலிசறை ஆகிய இடங்களிலுள்ள மக்டொனால்ட்ஸ் உணவகங்களில் கொகா-கோலா இந்த நுகர்வோர் ஊக்குவிப்பை முன்னெடுக்கின்றது. (த)

# பிரபல பார்சிலோனா கழகத்துக்கு அனுசரணை வழங்கும் பிக்கோ

உலகப்புகழ் பெற்ற ஸ்பெயின் உதைப்பந்தாட்டக் கழகமான பார்சலோனா மற்றும் பிக்கோ ஆகியன புதிய உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

இதன் மூலம் ஐரோப்பாவின் முன்னணி வீட்டுச் சாதனங்களை உற்பத்தி செய்து விநியோகிக்கும் நிறுவனம்,முன்னணிஉதைப்பந்தாட்டக் கழகத்தின் உத்தியோகபூர்வ அனுசரணையாளராக எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குச் செயற்பட முன்வந்துள்ளது. இந்த உடன்படிக்கைக்கு அமைவாக கழக வீரர்களின் மேற்சட்டையின் கைப்பகுதியில் பிக்கோ இலச்சினை பொறிக்கப்பட்டிருக்கும். ஸ்பானிஷ் லீக் மற்றும் கப் போட்டிகள் 2014/15 பருவ காலத்தின் சகல போட்டிகளின் போதும் வசந்த காலச் சுற்றுப் போட்டிகளின் போதும், இந்த மேற்சட்டையை அணிந்து அணி வீரர்கள் விளையாடவுள்ளனர்.

பார்சிலோனா உதைப்பந்தாட்ட அணி என்பது உலகின் முன்னணிக் கழகங்களில் ஒன்றாகும். உலகப்புகழ் பெற்ற வீரர்களான ஆர்ஜென்ரீனாவின் லயனல் மெஸ்சி மற்றும் பிரேசில் நாட்டின் நெய்மர் ஆகியோரை இந்த அணி தன்னகத்தே கொண்டுள்ளது. கழகம் தற்போது உலகின் மிகவும் பெறுமதி வாய்ந்த கழகங்களில் ஒன்றாக தரப்படுத்தப்பட்டுள்ளது. பிக்கோ என்பது பிரித்தானியாவின் முதல் தர வீட்டுப்பாவனை சாதனங்களை உற்பத்தி செய்யும் நாமமாகும்.

இந்த உடன்படிக்கை குறித்து சிங்கர் ஸ்ரீலங்காவின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி அசோக பீரிஸ் கருத்து தெரிவிக்கையில், பிரித்தானியாவின் முதல் தர வர்த்தக நாமமாகத் திகழ்வதுடன், ஐரோப்பாவின் முன்னணி வர்த்தக நாமங்களில் ஒன்றாகத் திகழும் பிக்கோ, உலகின் முதல் தர உதைப்பந்தாட்ட கழகமான பார்சலோனா கழகத்துடன் இணைந்துள்ளமையானது பல ஆயிரக் கணக்கான ரசிகர்களுக்கு மகிழ்ச்சியூட்டும் விடயமாகும். இலங்கை நுகர்வோரின் தேவைகளை நன்கு அறிந்து செயற்படும் சிங்கர் உயர் தரம் வாய்ந்த ஐரோப்பிய வர்த்தக நாமங்களை விநியோகித்து வருகிறது. இதன் காரணமாக, பிக்கோ உடன் இணைந்து நுகர்வோருக்கு நட்பான இலகுவான பொருள்களை உள்நாட்டு சந்தையில் அறிமுகம் செய்துள்ளோம் என்றார். (த)



# வவுனியா வளாகத்தின் வணிகபீட மாணவர்களுக்கு இடையே மோதல்

## நான்கு பேர் காயங்களுடன் மருத்துவமனையில்

வவுனியா, ஜூலை 29

வவுனியா பம்பைமடுப் பகுதியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக்கழக வளாக வணிகபீட மாணவர்களிடையே ஏற்பட்ட கைகலப்பில் நான்கு மாணவர்கள் காயமடைந்த நிலையில் வவுனியா பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றது.

வணிக பீடத்தைச் சேர்ந்த இரண்டாம் வருட மாணவர்களுக்கும் மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையே கருத்துமோதல் ஏற்பட்டதால் மூன்றாம் வருட மாணவர்கள் இரண்டாம் வருட மாணவர்களைத் தாக்கியதில் நான்கு மாணவர்கள் காயமடைந்தனர். இதில் ஒரு மாணவியும் அடங்குகிறார்.



பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ள பொலிஸார்.

**மூன்றாம் வருட மாணவர்கள் இரண்டாம் வருட மாணவர்களைத் தாக்கியதில் நான்கு மாணவர்கள் காயமடைந்தனர்.**

இது தொடர்பாக உடனடியாகப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டது. தாக்குதல் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை கல்விச் செயற்பாடுகள் அங்கு தடைப்பட்டிருந்தன. மேலும் பதற்றமானதொரு சூழ்நிலை அங்கு காணப்பட்டது. நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு பம்பை மடுப் பகுதியில் உள்ள வணிக பீட நிர்வாகத்தினர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (க-402)

## அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டன நிலக்கடலைச் செய்கைகள்



கிளிநொச்சி, ஜூலை 29

வன்னேரிக்குளத்திலிருந்து நீர்விநியோகம் இடம்பெற்றதால் திக்காய் குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலக்கடலைச் செய்கை பாதுகாக்கப்பட்டுள்ளது.

வன்னேரிக்குளத்திலுள்ள திக்காய் குளத்தில் நீர் முற்றாக வற்றியதால் அந்தக் குளத்தை நம்பி 7 ஏக்கரில் செய்கை பண்ணப்பட்ட நிலக் கடலைப் பயிர்கள் அழிவடையும் நிலைக்குச் சென்றன. இந்த நிலையில் மூன்று கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வன்னேரிக்குளத்தில் இருந்து வாய்க்கால் மூலமாகத்திக்காய்க் குளத்தில் நீர் நிரப்பப்பட்டது.

தற்போது நிலக்கடலைப் பயிர்களுக்கு திக்காய்க்குளத்திலிருந்து நீர் விநியோகம் இடம்பெற்று வருகின்றது. வன்னேரிக்குளத்திலும் நீர்பற்றாக் குறையாகக் காணப்படுவதால் இந்த முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (க-18)

## கண்டாவளைப் பிரதேசத்தில் பசளை ஊக்குவிப்புத் திட்டம்


கிளிநொச்சி, ஜூலை 29

கிளிநொச்சியிலுள்ள கண்டாவளைப் பிரதேசத்தில் மத்திய விவசாய அமைச்சின் நிதியுதவியுடனான சேதனப் பசளை உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டத்தில் 725 விவசாயிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயச் செய்கைகளில் இரசாயன உரங்களின் பாவனை அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனைக் கட்டுப்படுத்தி சேதனப் பசளைப் பாவனையை ஊக்குவிக்கும் வகையில் மத்திய விவசாய அமைச்சின் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள முரசுமோட்டை , புன்னை நீராவி, புளியம்பொக்கணை ஆகிய பகுதிகளில் 725 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

குறித்த சேதனப் பசளை உற்பத்தி தொடர்பான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வருவதாகவும், சேதனப் பசளை உற்பத்திக்குரிய பொலித்தீன் மற்றும் பொஸ்பேற் என்பனவும் வழங்கப்படவுள்ளதாகவும் கிளி நொச்சி மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் அ.செல்வராசா தெரிவித்துள்ளார். (க -55)



மன்னார் வங்காலைக் கிராமத்தின் பாதுகாவல் தெய்வமான புனித ஆனாள் அன்னையின் வருடாந்தத் திருவிழாவின் போது அன்னை திருப்பவனி வருகிறார். (க)

## தெருவிளக்குகளுக்கு மக்கள் கோரிக்கை

புதுக்குடியிருப்பு ஜூலை 29

புதுக்குடியிருப்பு நகரத்தில் தெருவிளக்குகளைப் பொருத்துமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் பெரும் அழிவைக் கண்ட புதுக்குடியி ருப்பு நகரத்தில் தற்போது மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் இங்கு இயல்பு நிலை திரும்பி வந்து கொண்டிருக்கின்றது. இந்த நிலையில் தெருவிளக்குகள் பொருத்தப்படாமையால் இங்குள்ள வீதிகள் இரவில் இருளில் மூழ்கிக்கிடக்கும் நிலை காணப்படுகிறது.



கோப்புப்படம்

இங்கு அவற்றைப் பொருத்துமாறு பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை - புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள மீளக் குடியமர்ந்த மக்கள் மின்சா ரத்தைப் பெறுவதில் இடர்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (க-18)

## முத்துஐயன்கட்டின் புனரமைப்புக்கு நிதி

முல்லைத்தீவு, ஜூலை 29

முல்லைத்தீவு முத்துஐயன் கட்டு குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு 600 மில்லியன் ரூபா நிதி கிடைத்துள்ளதாக முத்துஐயன்கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நீண்ட காலமாகப் புனரமைப்புப் பணிகள் எதுவும் இடம் பெறாததால் குளக்கட்டு மற்றும் நீர்ப்பாசன வாய்க்கால்கள் சேதமடைந்த நிலையில் காணப்படும் முத்து ஐயன் கட்டு குளத்தைப் புனரமைப்பதற்கு 950 மில்லியன் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி தேவை யென மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்கு மத்திய அரசின் அணைக் கட்டுக்கள் பாதுகாப்பு நிதியத்தினால் 600 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக முத்துஐயன் கட்டு நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (க-55)

# வவுனியா சர்வோதய நிறுவனத்தினால் சிறுவர் கழகங்கள் உருவாக்கம்

வவுனியா, ஜூலை 29

வவுனியா சர்வோதய நிறுவனத்தினால் சிறுவர் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில் சிறுவர்களின் இயல்பு நிலையைக் கட்டியெழுப்பும் நோக்குடன் சர்வோதய நிறுவனத்தின் சிறுவர் கழகங்களின் உருவாக்கம் தொடர்பான செயற்பாடுகள் தெரிவு செய்யப்பட்ட கிராமங்களில் நடை முறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

பிள்ளைகளுக்குப் பாதுகாப்பான கற்றல் நிலையமும் பிள்ளைகளின் பாதுகாப்புக்காக சமூகத்தினரை ஈடுபடுத்தலும் என்ற செயற்றிட்டத்தின் கீழ் கற்றல் இடர்பாடுகளுடன் காணப்படும் சிறுவர்களை வளப்படுத்தும் நோக்குடன் வவுனியா மாவட்டத்தில் கள்ளிக்குளம், கருப்பனிச்சன்குளம், மகாறம்பைக் குளம், ஸ்ரீராமபுரம், மதுரா நகர் ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டன.



பயிற்சி இணைப்பாளர் கோ. ரூபகாந்த், திட்ட இணைப்பாளர் எஸ்.நந்தினி, மாகாண இணைப்பாளர் எஸ்.சுகந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இந்தக் கிராமங்களில் சிறுவர்களுக்கான ஆக்கத்திறன் செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுவருகின்றது. அதன் ஒரு கட்டமாக சிறுவர் கழகங்களை உருவாக்கல், மற்றும் சிறுவர்களின் தலைமைத்துவப் பண்பை மேம்படுத்தல் போன்ற செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன் அடிப்படையில் கடந்த 25 ஆம் திகதி ஸ்ரீராமபுரம் கிராமத்தில் சிறுவர் கழக உரு வாக்கல் செயற்பாடு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு வளவாளராக சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் திரு. கெனடி கலந்து கொண்டு சிறுவர் உரிமைகள் மற்றும் பாதுகாப்புத் தொடர்பான தெளிவூட்டல் வளப்பகிர்வை வழங்கினார்.

அத்துடன் சிறுவர்கள் தம்மை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்ற விளக்கங்களை இந்தத் திட்டத்தின் மாகாண இணைப்பாளர் எஸ். சுவேந்தன் வழங்கியிருந்தார்.

தொடர்ந்து குறித்த திட்டத்தின் பயிற்சி இணைப்பாளர், கோ.ரூபகாந், திட்ட இணைப்பாளர் எஸ். நந்தினி ஆகியோர் இணைந்து சிறுவர்கழகத்துக்கான நிர்வாகத்தைத் தெரிவு செய்ததுடன் சிறுவர் கழக செயற்பாடுகளையும் ஆரம்பித்து வைத்தனர்.

இந்தச் செயற்பாடுகளுக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு இன்றியமையாது என சர்வோதய நிலையத்தின் மாவட்ட இணைப்பாளர் எஸ். உதயகுமாரன் தெரிவித்தார். (க-421)

## கீரிமலைக்குப் படையெடுத்து வந்த யாசகர்கள் கூட்டம்



தர்மம் வேண்டி காத்திருக்கும் யாசகர்கள்.

தெல்லிப்பழை, ஜூலை 29

ஆடி அமாவாசை தினத்தன்று யாசகர்கள் பெருமளவில் கீரிமலைக்குப் படையெடுத்து வந்திருந்தனர்.

குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் நூற்றுக்கணக்கான யாசகர்கள் பிச்சை பெறுவதற்காக அங்கு திரண்டிருந்தனர்.

அவர்கள் கேணியடி பிள்ளையார் கோயிலடியில் ஒழுங்கு முறையாக- வரிசையாக அமர்ந்து தர்மம் கேட்டுப் பெற்றனர்.

கீரிமலைக்கு பிதிர்க்கடன் செய்ய வந்திருந்தவர்கள் பலரும் அவர்களுக்கு தர்மம் வழங்கினர். (ஒ-17)

# கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கும் அபாய நிலைமை

## சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியை அண்மித்த பகுதியில்

வலி. வடக்கு, ஜூலை 29

சுன்னாகம் மின்சார நிலையப் பகுதியை அண்மித்துள்ள பிரதேசங்களின் கிணறுகளில் மீண்டும் கழிவு ஒயில் கலக்கும் அபாய நிலைமை காணப்படுவதாக அந்தப் பகுதியில் வாழும் மக்கள் பெரும் கவலை தெரிவிக்கின்றனர்.


கடந்த காலத்தில் மின்சார சபையின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு கழிவு ஒயில் அகற்றுவதில் சீரான நடைமுறைகள் பின்பற்றப்படாமையால் மின்சார நிலையத்தைச் சுற்றியுள்ள கிணறுகளில் கழிவு ஒயில் கலக்கும் அபாயம் எதிர்நோக்கப்பட்டது.

இது தொடர்பாக மக்கள் மத்தியில் ஏற்பட்ட குழப்பத்தைத் தொடர்ந்து நிலத்தின் கீழ் கழிவு ஒயில் செலுத்தப்பட்ட நிலையில் தற்போது இந்த முறையால் மின்சார நிலையத்தின் சுற்றாடல் தவிர்ந்து சுமார் ஒரு கிலோ மீற்றருக்கு அப்பாற்பட்ட பிரதேசத்திலும் இத்தகைய நிலைமை காணப் படுவதாக அந்தப் பகுதிகளில் வாழும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது குறிப்பிட்ட கழிவு ஒயில் தொட்டியில் தேங்க விடப்பட்டு வேறு இடத்துக்கு வாகனத்தில் எடுத்துச் செல்லப்பட்டு அகற்றப்படுவதாக மின்சார சபை ஊழியர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த நடைமுறை கைக்கொள்ளப்படுவதாக பிரதேச சபை வட்டாரங்களும் உறுதிப்படுத்தியுள்ளன. எனினும் கடந்த காலத்தில் நிலத்தின் கீழ் அகற்றப்பட்ட கழிவு ஒயிலின் தாக்கம் சுண்ணக்கற் பிரதேசம் என்ற வகையில் தரைக் கீழ் சென்று இத்தகைய பரவு நிலைமையை அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். குடாநாட்டுக்கான மின்சார விநியோகத்தில் லக்ஷபான மின்சாரம் தற்போது அதிகளவில் வழங்கப்படுவதால் இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரப் பயன்பாடு குறைந்துள்ளமை கழிவு ஒயிலின் தாக்கத்தையும் இயந்திரங்களின் சத்தத்தையும் அந்தப் பகுதியில் குறைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (வ-86)



சுற்றுலாப் பயணிகளின் பொழுதுபோக்கு மையமாக மாற்றப்பட்டு வருகிறது பண்ணைக் கடற்கரைப் பகுதி. அங்கு இறங்குதுறை வசதியும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. சுற்றுலா வருபவர்களின் படகுச் சவாரி போன்ற பொழுது போக்குக்காக இந்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. (ஒ-17)

## பிரதேச சபை ஊழியர்களுக்கு இந்த மாத கொடுப்பனவில்லை

### பச்சிலைப்பள்ளி சபைச் செயலாளர் இல்லாததால்

பளை, ஜூலை 29

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையின் பணியாளர்களுக்கு இந்த மாதத்துக்குரிய (ஜூலை) கொடுப்பனவு வழங்கப்படவில்லை. பிரதேச சபைச் செயலாளர் இல்லாத காரணத்தாலேயே இந்தக் கொடுப்பனவு பெறமுடியவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

பிரதேச சபைச் செயலாளராக கடமையாற்றிய இ.சிவப்பிரகாசம் ஓய்வு பெற்றுச் சென்றதை அடுத்து வெற்றிடமாகக் காணப்பட்ட குறித்த பதவிக்கு செ.ரமேஸ் என்பவர் கடந்த 10 ஆம் திகதி நியமிக்கப்பட்டு கடமையேற்றுள்ளார். இந்த நிலையில் கடந்த 24 ஆம் திகதி அவருக்கு வழங்கப்பட்ட செயலாளர் பதவிக்கான நியமனம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக மின்னஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்பட்டதை அடுத்து மீண்டும் செயலாளர் பதவி வெற்றிடமானது. இதனால் ஜூலை மாதத்துக்குரிய கொடுப்பனவுக்கான காசோலையில் கையொப்பமிட செயலாளர் இல்லாததால் கொடுப்பனவைப் பெற முடியவில்லை என்று ஊழியர்களால் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

## சனியன்று கைதான அறுவருக்கும் பல்வேறு திருட்டுகளுடன் தொடர்பாம்

வலி. வடக்கு, ஜூலை 29

யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் வழிகாட்டலின் கீழ் அமைக்கப்பட்ட விசேட குற்றவியல் பொலிஸ் குழுவினரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட ஆறு பேரும் பல்வேறு திருட்டுக்கள், கொள்ளைகளுடன் தொடர்புடையவர்கள் என்பது விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

குறிப்பாக ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற 17 லட்சம் ரூபா களவு, இரண்டு லட்சம் ரூபா நகைக்கொள்ளை, அச்சுவேலிப் பகுதியில் இடம்பெற்ற சுமார் ஆறு லட்சம் ரூபா நகைக் கொள்ளை, 80 ஆயிரத்து ஐந்நூறு ரூபா களவு, ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா திருட்டு, 2 லட்சத்து 78 ஆயிரம் ரூபா களவு, கோப்பாயில் இடம் பெற்ற 50 ஆயிரம் ரூபா களவு, ஒரு லட்சம் ரூபா நகைக்களவு, சுன்னாகத்தில் இடம் பெற்ற 18 ஆயிரம் ரூபா களவு, வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவில் இடம் பெற்ற ஆலயக் களவு எனப் பல களவுகளுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர்களால் களவாடப்பட்ட மற்றும் கொள்ளையிடப்பட்ட பொருள்களை மீட்கும் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகள் தொடர்வதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (வ-86)

## வரணி மத்திய கல்லூரியின் கட்டடத் தொகுதிகள் திறப்பு



திறக்கப்பட்ட 3 மாடிக் கட்டடத் தொகுதியும் கலந்து கொண்ட மாணவர்களும்.

தென்மராட்சி, ஜூலை 29

வரணி மத்திய கல்லூரியில் பல மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட அதிபர் அலுவலகம், ஆசிரியர் ஓய்வு அறை, விஞ்ஞான தொழில்நுட்ப ஆய்வுகூடங்கள், நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கிய மூன்று மாடிக் கட்டடத் தொகுதிகள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டன.

கல்லூரி அதிபர் க.மங்களேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மத்திய கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன, வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார், வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், கல்விப் பணிப்பாளர் ஆ.இராஜேந்திரன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் ஆகியோர் கட்டடங்களைத் திறந்து வைத்தனர்.

பின்னர் நடைபெற்ற கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார், ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் மற்றும் கல்வித் திணைக்கள உயர் அதிகாரிகள், தென்மராட்சி கல்வி வலய உத்தியோகத்தர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், வரணிப் பிரதேச மக்கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (வ - 9 - 131)

# கிளாலியில் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துங்கள்

## பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரைக் கோருகின்றன பொது அமைப்புக்கள்

கிளாலியில் வசிக்கும் மக்களது எதிர்காலத் தேவையைக் கருத்திற்கொண்டும், நிலம், நீர் போன்ற வளங்கள் மாசடைவதைத் தடுக்கும் நோக்குடனும், கிராம உத்தியோகத்தர்கள், பிரதேச செயலர் ஆகியோரின் அனுமதியுடன் தினசரி இடம்பெற்று வரும் மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவதற் குரிய ஆக்க பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு கிளாலியிலுள்ள பொது அமைப்புக்கள்கூட்டாகஇணைந்து பச்சிலைப்பள்ளி பிரதேச செயலரைக் கோரியுள்ளனர்.

கிளாலிப் பகுதியில் பல நாள்களாகத் தொடர்ந்து இடம்பெற்று வரும் மண் அகழ்வு சம்பந்தமாகவும் அதைத் தடுப்பது பற்றியதுமான ஆலோசனைக் கூட்டம் கிளாலி பொதுநோக்கு மண்டபத்தில் நடைபெற்றது.

கிளாலி கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள், மகளிர் அபிவிருத்திச் சங்க உறுப்பினர் கள் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

கிளாலியில் மீள்குடியேறிய மக்களுக்கு பொது நிறுவனத்தினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட வீட்டுத் திட்டத்திற்குரிய மணல் இந்தப் பகுதியிலிருந்து எடுக்கப்பட்டதால் பொருளாதார ரீதியில் மக்கள் பயனடைந்துள்ளனர். எதிர்காலத்தில் நடைபெறும் வீட்டுத் திட்டத்துக்கும் இந்தப் பகுதியிலுள் மணலையே பயன்படுத்த வேண் டிய நிலையில் மக்கள் உள் ளார்கள்.

இந்த நிலையில் தினசரி டிராக்டர்கள் மூலம் இப் பகுதியிலிருந்து மணல் வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. பிரதேச செயலரினதும் கிராம உத்தியோகத்தர்களினதும் அனுமதியுடன் மண் அகழ்வு இடம்பெறுவதனால் அதைத் தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த மண் அகழ்வினால் விவசாய நிலம் உவர் நிலமாக மாற்றமடைவதுடன் கிணற்று நீரும் மாசடையும் நிலை ஏற்பட்டுள்ளது. அதேநேரம் எஞ்சிய குடும்பங்களுக்கு மேற்கொள்ளவிருக்கும் வீட்டுத் திட்டங்களுக்கு மணல் தேவையாக இருப்பதனால் இந்தப் பகுதியிலிருந்து மணல் எடுத்துச் செல்லப்படுவதைத் தடுத்து நிறுத்துமாறு கிராம அபிவிருத்திச் சங்கத்தினால் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலருக்கு அனுப்பிவைக்கப்பட்ட மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-115)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## இலங்கை - இந்திய உறவு மேலும் விரிவடையும் வழி

இலங்கை - இந்தியாவுக்கு இடையிலான வர்த்தக வாணிப உறவுகள் மேலும் விரிவடைவதற்கு இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளை இலங்கை அரசு தீர்த்து வைப்பது அவசியம் என்று இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதாவின் வெளியுறவுக் கொள்கைக்கான தேசிய ஏற்பாட்டாளர் சேஷாத்திரி சாரி என்பவர் சிங்கப்பூரில் கருத்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைகள் சுமுகமாக தீர்க்கப்படுமானால் வர்த்தக உறவுகள் மட்டுமல்ல இரு நாடுகளுக்கும் இடையிலான கலை, கலாசார சமயம் மற்றும் பல தரப்பட்ட விடயங்களில் விரிவும் வளர்ச்சியும் ஏற்படும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பல பத்தாண்டுகால ஆயுதப் போர் முடிவுக்கு வந்த கையோடு தீர்வுப் பொதியொன்றை ராஜ பக்ஷ அரசு மக்கள் முன்வைக்கப் போகிறது என்றுதான் பலரும் எதிர்பார்த்தார்கள். அந்த வகையில்தான் ஜனாதிபதி உலகுக்கும் இந்தியாவுக்கும் கூறி வந்திருந்தார். ஆனால் நடந்தது என்ன?

உண்மையில் அந்தக் காலகட்டத்திலேயே ஒரு நியாயமான தீர்வுத்திட்டத்தை அறிவித்து இந்த அரசு செயற்பட்டிருக்குமானால் அநேகமாக இன்று சர்வதேச விசாரணையொன்றை எதிர் நோக்க நேர்ந்திருக்காது. நேர்ந்திருந்தாலும் இவ்வளவு இறுக்கமான ஒரு சூழ்நிலையில் சிக்கிக் கொள்ளவோ அதனை திசைதிருப்பி விடலாம் என்ற வகையில் காலம் கடந்த உள்ளக போர்க் குற்ற விசாரணை ஒன்றுக்கு ஏற்பாடு செய்யவோ அவசியம் ஏற்பட்டிருக்க மாட்டாது. இப்போது அரசுக்குள் இருக்கும் சில தரப்பினர்களே போர்க் கொடி உயர்த்தியிருக்கவும் மாட்டார்கள்.

இந்தியாவின் அனுசரணையில் உருவான 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை பலவீனமாக்கு வது அல்லது அதனை அடியோடு இல்லாமல் செய்வது என்ற போக்கே மேலோங்கி நின்றது.

இதற்கிடையில் தமிழர் தரப்பினருடன் நடத்தி வந்த இரு தரப்பு உரையாடலில் இருந்தும் அரசு பின்வாங்கியது மட்டுமின்றி நாடாளுமன்ற தெரிவுக் குழுவின் முடிவுதான் தீர்வு என்று கூறி அதில் கலந்து கொள்ளுமாறு எல்லாத் தரப்புக் களுக்கும் அழைப்பு விடுத்தது. எதிர்த்தரப்பில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட முக்கிய கட்சிகள் கலந்துகொள்ள முன்வரவில்லை.


தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை எவ்வாறேனும் தெரிவுக்குழு கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்ய வேண்டும் என்பதில் பல்வேறு விதமான நெருக்குதல்கள் கொடுக்கப்பட்டன. முதலில் இடையில் முறிக்கப்பட்ட கலந்துரையாடல்களை தொடர வேண்டும். அதில் இரு தரப்புக்குமிடையில் ஓர் உடன்பாடு வரவேண்டும். அதன் அடிப் படை யில் தெரிவுக் குழுவில் கலந்து கொள்வது சாத்தியமாகலாம் என்பது தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் கண்டிப்பான நிலைப் பாடாக இருந்து வருகின்றது.

இந்தச் சூழ்நிலையில்தான் உறவுகளை விரிவுபடுத்திக் கொள்வதற்காக தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள் என்ற சேஷாத்திரி சாரியின் அறிவுரை வெளிவந்திருக்கின்றது. அண்மையில் புதுடில்லி சென்றிருந்த வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் வழமைபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை தெரிவுக் குழுவில் கலந்துகொள்ளும்படி கூறுமாறு இந்திய வெளியுறவு அமைச்சர் சுஸ்மா சுவராஜிடம் கேட்டபோது பிரச்சினை தீர்வுக்கு உங்கள் தரப்பின் திட்ட மென்ன என்று அவர் கேட்டதாக செய்தி வந்திருந்தது. அது மட்டுமல்ல இலங்கைக்கு வரும்படி அமைச்சர் பீரிஸ் விடுத்த அழைப்பை ஏற்றுக்கொண்ட சுஸ்மா சுவராஜ் நான் அங்கு வரு முன் உங்கள் தரப்பின் தீர்வுத் திட்டம் எனக்குக் கிடைத்துவிடும் என்று தெரிவித்ததாகவும் செய்தி.

அண்மையில் இலங்கை வந்து சென்ற தென்னாபிரிக்க துணை அதிபர் சிறில் சமபோஷ எங்கள் ஆதரவில் தமிழ் கூட்டமைப்பினர் நியாயமாக நடந்து கொண்டால் நீங்கள் பேச்சுக்களை ஆரம்பிப்பீர்களா என்று கேட்டபோது அதைபற்றி யோசிக்கலாம் என்று ஜனாதிபதி கூறியிருந்தார்.

இவைகளை ஒன்று சேர்த்துப் பார்க்கையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான இரு தரப்பு பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாவதற்கான ஒரு சூழ்நிலை உருவாவதுபோல் தெரிகிறது. என்றாலும் வரவிருக்கும் தேர்தல்களையொட்டி அரசு தன்நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவும்கூடும். அல்லது ஜனாதிபதித் தேர்தல் முடியும் வரை காலம் கடத்தினாலும் ஆச்சரியத்துக்கிடமில்லை.

# ரத்தம் ஒழுகும் ஈழக் கதையை வியாபாரமாக்கும் சினிமா




தம்பி

இது வணிக யுகம். இங்கு வியாபாரத்தால் சாத்தியமாகாதது என்று எதுவுமில்லை. காசு கொடுத்தால் அனைத்தும் கிடைக்கும். எல்லாவற்றையும் தீர்மானிக்கும் சர்வ வல்லமை படைத்த ஆயுதமாகப் பணம் மட்டுமே மாறியிருக்கின்றது. இங்கு வெற்றிகள் மட்டும் வியாபாரப் பொருள்கள் அல்ல. தோல்விகளும், சரிவுகளும், அதனால் விளைந்த மரணங்களும், மரணத்தின் விளைவான கண்ணீரும், கதறல்களும்கூட விற்பனைப் பொருள்கள்தான். அவற்றின் தரத்தைப் பொறுத்து விளைநிர்ணயம் செய்யப்படுகின்றன. அன்றைய ஈழம் தொட்டு, இன்றைய காஸா வரைக்கும் இந்த வணிக நிலையை மக்கள் போராட்டங்கள் மீது பொருத்திப் பார்க்கலாம். ஊடகங்கள் இதில் அதி முக்கிய இடத்தைப் பெறுவதையும் கவனிக்கலாம்.

ஈழத்தைப் பொறுத்தவரையில் எல்லா விதங்களிலும் தமிழகம் மிகவும் அண்மையானது. அன்றைய காலத்துப் பண்பாட்டு, கலாசார பரவுதலிலிருந்து, இன்றைய வியாபாரப் படர்ச்சி வரையிலும் அது மிகமிக அண்மையானதாகவே இருந்துவருகின்றது. அந்த வகையில் தமிழகத்திலிருந்து ஈழத்துத் தமிழ் பரப்பை அடையும் சினிமாவும் நமக்கு மிகக் கிட்டியதுதான். இப்போது புதியதொரு சினிமா அலை தமிழகத்தில் உருவாகியிருக்கிறது. ஈழத்தின் போர் ஓய்வும், அதன் துயரமான முடிவில் நிகழ்ந்த மனித குலத்தையே அசைத்துப் போடும் குரூரமான கதைகளும் ஒரு வகை சினிமாவின் மையக் கதையாகியிருக்கின்றன. படம் தயாரிக்கும், இயக்கும் நபர்கள் சார்ந்த அரசியல் 2009க்குப் பின்னர் வெளிவந்த, ஈழம் குறித்த இந்தியத் திரைப்படங்களில் வெளிப்பட்டு நிற்பதையும் இந்த இடத்தில் பார்க்கத் தவறலாகாது. அவரவர் நிலைப்பட்டு, ஈழ அரசியலைத் திரைப்படமாக்கும் முயற்சிகளை எடுத்திருந்தனர். மெட்ராஸ் கபே தொட்டு, இனம் உள்ளடங்கலாக வெளிவரத் தாமதமடைந்திருக்கும் சிவப்பு வரையில் இந்த அரசியலைப் பார்க்கலாம்.

இப்போது மேலுமொரு படம் பற்றிய சர்ச்சை எழுந்திருக்கிறது. புலிப் பார்வை. அதிக கன்னட படச் சாயலோடு, தமிழ் மொழிப் படங்களை இயக்கிய பிரவீன்காந் இதனை இயக்குகின்றார். முறைப்படி இந்தியத் திரைப்படத் தணிக்கைக் குழுவின் அனுமதியைப் பெற்ற பின்னரே இந்தப் படத்தை எடுத்து முடித்திருப்பதாக ஊடகங்களுக்குத் தெரிவித்திருக்கின்றார். இந்தியாவின் அரசியல் நலன்களையும், ஈழப் பிரச்சினையில் இந்தியா செய்த துரோகத்தனங்களையும் கேள்விக்குட் படுத்தாத வகையில் திரைக்கதையை அமைத்ததாலும், மிகத் தரமான வணிக உத்தியை ஈழப்பிரச்சினை குறித்து படத்தின் இயக்குநர் கைக் கொண்டதனாலேயே இந்தியாவின் அனுமதி கிடைத்திருக்கின்றது என்ற முடிவுக்கு வரலாம். அடுத்து இந்தப் படத்தை தயாரித்திருக்கும் தயாரிப்பு நிறுவனமும் வணிக ஊடக நெறியில் பெயர் பெற்றதுதான். வேந்தர் மூவிஸ் இந்தப் படத்தை வெளியிடுகின்றது. எனவே வெற்றி பெற்ற வணிக நிறுவனம் தயாரிக்கும் திரைப்படம் வணிக எல்லைகளை மீறிச் செயற்படாது. வணிக ரீதியில் வெற்றியடைவதற்கான உத்திகளைக் கொண்டே படத்தைத் தயாரிக்கும் முயற்சியில் அந்த நிறுவனம் ஈடுபட்டிருக்க வாய்ப்புகள் உண்டு. ஈழம் குறித்து இதுவரை வந்த அனைத்துப் படங்களுமே தமிழத்தில் வணிக ரீதியில் தோல்வியைத்தான் கண்டிருக்கின்றன. இந்தப் படம் வெற்றிபெறுவதற்கான மூலோபாயங்களுடனேயே, தமிழக சினிமா ரசனையாளர்களின் உளவியலுக்கேற்ப தயாரிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அது வெற்றி பெற்றால், ஈழக் கதைகளைப் எப்படிப் படமாக்கினால் வணிக ரீதியில் வெற்றி பெறலாம் என்பதற்கான உதாரணமாகப் புலிப்பார்வை அமையும். அதனைத் தொடர்ந்து ரத்தம் சொட்டும் ஈழத் துயரக் கதைகள் மிக உன்னதமான வணிகப் படங்களுக்கு எடுத்தாளப்படும்.

இப்போது படத்தின் முன்னோட்டம் வந்திருக்கின்றது. சமூக வலைத் தளங்களில் அது பெரும் சர்ச்சையையும் கிளப்பியிருக்கின்றது. அந்தப் பட முன்னோட்டத்தின்படி பாலச்சந்திரன் ஒரு குழந்தைப் போராளி. பாலச்சந்திரனின் தந்தையான விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தன் மகனையே ஒரு குழந்தைப் போராளியாக வளர்க்கிறார். காடு மேடெல்லாம் கூட்டித் திரிந்து கனரக ஆயுதப் பயிற்சிகளை மகனுக்கும், மகனின் வயதையொத்த சிறுவர்களுக்கும் வழங்குகின்றார். அந்தச் சிறுவர்களின் விளையாட்டுப் பொருள்களாக துப்பாக்கிகள் இருக்கின்றன. போரில் சிக்குண்ட பாலச்சந்திரன் இராணுவத்தினரிடம் பிடிபட்டு, மரணத்தின் இறுதிப் பகுதியிலும், வீர வசனம் பேசுகிறான். தந்தை திரும்பி வருவார் என்று சொல்லியே மரணிக்கிறான். அதன்படி மிக உச்சமான ஹிரோயிச சினிமாவின் வகைப்படி விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் மீள வருகிறார். படம் இப்படித்தான் முன்னோட்டத்தில் முடிகிறது.

மேலோட்டமாகப் பார்த்தால், தமிழனின் வீர உணர்வை விறைப்படையச் செய்ய வைப்பதாகத் திரைக்கதை அமைக்கப் பட்டிருக்கிறது. நமது புறநானூற்று வீரக் கதைகளை மறுபடியும் சிலாகித்துப் பேசிக் கொள்ளலாம். ஆனால் படத்தின் பின்னால் பேசப்படுகின்ற அரசியல் ஆபத்தானது.

சர்வதேச ரீதியில் இலங்கை மீதான போர்க்குற்ற, மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளும் முயற்சிகள் நடந்து வருகின்றன. இதிலிருந்து திசை திருப்பி விடுவதற்கான வழிவகைகளில் ஒன்றாக, விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போர்க் குற்றங்களையும் விசாரிக்கும்படியான கோரிக்கைகள் முன் வைக்கப்படுகின்றன. சர்வதேசம் அதற்கான காலத்தை வீணடிக்கும் வேளையில் இலங்கை அரசு, தான் செய்த குற்றங்களைச் சமாளித்துவிடும் நோக்கில் இந்தக் குற்றத் தேடல்கள் நடக்கின்றன. அதற்கு ஒரு ஆதாரத்தைப் புலிப் பார்வையாலும் கொடுக்க முடிந்திருக்கிறது.

சர்வதேச குற்றங்களில் ஒன்றாக சிறுவர்களை ஆயுதப் படையில் இணைத்துக் கொள்ளுதல் இடம்பெறுகின்றது. விடுதலைப் புலிகள் தமது படையணிகளில் சிறுவர் போராளிகளை வைத்திருந்தார்கள் என்பதற்கு இந்தப் படம் போதுமானளவு ஆதாரத்தை வைத்துப் பேசுகின்றது. இது குறித்த சர்ச்சை 2004 ஆம் ஆண்டுகளிலேயே எழுந்தது. அதை அப்போது மறுதலித்த விடுதலைப்புலிகள், தம்மோடு இணைந்த ஆயிரக்கணக்கான சிறுவர் போராளிகளைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் முன்னிலையிலேயே மக்களிடம் கையளித்தனர். ஆனால் இந்தத் திரைப்படம், விடுதலைப் புலிகள் சிறார் போராளிகளை வைத்திருந்தனர், ஆயுதப் பயிற்சி வழங்கினர் என்பதை மறுபடியும் நினைவுக்குட்படுத்தி, அதற்கான ஆதாரங்களைத் தேட வைக்கின்றது. அடிப்படையில் தமிழர்க்கு ஆதரவாக உணர்வு தளத்தில் செயற்படுவதாக சொல்லப்படும் இந்தத் திரைப்படம் அதன் அரசியல் தளத்தில் மேலுமொரு சூழ்ச்சியையே செய்கின்றது.

உலகளவில் போராடித் தோற்ற இனங்கள் பற்றியும், விடுதலைப் போராட்ட அமைப்புகள் பற்றியும் அருமையான திரைப்படங்கள் வெளிவந்திருக்கின்றன. அல்ஜீரியா, உகாண்டா, சேர்பியா, ஆப்கானிஸ்தான் எனப் பல நாடுகளும் நல்ல திரைப்படங்களின் கதைக்களங்களாக இருந்திருக்கின்றன. இந்த வகைப் படங்களை எடுப்பதற்கு முக்கிய காரணம் சர்வதேச விருதுகளைப் பெறுவது, மற்றையது குறித்த மக்களின் பிரச்சினையை அச்சுஅசலாக சர்வதேசத்தின் முன் வைப்பது ஆகிய இரண்டுமே ஆகும். வணிக வெற்றி இதில் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆனால் தமிழக குப்பை சினிமாத்தனம், ரத்தம் ஒழுகும் கதைகளையும் வியாபாரமாக்கத் துடிப்பது கோழைத்தனத்தையும் தமிழனின் இயலாமையையும் வெளிப்படுத்தி நிற்கிறது.

புனித ரமழான் மாதம் பகல் முழுவதும் நோன்பு நோற்று, இரவெல்லாம் வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம்கள் ஷவ்வால் மாத தலைப்பிறை தென்பட்டவுடன் ஈதுல் பித்ர் எனும் ஈகைத் திருநாளைக் குதூகலமாகக் கொண்டாடுகின்றனர். இறை அருளையும் பாவ விமோசனத்தையும் அடைய நேற்று வரை திளைத்துக்கொண்டிருந்த ரமழான் எனும் விஷேட மகத்துவமான மாதத்தை வழியனுப்பி வைத்து கவலையில் ஆழ்ந்த இறை விசுவாசிகளுக்கு ஆறுதலாகவும் மகிழ்ச்சியாகவும் இறைவன் வழங்கிய மாண்பு மிக்க தினமே புனித நோன்புப் பெருநாள் தினமாகும்.




# தக்பீர் முழக்கத்துடன் நோன்புப் பெருநாளை வரவேற்போம்

இணையம்

ரமழான் மாதம் அருள் நிறைந்த மாதம், நன்மைகளை அதிகம் செய்யும் மாதம், பிழைப்பொறுப்புத் தேடும் மாதம், அல்லாஹ்வை அதிகம் நெருங்கும் வாய்ப்பைப் பெறும் மாதம், சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு நரகத்தின் வாசல்கள் மூடப்படும் மாதம், சாத்தான்கள் விலங்கிடப்படும் மாதம், ஆயிரம் மாதங்களைவிடச் சிறப்புமிக்க ஒரு இரவைக் கொண்ட மாதம், நரகவாதிகள் நரகத்திலிருந்து விடுதலை பெறும் மாதம், குர்ஆனை இந்தப் பூவுலகத்தில் இறக்குவதற்கு அல்லாஹ் தேர்ந்தெடுத்த மாதம், துஆக்கள் அங்கீகரிக்கப்படும் மாதம் என்று இந்த மாதத்துக்குப் பல சிறப்புக்கள் இருப்பதாக இஸ்லாமிய மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர். இந்த மாதத்தில் நன்மைகள் செய்யாதவர் எல்லா நன்மைகளையும் இழந்தவர் என்றும் இந்த மாதத்தில் அல்லாஹ்விடம் பாவமன்னிப்புக் கேட்காதவர் அல்லாஹ்வின் அருளை விட்டுத் தொலைவில் இருப்பார்கள் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்.

வணக்கங்களைச் செய்பவர்களுக்குக் கூலியாக அல்லாஹ் மறுமையில் சுவர்க்கத்தை ஏற்பாடு செய்து வைத்திருக்கின்றான் என்பது இஸ்லாமிய நம்பிக்கையாகும். இந்த வணக்கங்களின் வரிசையில் ஒன்றாக உள்ளதுதான் நோன்பு. நோன்பு என்னும் வணக்கம் மற்ற வணக்கங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் தியாகங்களுக்கு முற்றிலும் மாறுபடுகின்றது. நோன்பு என்பது பசி, தாகம், இச்சை, இவைகளை இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக நோன்பு மாதத்தின் பகல் நேரத்தில் கட்டுப்படுத்திக் கொள்வதாகும். இது ஒரு சடங்காகக் கருதாமல் வணக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்வதாகக் கொள்ளப்படுகிறது. நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான்.

இறையச்சம் என்பது அல்லாஹ்வுக்குப் பயந்து, அவன் அறிவுறுத்தியவைகளைச் செய்தும், தடை செய்தவைகளைத் தவிர்த்தும் நடப்பதுதான். இஸ்லாம் நோன்பாளி, யாருக்கும் தெரியாத இடத்தில் தனிமையில் இருக்கும்போதும் பசியுள்ளவராக இருந்தும் தன்னிடத்திலுள்ள உணவை உண்ணக் கூடாது. தாகமுள்ளவராக இருந்தும் எதையும் குடிக்கக் கூடாது. இச்சை இருந்தும் அதை நிறைவேற்றக் கூடாது.

எல்லா வணக்கங்களும் அல்லாஹ்வுக்கே உரியன. அவனே எல்லா வணக்கங்களுக்கும் கூலி கொடுக்கின்றான். ரமழான் நோன்பு உண்மையான இறையச்சத்தோடும் மனத்தூய்மையுடனும் இருப்பதால் அது தனித்துவப்படுத்தப்பட்டுள்ளது. பசியோடும், தாகத்தோடும் இருப்பது மட்டும் நோன்பாகாது. இவைகளைக் கட்டுப்படுத்துவது போல் மற்ற எல்லாப் பாவங்களையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நோன்பை ஒரு சடங்காகச் செய்பவர்களுக்கு எந்தவித பலனும் இல்லை. ஒருவர் கெட்ட பேச்சுக்களையும், கெட்ட செயல்களையும் விட்டுவிடாமல் உணவை விடுவதிலும், குடியை விடுவதிலும் மட்டும் ஆர்வம் கொள்வதால் பயனை அடைய முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# ரமழானின் வரலாறும் அதன் முக்கியத்துவமும்

எம்.ஐ.ரஹ்மதுல்லாஹ்

ரமழான் மாதம் புனித மாதமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இந்த மாதத்தில்தான் அல்லாஹ் வானவ தூதர் ஜிப்ரியில் (அலை) மூலமாக இறை தூதர் முஹமது (ஸல்) அவர்களிடம் புனித குர்ஆன் வசனாங்களை அறிவிக்கச் செய்தான்.


பருவம் (மனதளவிலும், உடலளவிலும்) அடைந்த ஒவ்வொரு முஸ்லிமும் கண்டிப்பாக ரமழான் மாதத்தில் நோன்பு வைக்க வேண்டும். நோன்பு காலைத் தொழுகையை (சுபுஹ்) அடிப்படை யாக வைத்துத் தொடங்கப்படுகிறது. சூரியன் உதயமாகும் வேளையில் (மக்ரிபு) நோன்பு விடப்படுகிறது. இது போலவே ரமழான் மாதம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது.

சில மக்களுக்கு ரமழானில் விலக்கு அளிக்கப்படுகிறது. அதாவது மனதளவில் பாதிப்புக்கு உள்ளானவர்கள், பருவம் அடையாத குழந்தைகள், முதியவர்கள், நோய்வாய்பட்டவர்கள், கர்ப்பிணிகள், பாலூட்டும் தாய்மார்களுக்கு அவர்களால் முடியாத பட்சத்தில் விலக்கு அளிக்கப்படுகிறது.

அதற்கு பதிலாக, அவர்கள் ஒரு நோன்புக்கு ஓர் ஏழைக்காவது உணவு தந்திருக்க வேண்டும் (அவர் தவறவிட்ட நோன்புக்காக).

பெண்களுக்கும் மாதவிடாய்க் காலத்தில் விலக்கு அளிக்கப்படுகிறது. மாதவிடாய் நீங்கிய பிறகு தொடரவேண்டும், அவர்கள் தவறவிட்ட நோன்பை பின்னர் வைக்க வேண்டும்.

குழந்தைகளுக்குக் கடமை இல்லை என்றாலும், பயிற்சியாகக் கடைபிடிக்கச் செய்யலாம். பெற்றோர்கள் குழந்தைகளுக்கு நோன்பின் முக்கியத்துவத்தை உணர்த்திப் பயிற்சி தரலாம். படிப்படியாக அரைநாள் அல்லது அவர்களால் எவ்வளவு நேரம் முடியுமோ அதுவரை என்று குழந்தைகளுக்குக் கற்றுத் தரலாம்.



நோன்பானது இஸ்லாமிய அடிப்படையில் 5 கடமை களில் ஒன்றாகும். அது அல் ஹிஜ்ரா 2ம் ஆண்டு முதல் கடமையாக்கபட்டுள்ளது. அல் ஹிஜ்ரா என்பது இடம் பெயர்வு ஆகும், இறை தூதர் முஹமது (ஸல்) அவர்கள் தன்னைப் பின்பற்றுபவர்களுடன் தான் பிறந்த மக்காநகரிலிருந்து மதினா நகரை நோக்கி எதிரிகளின் சதிகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள இடம் பெயர்ந்தார்கள்.

நோன்பானது பக்குவத்தையும் ஒழுக்கத்தையும் கற்றுத் தருவதோடு, பசி மற்றும் உணவு இழந்து வாழும் மக்களின் உணர்வுகளை நினைவு கூரவும், அவர்களுக்குச் சேவை செய்யவும் உதவுகிறது. மற்றும் உடலளவில் பல நன்மைகளைத் தரு கிறது. தேவையற்ற நச்சுகளை நீக்கி உடலைச் செம்மைப்படுத்துகிறது. செரிமானத்தை ஒழுங்கு படுத்துகிறது. நோய் எதிர்ப்பு மண்டலத்தைச் சீராக்கித் தூண்டுகிறது.

முஸ்லிம்கள் இந்த மாதத்தில் அதிக நேரம் தொழுகை, பிரார்த்தனை (துவா), புனித குர்ஆன் ஓதுதல், ஏழைகளுக்கு அதிகமாகத் தர்மங்களைச் செய்வது எனச் செலவு செய்வார்கள். இந்த மாதத்தில் நன்மையானது பல மடங்காக அல்லாஹ்விடமிருந்து கிடைக்க பெறும். இந்த மாதத்தில் முஸ்லிம்கள் சுய ஒழுக்கத்துடன் அதிக பக்தியாகவும், தாராளமாகவும் நடந்துகொள்வார்கள்.

நோன்பாளிகள் கண்டிப்பாக உணவிலிருந்தும், பருகுவதிலிருந்தும், பாலியல் நடவடிக்கைகளிருந்தும் விலகி இருக்க வேண்டும். பொய் சொல்வது, கேலி செய்வது, மற்றவர்களை அவமதிப்பது என்பன குற்றங்களாகும். ரமழான் கடைசியில் ஒவ்வொரு முஸ்லிமும் ஜக்காத் அல் பித்தர் என்ற பெயரில் ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வார்கள். இதன் நோக்கம் ஈத் (ரமழான்) கொண்டாட யாருக்கெல்லாம் வசதி இல்லையோ அவர்களுடைய அடிப்படை உணவு மற்றும் உடைக்காக இந்த உதவி பயன்படும்.

ரமழானில் முஸ்லிம்கள் குடும்பமாகவும், நண்பர்களாகவும் ஒவ்வொரு இப்தாரிலும் (நோன்பு விடுப்பு ), ஸஹரிலும் கூடுவார்கள். (நோன்பு வைப்பு ). மற்றும் தராவிஹ் (இரவு வணக்கம்) தொழுகை ரமழானில் முக்கியமான ஒரு பிரார்த்தனையாகும். இது ஒவ்வொரு இஷா தொழுகைக்குப் பின்பும் நடைபெறும். ரமழான் நோன்பு முடித்த பிறகு முஸ்லிம்கள் புதிய ஆடை, உணவு, இனிப்புகள் என குடும்பத்தோடும், நண்பர்களோடும் சிறப்புப் பெருநாள் தொழுகையில் கலந்து கொண்டு ஈதுல் பித்தர் என்ற ரமழான் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள்.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: தடைப்பட்டிருந்த அனைத்து காரியங்களும் அடுத்தடுத்து நடைபெறப்போகின்றன. உங்களுக்கு ஏற்பட்ட கஷ்டங்கள் அனைத்தும் விலகி நன்மைகள் நடக்கும். சுற்றியிருக்கும் சோம்பேறிகளிடமிருந்து உங்களை நீங்கள் விலக்கிக் கொள்ளுங்கள்.

**இடபம்**: குடும்பத்தில் உங்களுக்கு பெரிய பொறுப்பு தேடி வரும். நாவன்மையால் உங்கள் வேலைகளை சாதித்துக் கொள்வீர்கள். ஆன்மிக சொற்பொழிவுகள் செய்வோருக்கு உகந்த நாள்.

**மிதுனம்**: அரசால் அனுகூலம் ஏற்படும். உடன்பிறந்த ஒருவருக்கு உங்களால் யோகம் கிடைக்கும். உங்களால் உங்களுக்கு பெருமையும் செல்வமும் கிடைக்கும். பிள்ளைகள் குறித்து மிக எச்சரிக்கையாக இருக்கவும்.

**கடகம்**: தந்தையாருடன் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்புள்ளது. எதிரிகளின் தொல்லைகள், கடன்சுமைகள் அடங்கும். வேலை செய்யும் இடத்தில் உயரதிகாரிகளின் பாராட்டுதல்கள் கிடைக்கும். கலைத்துறையினருக்கு பொருளும் புகழும் கூடும்.

**சிங்கம்**: உங்கள் பக்கமுள்ள நியாயம் ஓங்கும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். விட்டுக் கொடுத்துப் போவார்கள். தந்தையாருடன் இருந்த மனக்கசப்புகள் நீங்கும். உத்தியோகத்தர்கள் சக ஊழியர்களுடன் அனுசரித்துப் போகவும்.

**கன்னி**: குடும்பத்தில் இருந்து வந்த பிரச்சினைகள் தீரும். எதிர்கால முன்னேற்றத்தைக் கருதி சில முயற்சிகளை எடுப்பீர்கள். அந்த முயற்சிகள் யாவும் வெற்றிகளைத் தரும். உற்சாகத்துடன் அனைத்துக் காரியங்களிலும் ஈடுபடுவீர்கள்.

**துலாம்**: தவறான வழிமுறைகளில் செல்வம் கரையவும் வாய்ப்புண்டு. எச்சரிக்கையாக இருக்கவும். அயலாருடன் இருக்கும் மனக்கசப்புகள் நீங்கி உற்சாகம் பிறக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டவும்.

**விருச்சிகம்**: முகமலர்ச்சியுடன் காணப்படுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். மாணவர்கள் உயர்கல்வியில் கூடுதல் கவனம் செலுத்துவார்கள். உத்தியோகத்தர்களின் வேலைப்பளு அதிகரிக்கும்.

**தனுசு**: கலைத்துறையினருக்கு மிக சிறந்த காலகட்டம் இது. வாய்ப்புகள் தேடி வரும். அரசியலில் குறுக்கு வழிகளில் ஈடுபட வேண்டாம். மாணவர்கள் கல்வியில் சிறப்பான தேர்ச்சியைக் காண்பார்கள். சுயசார்பும் தன்னிறைவும் பெறுவீர்கள். தைரியம் பளிச்சிடும்.

**மகரம்**: நீண்ட நாள்களாக இருந்து வந்த பிரச்சினை நீங்கும். குடும்பத்தில் சிறு சிறு சிக்கல்கள் வந்து வந்து போகும். பயணம் தொடர்பான தொழில்களில் இலாபம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர்.

**கும்பம்**: புத்தி சாதுரியத்தால் புகழையும், செல்வத்தையும் பெறுவீர்கள். எண்ணிய காரியங்களைத் திறமையாகச் செய்து முடிப்பீர்கள். எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கும். சில முக்கியமான முயற்சிகள் அதிக உழைப்பின் பேரில் செய்ய வேண்டி இருக்கும்.

**மீனம்**: தொழில், வியாபாரம் செய்பவர்கள் தங்களது திறமையை வெளிப்படுத்தி வியாபாரம் செய்ய வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கலாம். வேலை தொடர்பாக வெளியூரில் தங்க நேரிடலாம்.

## நாளை

**ஆடி-14 புதன்கிழமை | 30.07.2014**

திதி: திருதியை மு.ப.10.19 வரை
நட்சத்திரம்: பூரம்
பி.இ.02.15 வரை

சுபநேரம்: 04.33-06.03 வரை
இராகுகாலம்: 12.03-01.33 வரை
ஆடிப்பூரம், நாகசதுர்த்தி விரதம்

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### எந்தச் சட்டத்தாலும் உனக்கு விடுதலை தர இயலாது

செயல்களின் விளைவும், ஞானத்தின் விளைவும் வெவ்வேறானவை. 'செய், செய்யாதே' என்பவை சகல ஒழுக்கங்களுக் கும் அடிப்படையாக உள்ளன. ஆனால் உண்மையில் இவை உடலோடும் மனதோடும் தொடர்பு கொண்டவை. சகல இன்பமும் துன்பமும் பிரிக்க இயலாதபடி புலன்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. அவற்றை அனுபவிக்க உடல் இன்றியமையாதது. உடலின் தரம் உயர உயர ஒழுக்கத்தின் தரமும்உயருகிறது. பிரம்மா வரை எல்லோருக்கும் உடல் உண்டு. உடல் இருக்கும்வரை இன்பமும் துன்பமும் இருக்கவே செய்யும். உடலை விட்ட பின்னரே இன்ப துன்பங்களிலிருந்து மனிதன் விடுபடுகிறான். ஆன்மா உடலற்றது என்று சங்கரர் கூறுகிறார். எந்தச் சட்டத்தாலும் உனக்கு விடுதலை தர இயலாது. நீ சுதந்திரமானவனே. முன்னரே உன்னிடம் சுதந்திரம் இல்லாவிடில், எதனாலும் உனக்கு விடுதலை வழங்க முடியாது. ஆன்மா சுயம் பிரகாசமானது. காரணமும் காரியமும் ஆன்மாவைப் பாதிப்பதில்லை. உடலின்மையே சுதந்திரம். இருந்தது, இருப்பது, இருக்கப்போவது ஆகிய வற்றுக்கெல்லாம் அப்பாற்பட்டது பிரம்மம். முயற்சியின் விளைவு முக்தி என்றால், அந்த முக்திக்கு மதிப்பு இல்லை. அப்போது அது ஒரு காரியப் பொருளாகி விடுகிறது. காரியப் பொருளில் பந்தத்துக்கு உரிய விதைகள் இருக்கும். முக்தி என்பது உண்மையானது. அது புறத்தே இருந்து பெறப்படுவது அல்ல. ஆன்மாவின் இயல்பே அது.

## உதைபந்தைப் போன்ற தலையுடன் பிறந்த சிறுமி



இந்தியாவைச் சேர்ந்த குழந்தை ஒன்றுக்கு உதைபந்து போல் பெரிதாக இருந்த தலை தற்போது சிகிச்சை செய்யப்பட்டதன் மூலம் சாதாரண நிலைமைக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்தியத் தலைநகரான புதுடில்லியைச் சேர்ந்த ரூனா பேகம் (வயது-3) என்ற குழந்தை, 2013 ஆம் ஆண்டில் மூளையில் நீர்க்கட்டியுடன் பிறந்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

இதனை அடுத்து மருத்துவர்கள் புல முறை சிகிச்சை செய்தும் பயனளிக்கவில்லை என்பதால் வீடு திரும்பினர். ரூனா பிழைக்க மாட்டார் என அனைவரும் நினைத்திருந்த தருணத்தில் தற்போது சாதாரண நிலைமைக்குத் திரும்பியுள்ளார்.

அவரது, தலை சிகிச்சைக்கு பின் 37 அங்குலத்திலிருந்து 23 அங்குலமாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இது குறித்து ரூனாவின் தந்தை அப்துல் கூறுகையில்; எனது மனைவி மிகவும் கவலைப்பட்டார், மற்றவர்கள் அனைவரும் குழந்தையை குழந்தை விடுதியில் அனுமதிக்குமாறு கூறினர். தற்போது, ரூனா மீண்டு வந்தது எங்கள் குடும்பத்தை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.


## சுடோக்கு
### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | | | 6 | | 3 | 9 | 7 |
| 9 | | 3 | 7 | 5 | | | 6 | |
| | 7 | 1 | | | | | 8 | 2 |
| | | | | | 4 | 8 | | |
| | | 2 | 5 | | 7 | 9 | | |
| | | 4 | 3 | | | | | |
| 4 | 3 | | | | | 2 | 5 | |
| | 9 | | | 7 | 5 | 1 | | 3 |
| 5 | 1 | 8 | | 3 | | | 7 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 9 | 8 | 3 | 6 | 1 | 4 | 7 | 5 |
| 1 | 4 | 3 | 9 | 7 | 5 | 6 | 8 | 2 |
| 6 | 5 | 7 | 2 | 4 | 8 | 9 | 1 | 3 |
| 5 | 2 | 1 | 6 | 8 | 7 | 3 | 4 | 9 |
| 3 | 7 | 4 | 1 | 5 | 9 | 8 | 2 | 6 |
| 8 | 6 | 9 | 4 | 2 | 3 | 1 | 5 | 7 |
| 9 | 1 | 5 | 7 | 3 | 4 | 2 | 6 | 8 |
| 7 | 3 | 6 | 8 | 1 | 2 | 5 | 9 | 4 |
| 4 | 8 | 2 | 5 | 9 | 6 | 7 | 3 | 1 |



வவுனியா மாவட்டத்தில் இருந்து தேசிய மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ள வீரர்களுக்கான மூன்று நாள் பயிற்சி முகாம் நேற்றுத் திங்கட்கிழமை ஓமந்தை மத்திய கல்லூரியில் ஆரம்பமானது. நாளை புதன்கிழமை வரை நடைபெறும் இந்த பயிற்சி முகாமில் கொழும்பில் இருந்து வருகை தந்துள்ள பயிற்சியாளர்கள் வீரர்களுக்குரிய பயிற்சிகளை வழங்கி வருகின்றனர். (த- 422)

# முதல்முறையாக ஆனந்தா வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது இளவாலை ஹென்றியரசர் கல்லூரி

கொழும்பு, ஜூலை 29

கொழும்பு ஆனந்தா கல்லூரியினால் நாடளாவிய ரீதியில் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்பட்ட 17 வயதுக்கு உட்பட்டோருக்கான அணிக்கு ஏழு பேர் கொண்ட சாம் சமரசிங்க ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுத்தொடரில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகியது.

இலங்கை முழுவதிலிருந்தும் அழைக்கப்பட்ட 48 பாடசாலைகள் இந்தச் சுற்றுத் தொடரில் பங்குபற்றியிருந்தன.

முதல் சுற்றில் முதலாவது போட்டியில் நடப்புச் சம்பியனான கொழும்பு சென்.பெனடிக்ற் கல்லூரியை எதிர்கொண்ட ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுக்கொண்டது.



வெற்றி பெற்ற அணியினர்

தொடர்ந்து ஆனந்தாக் கல்லூரியை 3:0 என்ற கோல் கணக்கிலும், மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரியை 2:0 என்ற கோல் கணக்கிலும் வெற்றி பெற்ற ஹென்றியரசர் கல்லூரி காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றிருந்தது.

காலிறுதிப் போட்டியில் பிலியந்தல மத்திய கல்லூரியை எதிர்கொண்ட ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கொழும்பு சென்.பீற்றர்ஸ் கல்லூரியும்,ஹென்றியரசர் கல்லூரியும் மோதிக் கொண்ட அரையிறுதிப் போட்டி மிகவும் இறுக்கமானதாகவும் விறுவிறுப்பானதாகவும் அமைந்திருந்தது. இதில் இரு அணிகளும் ஆட்டநேரத்தில் தலா இரண்டு கோல்களைப் பெற்றுக்கொண்டன. இதனால் ஆட்டத்தின் முடிவு சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தீர்மானிக்கப்பட்டது. இதில் 2:1 என்றகோல் கணக்கில் வெற்றிபெற்றஹென்றியரசர் கல்லூரி இறுதிஆட்டத்துக்குத் தகுதி பெற்றிருந்தது.

இறுதி ஆட்டத்தில் பொலனறுவை றேரயல் மத்திய கல்லூரியை எதிர்கொண்ட இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 1:0 என்றகோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் பட்டத்தை தனதாக்கிக் கொண்டது. சுற்றுத் தொடர் ஆரம்பிக்கப்பட்டு 12 ஆண்டுகள் கடந்தபோதிலும் வட மாகாணத்தைச் சேர்ந்த அணியொன்று கிண்ணத்தைச் சுவீகரிப்பது இதுவே முதல் தடவையாகும். (த-86-23)

## இளவாலை மத்திய வி.க.அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜூலை 29

மட்டுவில் வளர்மதி சனசமூக நிலையத்தின் 49 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்திய கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 'பி' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

கடந்த வெள்ளிக்கிழமை மட்டுவில் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற 'பி'' பிரிவு அணிகளுக்கான இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுகழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்தஸ்ரீ விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

4 செற்களைக் கொண்ட இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 3:0 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

சிறந்த வீரனாக இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி வீரன் ஜெகன் தெரிவானார். (த-23)

## வளர்மதி அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூலை 29

புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் மன்னாகண்டல்வளர்மதிவிளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மாத்தளன் ஒற்றுமை விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் மன்னாகண்டல் வளர்மதி விளையாட்டுக் கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)



# ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

மன்னார், ஜூலை 29

வலைப்பாடு, ஜெகமீட்பர் விளையாட்டுக்கழகத்தின் பொன் விழவை முன்னிட்டு நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் 2ஆம் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றன.

இதில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் கிளிநொச்சி திருநகர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எந்த வித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது.

இதில் தேவன்பிட்டி சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும் அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.



வலைப்பாடு சென்.ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இரணைமாதாநகர் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எந்த வித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டது.

இதில் வலைப்பாடு சென். ஆன்ஸ் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக 'ஏ' அணிக்கும்,பூநகரி நண்பர்கள் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக்கழக 'ஏ' அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

தேவன்பிட்டி சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் கிரஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் கிரஞ்சி செந்தாரகை விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

புங்குடுதீவு சென்.சேவியர் விளையாட்டுக்கழக அணிக்கும் இரணைமாதாநகர் சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் எந்தவித கோல்களையும் பெறாமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்வி காண்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் புங்குடுதீவு சென். சேவியர் விளையாட்டுக்கழக அணி 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணிக்கும் அந்தோனியார்புரம் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் இரண்டு அணியினரும் தலா ஓர் கோல்களைப் பெற்றமையால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி தோல்விக் காண்பதற்காகச்சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன.

இதில் விடத்தல்தீவு ஐக்கிய விளையாட்டுக்கழக அணி 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 29


புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் 11 பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் புதுக்குடியிருப்பு விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இரணைப்பாலை சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பரந்தாமன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முற்பகல் 10 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் உடுப்புக்குளம் அலை ஓசை விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து முள்ளியவளை விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இளந்தென்றல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உதிக்கும் திசை விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. முல்லைத்தீவு சென்.யூட் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பாரதிதாசன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)



வடக்கு மாகாண பாடசாலை அணிகளின் 15 வயதுப் பிரிவுப் பெண்களுக்கிடையே நடத்தப்பட்ட மேசைப் பந்தாட்டத் தொடரில் இரண்டாம் இடத்தைப் பெற்ற ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை அணி வீரங்கனைகள் கோட்டக் கல்வி பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர், பொறுப்பாசிரியர்களுடன். (ந-23)



# எல்லோரது நன்மைகளுக்காகவும் வாழ்வோம்!



அன்புக்கும் மரியாதைக்கும் உரிய இஸ்லாமிய உறவுகளே! உங்கள் அனைவருக்கும், அஸ்ஸலாமு அலைக்கும் வரஹ்மதுல்லாஹி வபரகாதுஹு"

மகிழ்ச்சிகரமான இந்தச் சந்தர்ப்பத்திலே தங்களோடு ஒருவனாக ஈகைத் திருநாள் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன். இந்தத் தேசத்தில் இன்றைய திகதியில் எமது எதிர்பார்ப்புகள் எல்லாம் எமது தேசத்தில் கௌரவமான பிரஜைகளாக, இந்த தேசத்தின் நலன்களை முதன்மைப்படுத்துகின்ற சமூகமாக, உண்மை, நேர்மை, மனிதநேயம், நீதி மேலோங்க உழைக்கின்ற சமூகமாக, அமைதி, சமாதானம், சகவாழ்வு, நிலைத்து நிற்கும் அபிவிருத்தி காணுகின்ற தேசத்தின் பங்காளிகளாக வாழ்வதேயாகும். இதற்கு நாம் அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இதுவரை காலமும் எமது சமூகத்தின் வரலாறு மிகச் சிறப்பான உள்ளடக்கங்களைக் கொண்டிருக்கின்றது; என்றாலும் அண்மைக் காலமாக அதன் தோற்றத்தில் மாறுதல்களை ஏற்படுத்த விசமமான முயற்சிகள் முடுக்கி விடப்பட்டிருக்கின்றன.

இவற்றை நாம் துல்லியமாக அறிந்து கொள்ளுதல் வேண்டும். நிலை தடுமாறி எமது இயல்புகளை மீறி, மார்க்கத்தின் வழிகாட்டல்களை புறந்தள்ளிவிட்டு வேறு ஒரு வழியில் நாம் பயணிப்பது பொருத்தமற்றது. எனவே நிதானமான போக்கில் எமது மார்க்கத்தின் இயல்புகளோடு, எமது மக்களின் அபிலாஷைகளோடு இயைந்த ஒரு வழிமுறை குறித்து நாம் சிந்திக்கின்றோம்.

இத்தகைய நல்ல சிந்தனைகளைச் சுமந்தவர்களாக இந்த ஈகைத் திருநாளை நாம் எல்லோரும் நோக்குவோம். உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் மனிதாபிமான அவஸ்தைகளை எதிர்கொண்டுள்ள அனைத்து மக்களுக்காகவும் அவர்களது விடுதலைக்காகவும் நாம் பிரார்த்திப்போமாக. குறிப்பாக பலஸ்தீனத்தின் காஸா மண்ணில் அரங்கேறும் அடக்குமுறைகள் உடனடியாக முடிவுக்கு வருவதற்காகவும் பிரார்த்திப்போமாக. ஈத் முபாரக் ஈகைத் திருநாள் வாழ்த்துக்கள்.

*அ. அஸ்மின், வடக்கு மாகாண சபை உறுப்பினர்.*






## ஈதுல்பித்ர் இனிய வாழ்த்து



இன்று நாம் அனைவரும் ரமழான் மாதத்தை அரவணைத்து பசித்திருந்தும், தாகித்திருந்தும், இறை திருப்தியைப் பெற்றுக் கொள்வதற்காக பல நற் செயல்களைச் செய்தும் வணக்கங்களில் ஈடுபட்டும் சந்தோஷமாக ஈதுல்பித்ர் இனிய பெருநாளைக் கொண்டாடும் மகிழ்ச்சியில் திளைத்துக் கொண்டிருக்கின்றோம். 'அல்ஹம்துலில்லாஹ்'.

இந்த வேளையில் முஸ்லிம்களாகிய எமக்கு இந்தப் பெருநாள் முக்கியத்துவமிக்க முதல் பெருநாளாகவும் வந்துள்ள இந்தப் புனிதம் மிக்க பெருநாள், சாந்தியையும் சமாதானத்தையும், சகோதரத்துவத்தையும் ஏற்படுத்தும் உன்னத நாளாக விளங்குவதால், இவற்றை முறையே பேணி ஒழுகி நாம் அனைவரும் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும் வாழ்ந்து வளம்பெற அல்லாஹ்வைப் பிரார்த்திப்போம்.

இஸ்லாமிய வாழ்க்கை முறைக்கான பயிற்சியைக் கற்றுத் தந்துள்ள நோன்பின் மூலம் பொறுமை, நேர்மை, நன்னடத்தை, சகிப்புத் தன்மை, உளத்தூய்மை, மனித நேயம் என்பவற்றைப் பெற்றுள்ள நாம், நடைமுறையில் அவற்றை நடைமுறைப்படுத்தி வாழ வேண்டும் என்று ஈண்டு கூறி, அதிகாலை எழுந்து குளித்து புத்தாடை புனைந்து நறுமணம் கமழக் காத்திருந்து நோன்பிலிருந்து தோளோடு தோள் சேர்ந்து தொழுது முஸா பஹா செய்து செழுமை பெற காத்திருக்கும் அனைவருக்கும் எனது 'ஈதுல் பித்ர்' இனிய பெருநாள் வாழ்த்தை அன்போடு தெரிவித்துக் கொள் கின்றேன்!!

'ஈத்முபாரக்', அல்லாஹு அக்பர்.

அல்ஹாஜ் மௌலவி,
ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி)
(யாழ்/கிளி/ உலமா சபைத் தலைவர்.)



## முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ இறைவனிடம் கையேந்துவோம்

இன்று புனித நோன்புப் பெருநாளான ஈதுல் பித்ர் ஈகைத் திருநாளைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன். ஈத் முபாரக்.

நோன்புப் பெருநாள் ஈகையை வலியுறுத்தும் நன்னாள். இந்த நாளில் எம்மிடம் இருப்பவற்றை மற்றவர்களுடன் பகிர்ந்து மற்றவர்களையும் மகிழ்வுறச் செய்வதே இன்றைய நாளின் சிறப்பாகும்.

ஒரு மாதம் முழுவதும் இறைவனுக்காகப் பகல் முழுவதும் நோன்பு நோற்று இரவு நேரங்களில் இறை வழிபாட்டில் ஈடுபட்ட மக்களுக்கு இந்த உலகில் இறைவன் கொடுக்கும் பரிசான இன்றைய தினத்தை நாம் வீணான காரியங்களில் ஈடுபடாது உலக முஸ்லிம்களின் ஈடேற்றத்துக்கான பிரார்த்தனைகளில் கழிப்பதே மேலானதாகும்.

உலகம் முழுவதும் முஸ்லிம்கள் பரந்து விரிந்து வாழுகின்றனர். ஆனால் இன்று முஸ்லிம்கள் வாழும் தேசங்கள் கொந்தளிப்பு மிக்கதாகவே உள்ளன. ஏதோ ஒரு வகையில் உலகம் முழுவதும் எல்லா நாடுகளிலும் முஸ்லிம்கள் அமைதி இழந்து நிம்மதி இழந்து அடக்குமுறைகளுக்கும் அநியாயத்துக்கும் முகம் கொடுத்தவர்களாகவும் அவற்றை எதிர்த்து போராடிக்கொண்டு இருப்பவர்களுமாகவே வாழ்ந்து வருகின்றனர். இலங்கை முஸ்லிம்கள்கூட முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு இந்த ஆட்சியின் கீழ் நெருக்கடிகளுக்கும் அநீதிகளுக்கும் முகம் கொடுத்தவர்களாகவும், அமைதி இழந்தவர்களாகவுமே வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலை மாற வேண்டும். உலக முஸ்லிம்கள் அனைவரும் நிம்மதியாகவும் சமாதானமாகவும் மகிழ்ச்சியாகவும் அநீதிகளில் இருந்து விடுதலை பெற்றவர்களாகவும் வாழும் நிலை உருவாக வேண்டும். அதற்காக இன்றைய தினத்தில் நாம் எல்லோரும் எமது விஷேட தொழுகைகளின் பின் இறைவனிடம் கையேந்த வேண்டும்.

எல்லாம் வல்ல அல்லாஹ் எம் எல்லோரினதும் பிரார்த்தனைகளை ஏற்றுக்கொள்வானாக. ஆமீன் ஈத் முபாரக்.

*அஸாத் சாலி,*
தேசிய ஐக்கிய முன்னணி தலைவரும்
மத்திய மாகாண சபை உறுப்பினரும்.

ஈத் முபாரக் நோன்புப் பெருநாள் சிறப்புற வாழ்த்துகின்றோம்.
JEWEL PLAZA
JP
Specialists in Finest Quality & Latest Jewellery
Western Union Money Transfer
மூலம் சகல நாடுகளுக்குமான வெளிநாட்டு
பணப்பரிமாற்றம் எம்மால் செய்து கொடுக்கப்படும்.
No.373, BAZAAR STREET,
VAVUNIYA.
T.P. 024 222 2392
(C/15114)(7.6.3)

MULTI
TIMBER
DEALERS
அன்பர்கள், ஆதரவாளர்கள்,
வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும் எமது ரமழான்
நோன்பு பெருநாள் வாழ்த்துக்கள்
Importers of pine wood, Kempas,
Malaysian Sawn Timber And All Kinds of
Local Sawn Timber
License No:- 11/321
758, K.K.S.றோட், தட்டாதெரு, யாழ்ப்பாணம்.
(நிலாம்பரி சாப்பாட்டுக்கடை அருகில்)
TP: 0772612453/0773866173/0212217220/0773868675

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும்
எமது ரம்ழான் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்.
நுஹா கேட்டின் பெஷன்
Nuha Curtain
Fashion
M.NIFAHIR
Propeuieton
Curtani & Cushion
Works
web:www.jaffnafashion.com
Mob:077 760 6262 / 077 7622061
e-mail:nifahir2000@gmail.com
26, மேற்கு சந்தை,
பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது ரம்ழான் நோன்புப் பெருநாள் வாழ்த்துக்கள்
நோன்புப் பெருநாள் சிறப்புற வாழ்த்துகிறோம்.
யாழ் மண்ணில்
A/L இன் பின்னர்
சவால்களை வெல்லும்
சர்வதேச கல்வித் தகைமைகள்
BTEC HND in
BIOMEDICAL
SCIENCE
Leading to BSc (Hons) from UK universities
LLB (Hons) in
LAW
Why Choose BCAS for Law?
edexcel
GCE (O/L) தகைமையுடன்...
Engineer
BTEC National Diploma In
Engineering
BTEC HND in...
> Computing & Systems Development
> Quantity Surveying
> Civil Engineering
> Business Management
> Biomedical Science
> Law
> Pshycology
Leading to BSc (Hons) / LLB (Hons) / BA (Hons) / BEng (Hons)
(C/15115)(7.6.3)
மேலதிக விபரங்களுக்கு
BCAS
CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
16, Point Pedro Road,
Jaffna.
0777 102 131 / 077 311 4105
Email : info@bcas.lk
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Qatar
www.bcas.lk

## ஆடிப்பூரத் திருவிழா

நயினாதீவு அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் திருக்கோயில் ஆடிப்பூரத் திருவிழா நாளை 30 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது. (க)

## சமயசந்நிதி

கரணவாய், ஜூலை 29

கரணவாய் வடக்கு, நவிண்டில் சிவகாமி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

நாளை புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும், நாளை மறுதினம் வியாழக்கிழமை பூங்காவனமும் இடம்பெறும். (ஒ)

♦♦♦

கொழும்புத்துறை ஸ்ரீபழனியாண்டவர் திருக்கோயிலின் வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் இடம்பெறும். அடுத்த மாதம் 10ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு சங்காபிஷேகமும் தொடர்ந்து மு.ப.11 மணிக்கு தீர்தோற்சவமும் இடம்பெற்று மகேஸ்வர பூசை நடைபெறும். (க-17)

♦♦♦

மிருசுவில் படித்த மகளிர் திட்டம் துர்க்காபுரம் அருள்மிகு ஸ்ரீ ஞான துர்க்கை அம்மன் தேவஸ்தான அலங்கார உற்சவம் எதிர்வரும் முதலாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 09 ஆம் திகதி சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் 10 ஆம் திகதி தீர்த்த உற்சவமும் இடம்பெறவுள்ளன. (க)

## முன்பள்ளி விளையாட்டு விழா

புதுக்குடியிருப்பு, ஜூலை 29

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு முதலாம் வட்டாரம் வேணாவில் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று செவ்வாய்க்கிழமை முன்பள்ளி ஆசிரியை திருமதி தயாகுமாரி மனோகரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் முன்பள்ளிகளின் உதவிக் கல்விப் பணிப்பாளர் ஜேம்ஸ் சுபாபதி முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஒ-18)

## விளையாட்டுப் போட்டி

வவுனியா நெளுக்குளம் சந்தியில் அமைந்துள்ள முன்பள்ளியின் இந்த ஆண்டுக்கான விளையாட்டுப்போட்டி நாளை மறுதினம் 31ஆம் திகதி காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

முன்பள்ளியின் தலைவர் க.துவாரகன் தலைமையில் இடம்பெறவிருக்கும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக இ.இந்திரராஜா கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.தர்மபாலன், நெளுக்குளம் கிராம அலுவலர் க.கணேசலிங்கம், வவுனியா தெற்கு பிரதேச சபை உறுப்பினர் க.பரமேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (க)



யாழ். முனீஸ்வரன் வீதியில் புல்லுக்குளத்துக்குச் செல்லும் பிரதான வடிகால்வாய் துப்புரவு செய்யப்படாததால் அந்தப் பகுதி எங்கும் துர்நாற்றம் வீசுகிறது, கழிவுப் பொருள்கள் தேங்கிக் கிடப்பதால்தான் இந்த நிலைமை. வடிகால்வாயில் கழிவு நீர் குளத்துக்கு வழிந்தோடச் செய்தால் நிலைமை சீராகி விடும். சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவார்களா? (ஒ-17)

## நெஞ்சக் கதவைச் கொஞ்சம்........

## அகலக்கால் அழிவுக்கே

வங்கி வட்டி வீதங்களைக் குறைக்கும்படியும் அதிகரிக்கும்படியும் விடுக்கப்பட்ட இருவேறு கோரிக்கைகளுக்கமைய வங்கி வட்டி வீதங்களில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பில் அரசு ஆராயவுள்ளதாக ஒரு தகவல். "வட்டி, சீட்டுக்கட்டல் ஆகியன சட்ட விரோதமானவை, அவற்றைச் செய்ய வேண்டாம்" எனப் பொலிஸார் எச்சரித்துள்ளதாக ஒரு தகவல். திருமலை தனியார் நிதி நிறுவனங்களின் அதிகரித்த வட்டியினால் பாதிக்கப்படுவோரில் ஒரு சிலர் தற்கொலைக்கு முயற்சிக்கின்றனர் என்று மற்றொரு தகவல். இத்தகவல்களுக்கிடையே ஒரு வகை இணைப்பு ஒடி வேர் விடுகிறதே. வங்கிகளின் வட்டி வீதம் பொது மக்களுக்குச் சாதகமாக அமையாதுவிடின் இந்த மாதிரியான பொலிஸ் எச்சரிக்கைகளும் பெறுமதி இழந்துவிடலாம்.

வடக்கின் திணைக்கள அதிகாரி ஒருவர் தன்னுடன் பணிபுரியும் தன் சமூகம் சாரா ஒருவருடன் அன்னியோன்னியமாகவிருந்தார். இறக்குமதி வர்த்தகரான தமது உறவினரிடம் தான் கொடுத்திருக்கும் 10 லட்சம் ரூபாவுக்கு மாதம் 50 ஆயிரம் ரூபா வட்டி கிடைப்பதாகவும் அவர் சொல்ல, இவரும் 5 லட்சத்தை வட்டி ஆசையில் தூக்கிக் கொடுத்தார். மாதாமாதம் 25 ஆயிரம் ரூபா இவரது மேசைக்கு வந்துவிடும். இப்படி 20 மாதங்கள் வட்டி வந்தது. அதன்பின் 4 மாதங்களாக பேய்க்காட்டிய நண்பர் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட, இவரோ இளைத்து எலும்பாகி திரும்பி வரமுடியாத இடத்துக்கே சென்றுவிட்டார்.

இங்கு சிலரை "எழுப்பத்திருவிழாக்காரன்" என்பார்கள். ஒருவர் பெரிய வீடு கட்டினால், கார் வாங்கினால், கடை போட்டால், சீட்டுப்பிடித்தால் தன்னிலை உணராது, தானும் அவர் போலாக எண்ணி, அகலக்கால் வைத்து அழிந்து போனதுண்டு. எம்மவர்களில் சிலர் எழும்பியதும் விழுந்ததும் வட்டியாலும் சீட்டாலும்தானே. எழும்பியவர்களிடம் ஈவு இருந்தது, நாணயம் இருந்தது. விழுந்தவர்களிடம் கபடம் இருந்தது, ஆசாட பூதித்தனம் இருந்தது. "ஏமாற்றப் பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்க முடியாது" எனும் பொலிஸ் எச்சரிக்கை ஞாபகம் வருமோ இல்லையோ, பட்டுக் கெட்டவர்களைப் பார்த்தாவது பக்குவப்பட்டுக் கொள்வது மேல்.

செல்வவேலாயுதம்.

## தூய தமிழில் பிள்ளைக்கு பெயர் சூட்டிய குடும்பத்துக்கு கௌரவிப்பு

கரணவாய், ஜூலை 29

தமது பிள்ளைக்குத் தூய தமிழில் பெயர் சூட்டிய இமையாணன் பகுதியைச் சேர்ந்த இளம் குடும்பம் ஒன்றுக்கு இமையாணன் அ.த.க. வித்தியாலய பழைய மாணவர் நலன்விரும்பிகள் சங்கத்தின் சுவிஸ் கிளையால் பணப்பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

இமையாணன் அ.த.க. பாடசாலையின் பழைய மாணவர் நலன்விரும்பிகள் சங்கத்தால் தூயதமிழில் பிள்ளைகளுக்கு பெயர் சூட்டும் குடும்பங்களுக்கு ஊக்குவிப்பதற்காக நிதி அன்பளிப்பாக வழங்கும் செயற்றிட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இமையாணன் பூவத்தோட்டத் தைச் சேர்ந்த ஜெகன்-சிவாஜினி தம்பதியினர் தமது பிள்ளைக்கு "பார்கவி" என்ற தூய தமிழில் பெயர் சூட்டியுள்ளனர். அதனை அடுத்து அந்தக் குடும்பத்துக்கு சுவிஸ்கிளையினரால் 3 ஆயிரம் ரூபா ஊக்குவிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நிதியானது நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இமையாணன் அ.த.க.பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தின் பொதுக்கூட்டத்தில் வைத்து வழங்கப்பட்டது.

பழைய மாணவர் சங்கத் தலைவர் சி.வசந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் வித்தியாலய அதிபர் கு.ரவீந்திரா, சுவிஸ் நலன்புரி சங்கத்தின் செயலாளர் வெ.ரவீந்திரன் ஆகியோர் பிள்ளையின் தந்தையாகிய செ.ஜெகனிடம் பணத்தைக் கையளித்தனர்.

சுவிஸ் கிளையினரின் இந்த முயற்சியை அனைவரும் பாராட்டினர்.

இதேவேளை தூய தமிழில் பெயர் சூட்டும் குடும்பங்களுக்குத் தொடர்ந்தும் இந்த நிதி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-108)

## நடமாடும் விற்பனை நிலையம்

யாழ்ப்பாணம், ஜூலை 29

நல்லூர்க் கந்தன் உற்சவ காலத்தை முன்னிட்டு பனை அபிவிருத்தி சபை விசேட நடமாடும் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தவுள்ளதாக சபையின் தலைவர் பசுபதி சீவரத்தினம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்;

சபையின் கற்பகம் விற்பனை நிலையம் ஏற்கனவே நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ளது. ஆலய உற்சவ காலத்தில் ஆலய சுற்றாடலில் மேலும் இதே போன்றதொரு விற்பனை நிலையம் அமைக்கப்படும்.

அத்துடன் வாகனம் மூலம் ஆலய சுற்றாடலில் பனம் பொருள் நடமாடும் விற்பனை சேவையை நடத்தவும் சபை தீர்மானித்துள்ளது.

குடாநாட்டில் உற்பத்தி செய்யப்படும் பனம் உற்பத்திப் பொருள்கள் மற்றும் கைப்பணி பொருள்களை இந்த முறை நியாய விலையில் மக்களுக்கு சந்தைப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-17)

## வெண்டியில் ஏற்பட்டுள்ள பீடை

யாழ்ப்பாணம், ஜூலை 29

யாழ்.குடாநாட்டில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட வெண்டிப் பயிர்கள் மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

தற்போதைய கடும் வறட்சி மற்றும் வெப்பத்தின் காரணமாகவே வெண்டிப் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை - யாழ்.விதை உற்பத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் விதை உற்பத்தி வளாகத்தில் உள்ள வெண்டிப் பயிர்களும் மஞ்சள் நோயின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் உற்பத்தி செய்யப்பட்ட பால் வெண்டியில் அரை ஏக்கரில் உள்ள வெண்டிப் பயிர்கள் மஞ்சள் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட வெண்டிப் பயிர்கள் உடனடியாக பிடுங்கி அழிக்கப்பட்டன. (க-17)

## தென்மராட்சி மாணவருக்கான மருத்துவ பரிசோதனை முகாம்

தென்மராட்சி, ஜூலை 29

தென்மராட்சி கல்வி வலய பாடசாலை மாணவர்களுக்கான "நேசமுடன்" மருத்துவ பரிசோதனை முகாம் நாளையும் நாளை மறுதினமும் நடத்தப்படவுள்ளது. நாளை கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரியிலும்- நாளை மறுதினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மண்டபத்திலும் இடம்பெறும்.

'வேள்ட் விஷன்' நிறுவன அனுசரணையுடன் தென்மராட்சி கல்வி வலயத்தினர் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்துடன் இணைந்து "சிறுவர் உரிமைகளை வலுவூட்டும் நோக்குடன் அவர்களது உடல், உள, ஆரோக்கிய மேம்பாட்டுக்கான பயணம், என்னும் மருத்துவ பரிசோதனை முகாமை நடத்தவுள்ளனர்.

பரிசோதனை முகாமில் மாணவர்களுக்கு கண், காது, மூக்கு, தொண்டை, பல், பொது வைத்தியம், தோல், உடற்திணிவுச் சுட்டெண், பொது விவேகம் ஆகியவை வைத்திய நிபுணர்களாலும், மருத்துவர்களாலும் பணியாளர்களால் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளனர்.

இந்த முகாமில் 600 மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் பரிசோதனை முகாமின் முதல் நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண சுகாதார சுதேச வைத்தியத் துறை அமைச்சின் செயலாளர் இ.ரவீந்திரனும் சிறப்பு விருந்தினராக 'வேள்ட் விஷன்' நிறுவன யாழ்.மாவட்ட திட்ட முகாமையாளர் ஏ.ஜீ.றொளரசை ரோவும்-

இரண்டாம் நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், சிறப்பு விருந்தினராக 'வேள்ட் விஷன்' நிறுவன வலய முகாமையாளர் ஜே.ஏ.ரமேஸ்குமாரும் கலந்து கொள்வர்.

தென்மராட்சி கல்வி வலய வழிகாட்டலும் ஆலோசனை வழங்கலும், பகுதியினர் மருத்துவ முகாமுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## மதுவரித் திணைக்களத்தினரால் போதைப் பொருள்கள் மீட்பு

வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தினர் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை காரணமாக வவுனியாவில் 115 மில்லி கிராம் ஹெரோயினும், முல்லைத்தீவில் 5 கஞ்சாப் பொதிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 21ஆம் திகதி வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் பிரகுநாதன் தலைமையில் வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றி வளைப்பு மற்றும் தேடுதல் நடவடிக்கையின் போது 80 மில்லி கிராம், 15 மில்லி கிராம், 20 மில்லி கிராம் என்ற அளவில் ஹெரோயின் வைத்திருந்த மூவர் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட மூவரையும் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் பொலிஸார் முன்னிலைப்படுத்தினார்கள். மூவரும் குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து அவர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மறுநாள் 22ஆம் திகதி உதவி மதுவரி ஆணையாளர் சுமேத வசந்த ஸ்ரீயின் பணிப்புரைக்கமைய முல்லைத்தீவு மாவட்டத்தில் வவுனியா மாவட்ட மதுவரித் திணைக்களத்தினரால் கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 5பேர் கைது செய்யப்பட்டனர். ஐவரையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ம.கணேசராசா முன்னிலையில் முன்னிலைப்படுத்திய போது அவர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் அவர்களுக்கு தலா 10ஆயிரம் ரூபா செலுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (க-108)

## முதலாவது ஆண்டு தினம் இன்று

யாழ்ப்பாணம், ஜூலை 29

வடக்கு கல்விசார் தலைமைத்துவப் பயிற்சி நிலையத்தின் (NALTC) முதலாவது ஆண்டு தினம் இன்று 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் நாவலர் வீதியிலு ள்ள தியாகி அறக்கொடை நிறுவன மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா இதில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

கௌரவ விருந்தினராக முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப் பணிப்பாளர் கே.விமலநாதன் கலந்து கொள்வார். (க)

# உதயதாரகை வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது திக்கம் இளைஞர் அணி

யாழ்ப்பாணம், ஜூலை 29

கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடத்திய 11பேர் பங்கு பற்றும் வில கல் முறையிலான உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டத்தில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கற்கோவளம் உதயதாரகை விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம் பெற்ற இறுதியாட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதற்பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்காகக் கோல்களைப் பெறுவதற்காகக் கடுமையாகப் போராடினர். இதன் போது திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி வீரன் சதீஸ்குமார் 10 ஆவது நிமிடத்தில் தனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தித் தனது அணிக்கான முதலாவது கோலை அடித்தார். பதிலுக்குப் பலாலி விண்மீன் விளையாட் டுக்கழக அணியினர் கோலை அடிக்கவேண்டும் என்று எதிர் அணியின் கோல் பரப்பை முற்றுகையிட்ட வண்ணம் இருந்தனர். அவர்களால் எது வித கோல்க ளையும் பெற முடியவில்லை. இதனால் முதற்பாதி ஆட்டம் இடை வேளைக்காக இடை நிறுத் தப்பட்ட போது திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமானபோது இரண்டு அணியினரும் தத்தமது அணிக்கான கோலைப் பெறுவதற்காக ஆட்டத்தின் வேகத்தை அதிகரித்தனர். இதன் போது பலாலி விண்மீன் விளையாட்டுக்கழக அணி வீரன் யூட் கெனடி தனது அணிக்கான கோலை அடிக்க ஆட்டம் சூடு பிடிக்கத் தொடங்கியது.

இரண்டு அணியினருக்கும் கோல் பெறச் சந்தர்ப்பங்கள் கிடைத்தபோதும் அதனை அவர்கள் சரியாகப் பயன்படுத்தவில்லை. இதனால் ஆட்ட நேர முடிவில் இரண்டு அணியினரும் தலா ஒரு கோலைப் பெற்றமையால் ஆட்டம்சமநிலையில் முடி வடைந்தது.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்காகச் சமநிலை தவிர்ப்பு உதைகள் வழங்கப்பட்டன. இதில் திக்கம் இளைஞர் விளையாட்டுக்கழக அணி 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

சிறந்த வீரனாகத் திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழக அணி வீரன் கிருஷ்ணன் சதீஸ் குமார் தெரிவானார்.

சிறந்த கோல் காப்பாளராக பலாலி விண்மீன் விளையாட்டுக் கழக அணி வீரன் அனஸ்ரி டினேஸ் தெரிவானார். (த-23)


## மரண அறிவித்தல்

### செல்லையா சச்சிதானந்தம் ஆச்சாரியார்



(சின்னக்குஞ்சன்)

தெல்லிப்பழை மடத்தடியை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை மாதனையை வதிவிடமாகவும் கொண்ட செல்லையா சச்சிதானந்த ஆச்சாரியார் (சின்னக்குஞ்சன்) நேற்று (28.04.2014) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் காலமனார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா-பாக்கியம் தம்பதியரின் அருமை மகனும், தனேஸ்வரியின் அன்புக்கணவரும், தனராஜ், ஜானகி ஆகியோரின் பாசமிகு தந்தையும், கோபால் ஆச்சாரியாரின் பெறாமகனும், காலஞ் சென்ற சாம்பசிவம்-சிவபாக்கியம் தம்பதியரின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2014) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2 மணியளவில் பருத்தித்துறை கோரியடி மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.

(சி/15262)(10)



## JAFFNA MEDICAL ASSOCIATION ANNUAL GENERAL MEETING 2014. NOTICE OF MEETING

Notice is hereby given that the **Annual General Meeting** of the **Jaffna Medical Association** will be held on **Friday, 29th August 2014 at 2.00 pm at the Lecture hall of Nursing Training School, Jaffna.** for the following Purposes.

1. To receive and consider the Annual Report of the Committee of Management on the affairs of the Company and the Statement of Accounts for the year ended 31st December 2013 and the Report of the Auditors there on
2. To Consider any resolutions proposed by members and committee where due Notice has been given
3. To Consider any other Matters where due notice has been given
4. To Elect the Committee of Management for Year 2014/15
5. To Appoint the Auditors of the Association and to authorize the Committee of Management to datermine their remuneration.

By order of the Committee of Management,

**Hony.Secretary.**

(50335) (10)



## விற்பனைக்கு

Printers, TVS, கைத்தொலைபேசிகள், குளிரூட்டிகள், இலத்திரனியல் தட்டச்சு இயந்திரம், Ice Cream Machines, மடிக்கணனிகள், Tablets, PCs, Grinders, Copy Machines, Juicers and Laminating Machines.

## கட்டம் வாடகைக்கு

4250 சதுர அடி பரப்பளவுள்ள சகல விதமான வியாபார நட வடிக்கைகளுக்கும் ஏற்புடைய கட்டடம் யாழ். மத்திய பகுதிக்கு அருகாமையில் சகல வசதிகளுடனும் நீண்ட கால குறுகிய கால அடிப்படையிலான வாடகைக்கு விடப்பட்டவுள்ளது.

தொடர்புகளிற்கு : 0765 344694



## மரண அறிவித்தல்



### தம்பையா சிவராசா

புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகவும் வள்ளிபுனம் பாடசாலை அருகாமையைத் தற்போதைய முகவரியாகவும் கொண்ட முன்னாள் புதுக்குடியிருப்பு தேவிபுரம், வள்ளிபுனம் கிராம அலுவலர் தம்பையா சிவராசா 24.07.2014 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோடீஸ்வரன் (தேவிபுரம் சந்தி- புதுக்குடியிருப்பு), சிங்கேஸ்வரன் (கனடா), இலங்கேஸ்வரன் (பிரான்ஸ்), ஜெயந்தினி (சுவிஸ்), குமுதினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.07.2014) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணிக்கு அவரது தற்போதைய வதிவிடத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக புதுக்குடியிருப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

தகவல்: குடும்பத்தினர்.

(41336)(10)


## இராணுவ அணி வெற்றி

யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தலைமையகமும் ஐக்கிய அமெரிக்க நாட்டின் உதைபந்தாட்ட வெளிவாரிச் சேவை நிறுவனமும் இணைந்து வடமராட்சி உதைபந்தாட்ட வீரர்களுக்காக நடத்திய மூன்று நாள் பயிற்சி முகாம் நிறை வில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் இலங்கை இராணுவப் படையணியின் கஜபாகு பிரிவு வெற்றி பெற்றது.

வடமராட்சி கரவெட்டி மைக்கல் விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் இடம் பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி வதிரி டயமன்ஸ் விளையாட் டுக் கழக அணியும்இராணுவத்தின் கஜபாகு தெரிவு அணியும் மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் கஜபாகு தெரிவு அணி மூன்று கோல்களைப் பெற்று முன்னிலையில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் கோல்கள் எதனையும்பெற முடியாத நிலையில்ஆட்டம்முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் கஜபாகு இராணுவ அணி 3:0 என்ற கோல் கணக்கில வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழக அணியை வென்றது. (த-86)


## உதயன்

விளம்பரத் தொடர்புகளுக்கு

advt@uthayan.com

0215671111



## 31 ஆம் நினைவு நாளில் துயர் பகிர்வு

### அமரர் ம. அன்ரன் அருளேஸ்வரன்



மதிப்புக்குரிய எம் பங்குத் தந்தை அருட்பணி ம. றெஜி இராஜேஸ்வரன் அவர்களின் அன்புச் சகோதரன் அமரர் ம. அன்ரன் அருளேஸ்வரன் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்ப உறவுகளுக்கு எம் அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆன்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றேம்.

பொதுநிலையினர் கழகம்

யாழ். அடைக்கல அன்னை ஆலயப் பங்கு (OLR) யாழ்ப்பாணம்



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### இராயப்பு பாக்கியநாதர்

தோற்றம்
24.11.1936

மறைவு
29.06.2014

அன்பின் உருவாய்
பண்பின் உறைவிடமாய்
பாசத்தின் ஊற்றாய்
பகலிரவாய் பாடுபட்டு உழைத்து
வாழவைத்து எமை உயர்த்தி
விட்ட- உத்தமரே
பார்க்கும் இடமெல்லாம்
உம் பாசமுகம் தெரிகின்றதே
பப்பா
உமைக் காணாது கலங்குகின்றோம்
-நாம்
என்றும் மாறாது உம் நினைவுகள்

கடந்த 29.06.2014 அன்று இறைபதமடைந்த அமரர் பாக்கியநாதர் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு எமக்கு எல்லா வழிகளிலும் அனுதாபம் தெரிவித்து இறுதிவரை எம்மோடு துயர் பகிர்ந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும், வைத்தியசாலையில் இருந்த போது எல்லா வழிகளிலும் உதவி புரிந்த வைத்திய சாலை சமூகத்தினருக்கும் எமது நன்றி களைத் தெரிவித்துக் கொள்வதோடு இன்று (29.07.2014) செவ்வாய்க் கிழமை 6 மணியளவில் புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி திருப்பலியில் கலந்து கொள்வதோடு இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.29,
வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் வாடும்
குடும்பத்தினர்.

(50339)(10)



## மரண அறிவித்தல்



### சின்னையா தியாகேஸ்வரன்

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் கரணவாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா தியாகேஸ்வரன் (கணக்காளர், டுபாய்) நேற்று (28.07.2014) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர் களான சின்னையா-நல்லம்மா தம் பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான சின்னத்துரை- முத்தம்மா தம்பதியரின் மருமகனும், வள்ளிப்பிள்ளையின் அன்புக் கணவரும், தியாகேஸ்வரி, மகாலிங்கம் (ஓய்வு பெற்ற நில அளவையாளர்), மகேந்திரன் (ஓய்வுநிலை அதிபர்), கிருஷ்ண லீலா (கனடா), சிவ ஞானம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசக்தி (ஆஸ்தி ரேலியா), விஸ்ணுவேணி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், உதய சூரியன் (சுவிஸ்), சுகன்யா (ஆஸ்திரேலியா) ஆகியோரின் மாமனும், சித்தாத், நேகா, வத்சன், அக்சயா, அஜந் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (30.07.2014) புதன்கிழமை முற் பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக் காக எள்ளம்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

கரணவாய் மத்தி, கரவெட்டி. (49717)(10) T.P: 076 623 8341

## மின் தடை பற்றிய அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 29

கடந்த ஞாயிறன்று நடைமுறைப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த குறிப்பிட்ட சில இடங்களுக்கான மின் தடை இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை செயற்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தலங்காவில், திருநெல்வேலி, பரமேஸ்வரா சந்தி, கந்தர்மடம், இலுப்பையடி, ஆரியகுளம், ஸ்ரான்வீதி, ஆஸ்பத்திரி வீதியின் ஒரு பகுதி, பருத்தித்துறை வீதியின் ஒரு பகுதி, விஞ்ஞானபீடப் பகுதி, பழம் வீதி, வைமன் வீதி, நாவலர் வீதியில் கைலாசபிள்ளையார் கோவிலிலிருந்து அம்பலவாணர் வீதி வரை, இராசாவின்தோட்டம், சுண்டுக்குளி, கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதியில் மாட்டின் வீதி சந்தியில் இருந்து ஏ-9 வீதி வரையான பகுதிகளிலே மின்தடை ஏற்படும் என்று யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஓ)



மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இரு தாய்மார் ஆறு குழந்தைகளை பிரசவித்துள்ளனர். சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் இந்தப் பிரசவங்கள் இடம்பெற்றுள்ளன. மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் வரலாற்றில் முதன்முறையாக இரு தினங்களில் ஆறு குழந்தைகள் பிரசவிக்கப்பட்டுள்ளன. (ற)

## இன்று வண்ணை வாலாம்பிகைக்கு தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 29

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற யாழ். வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய தேவி மஹோற்சவத்தின் தேர்த் திருவிழா இன்று நடைபெறவுள்ளது. காலை 7.30 மணிக்கு நடைபெறும் வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு அம்பாள் தேரில் எழுந்தருளுவார். (த)

## தொடர்ச்சிகள்

### அனைவரும்

பான தினத்தில் முஸ்லிம் மக்கள் மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும் தமது கொண்டாட்டங்களை மேற்கொள்ளவும், நல்லிணக்கத்தோடு ஒன்றுபட்டு இந்த மண்ணின் அபிவிருத்திப் பங்காற்றவும் வாழ்த்துகின்றேன். - இவ்வாறு தனது நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன்.

நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

"றம்ழான் மாதம் முழுவதும் பகல் வேளைகளில் உண்ணாமல், பருகாமல் பசித்திருந்து, இரவு வேளைகளில் இறைவனை நின்று வணங்கி ஒரு உன்னதமான கடமையை நீங்கள் எல்லோரும் நிறைவேற்றி அதன் இறுதியில் பெருநாளைக் கொண்டாடுகின்றீர்கள். இந்துக்களும் கிறிஸ்தவர்களும் கூட விரதங்களுக்கு முக்கிய இடம் அளிக்கின்றார்கள். வருடத்தில் சில நாள்களை ஒதுக்கி வைத்து வாழ்தல் கிறிஸ்தவ பண்பு. நாற்பது ஆண்டுகளாக ஒவ்வொரு வருடமும் எதுவும் உண்ணாமல் நீராகாரம் மட்டும் சில குறிப்பிட்ட வேளைகளில் அருந்தி நவராத்திரி ஒன்பது நாள்களையும் கந்த சஷ்டி ஆறு நாள்களையும் கழித்து வந்த என்னை அரசியலானது சென்ற வருடம் விரதம் இருப்பதைத் தடுத்துள்ளது.

உண்மையில் நோன்புகள் விரதங்கள் ஆகியன வியப்பான ஆச்சரியம் மிக்க செயற்பாடுகளாகவும், மனிதர்களுக்குப் பயனளிக்கும் வழிமுறைகளாகவும் அமைந்திருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் உங்களோடு எனது வாழ்த்துக்களைப் பரிமாற்றிக் கொள்வது சிறப்பானது என்று கருதுகின்றேன். வடக்கு மண்ணில் முஸ்லிம்கள் எதிர்கொண்ட முன்னைய அச்சமான சூழ்நிலை தற்போது மாறியிருக்கின்றது. தமிழ் மக்களோடு அந்நியோன்யமாக வாழும் நிலை உருவாகியிருக்கின்றது. அமைந்திருக்கின்ற வடக்கு மாகாணசபை இனமுரண்பாடுகளுக்கு அப்பால் சிந்திக்கின்ற, செயற்படுகின்ற சபையாக அமைந்திருக்கின்றது. ஆனால் இரு சாராரும் இராணுவத்துக்கூடான சிங்கள பௌத்த உள்ளீடல்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. எனவே எம்மிடையே அமைதியான அர்த்தமுள்ள சமாதானத்தை உருவாக்குவதற்கும், எமது மக்களுக்கு நீடித்து நிலைக்கின்ற அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கும், சிறுபான்மை சமூகங்களின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கும் தமிழ் முஸ்லிம் உறவு மிகவும் அத்தியாவசியமாகின்றது.

இது விடயத்தில் நாம் அர்ப்பணிப்புடன் ஒன்றுபட்டு செயலாற்ற வேண்டும் என இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். இன்றைய காலகட்டம் முஸ்லிம் மக்களுக்கு பல கசப்பான நிகழ்வுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றதென்பதை நாம் அறிவோம் அதற்கு எதிராக இந்துக்கள், கிறிஸ்தவர்கள் ஏன் பல பௌத்தர்களும் கூட குரல் எழுப்பி வருகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் மனச்சோர்வடையாது இந்த நாட்டில் அமைதி நிலவவும், நல்லாட்சி ஏற்படவும் எல்லோரும் சேர்ந்து அர்ப்பணிப்புடன் செயலாற்ற வேண்டும் என்று நான் வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன்."- என்று தெரிவித்துள்ளார். (ற)

### ஒவ்வொரு

ளடக்கப்படுகின்றன. அவற்றில் தற்போது 3 மாவட்டங்களுக்கு மாத்திரமே மாவட்ட உத்தியோகத்தர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஏனைய இரு மாவட்டங்களுக்கு நியமிக்கப்படவில்லை. இந்தநிலையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு உத்தியோகத்தரை நியமிப்பதற்கான கோரிக்கை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் முன்வைக்கப்பட்டது.

மாவட்ட உத்தியோகத்தர் ஒருவரின் கீழ் 10 பிரதேச செயலகங்களை நிர்வகிக்க முடியும். வடக்கில் 34 பிரதேச செயலகங்கள் உள்ள நிலையில் மூன்று மாவட்ட உத்தியோகத்தர்கள் போதுமானதே என்று முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்திருந்தது. ஆயினும் வடக்கில் மாவட்டங்களுக்கிடையிலான தூரங்கள் மற்றும் அதற்கான நேரவிரயங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டதுடன், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு உத்தியோகத்தர் அவசியம் என்பது பற்றியும் வலியுறுத்தப்பட்டுள்ளது. அதன் பின்னர் வடக்கு மாகாணத்தின் மேற்படி கோரிக்கையை சாதகமாக பரிசீலிப்பதாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ற-5)

### இலங்கையில்

பட்டறை ஒன்றுக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற ஊடகவியலாளர் குழுவொன்று ஓமந்தை சோதனைச் சாவடியில் தடுக்கப்பட்டு விசாரணைக் குள்ளாக்கப்பட்டது. அது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்களுக்கான டிஜிட்டல் பாதுகாப்பு தொடர்பான பயிற்சி நிகழ்வு அமெரிக்க அரசின் நிதியுதவியுடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள், அதில் பங்கு பெற வந்தவர்கள் மீதான மிரட்டல் என்பவற்றால் அந்தப் பயிற்சி ரத்துச் செய்யப்பட்டது. இது தொடர்பில் இலங்கை அரசை விமர்சித்த ஊடகவியலாளர் ஒருவர் மீதான அச்சுறுத்தல் உள்ளடங்கலாக இலங்கையில் நாடு தழுவிய அளவில் இருக்கும் ஏனைய ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்களின் காரணமாக இறுதியில் இந்தப் பயிற்சி கைவிடப்பட்டது.

மே மாதம் முதல் இலங்கையில் கைவிடப்பட்ட மூன்றாவது பயிற்சி அமர்வாக இது இருக்கின்றது. இந்தப் பயிற்சிகளில் கலந்து கொள்ளும் பங்கேற்பாளர்களுக்கு ஆபத்து விளைவிப்பதாக அச்சுறுத்துவது, அவர்களுக்கு எதிராக நன்கு திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பது போன்ற நடவடிக்கைகள் மூலம் இதற்கு முந்தைய பயிற்சி அமர்வுகளுக்கு தடங்கல் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இவை தவிர காரைநகர் கடற்படைத் தளத்தில் இலங்கை கடற்படையில் கடமையாற்றுபவர்களினால் 11 வயது சிறுமி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு இலக்காக்கப்பட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் ஜூலை மாதம் 25 ஆம் திகதி, சிறுவர் நீதிமன்றில் நடைபெற்ற விசாரணைகள் குறித்த செய்திகளை சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களுக்கு எதிராகவும் பாதுகாப்பு படையினரால் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை குறித்தும் நாம் ஆழ்ந்த கவலை அடைந்துள்ளோம்.

இலங்கையில் பேச்சு சுதந்திரம் மற்றும் கூடுவதற்கான சுதந்திரத்தை தடுப்பவர்கள் தண்டனையில் இருந்து எளிதில் தப்பி வரும் மோசமான போக்கின் தொடர்ச்சியாகவே இந்த நிகழ்வுகள் இருக்கின்றது. இலங்கை அரசு மற்றும் வொஷிங்டனில் உள்ள இலங்கை தூதரகத்திடம் அமெரிக்க அரசு தனது கவலையை தெரிவித்திருப்பதுடன்,

ஊடகவியலாளர்கள் உட்பட இலங்கையில் உள்ள அனைவரின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான உடனடி நடவடிக்கைகளை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளோம்"- என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### முஸ்லிம்களின்

என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்துள்ள நோன்புப் பெருநாள் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

இன்று ஈதுல் பித்ர் நோன்புப் பெருநாளைக் கொண்டாடும் முஸ்லிம் மக்களுக்கு இந்த வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இஸ்லாமிய பாரம்பரியங்களுக்கேற்ப ஒரு முக்கியமான இஸ்லாமிய கடமையான ஒரு மாதகால நோன்பை நிறை வேற்றியதன் பின்னர் இலங்கை வாழ் முஸ்லிம்கள் பெருநாள் கொண்டாட்டத்தில் உலகெங்கிலுமுள்ள தமது சகோதர முஸ்லிம்களுடன் இன்று இணைந்துகொள்கின்றனர். இது புனித அல்குர்ஆனினதும் இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) யினதும் போதனைகளுக்கேற்ப நோன்பு, ஆன்மிகப் பெறுமானங்கள் மீதான ஆழ்ந்த ஈடுபாடு, தொடர்ச்சியான வணக்க வழிபாடுகள், தியாகங்கள் போன்ற சமயக் கடமைகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து புத்துணர்ச்சியுடன் மகிழ்வுறும் சந்தர்ப்பமாகும்.

இலங்கை வாழ் முஸ்லிம்கள் பல நூற்றாண்டுகளாக எமது நாட்டின் ஏனைய இனங்கள் மற்றும் சமயங்களைச் சேர்ந்த மக்களுடன் மிகவும் ஐக்கியமாக வாழ்ந்து கடந்த காலங்களிலும் இந்த வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். நாட்டில் இன்று நிலவும் அமைதியான சூழ்நிலை அவர்களது சமய நடவடிக்கைகளுக்கு சாதகமாக அமைந்துள்ளதுடன் சமூகத்தின் முன்னேற்றத்திற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் உதவும் வகையில் இந்த நிலைமை மேலும் பலப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கியம் மற்றும் புரிந்துணர்வுக் கலாசாரத்தில் நாட்டின் முன்னேற்றத்திற்காக இலங்கை முஸ்லிம் சமூகம் செய்துள்ள பெறுமதியான பங்களிப்புகளை நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூர்வதுடன், இலங்கையின் எதிர்கால முன்னேற்றத்திற்காக இத்தகைய நல்லுறவுகள் தொடர வேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றோம்.

இலங்கை வாழ் முஸ்லிம்களுக்கு இனிய நோன்புப் பெருநாள் வாழ்த்துகள். ஈத் முபாரக்! - என்றுள்ளது. (ற-சி)

### வடக்கு

அதன்படி, வடக்கு மாகாண சபையின் சகல அமைச்சுக்களினூடாகவும் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு 6 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதையடுத்தே மேற்குறித்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் இந்த ஆண்டுக்கு ஆயிரத்து 848 மில்லியன் ரூபா மாத்திரமே அபிவிருத்தி நிதியாக வழங்கப்பட்டிருந்தது. அத்துடன் வடக்கு மாகாண மீன்பிடி அமைச்சு, அபிவிருத்தி வேலைகளுக்காக 843.8 மில்லியன் ரூபா தேவை என்று கொழும்பு மீன்பிடி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தபோதும், ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்படுவதைப் போன்று 50 மில்லியன் ரூபா மாத்திரமே வழங்கப்பட்டது. (ற-5)

### ஒத்துழைப்புடன்

டியே அறிவிக்க வேண்டும். மாகாண அமைச்சரவையாலும், முதலமைச்சராலும் கொடுக்கப்படும் சட்டபூர்வமான உத்தரவை நிறைவேற்றி வடக்கு மாகாண அரசுக்கு எதுவித தடங்கலுமின்றி செயற்பட ஒத்துக் கொண்டால் பிரதம செயலாளர் தொடர்ந்தும் அந்தப் பதவியில் இருக்கலாம். அத்துடன் பிரதம செயலாளர் ஒருவர் முதலமைச்சரின் அனுசரணையுடன் ஜனாதிபதியால் நியமிக்கப்பட வேண்டும் என்ற உரித்து முதலமைச்சருக்கு தொடர்ந்தும் இருக்கும்"- என்று தெரிவித்தார்.

பிரதம செயலாளர் சார்பில் மன்றில் முன்னிலையான, சட்டமா அதிபர் திணைக்கள சட்டத்தரணி, "பிரதம செயலாளர் தனது கடமையை - தொழிலை சுதந்திரமாக மேற்கொள்ள உரித்து இருக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

இரு தரப்பு வாதங்களையும் கேட்ட பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் தலைமையிலான நீதிபதிகள் குழாம், வழக்கின் தீர்ப்பு நாளை புதன்கிழமை வழங்கப்படும் என்று கூறி வழக்கை நாளை வரை ஒத்தி வைத்தனர். (ற-5)

### ஐ.நா.

ரீதியில் பெரும் நெருக்கடிகளைக் கொடுத்தவர் கெலும் மக்ரே. தற்போது லண்டனில் உள்ள அவர் ஜெனிவாவில் விசாரணைகளை மேற்கொண்டுவரும் விசாரணைக்குழு முன்பாகச் சாட்சியமளிப்பதற்காக அங்கு செல்லவுள்ளார் என்றும் தெரியவருகின்றது.

தமது நிறுவனம் (சனல் - 4) வெளியிட்ட போர்க்குற்ற ஆதாரங்களின் நம்பகத்தன்மை, அதன் பின்னணி உட்பட மேலும் பல விடயங்களை ஐ.நா. விசாரணைக் குழுவின் முன்னிலையில் கெலும் மெக்ரே விவரிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை, இலங்கையில் போர் நடைபெற்ற சமயம் சமாதானத் தூதுவராகச் செயற்பட்ட எரிக் சொல்ஹெய்மும் ஐ.நா. குழுவின் முன் சாட்சியமளிக்கத் தயார் என்று அறிவித்துள்ளார். (ற-சி)

### இந்த

டிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன்படி அக்கராயன் பிரதேசத்துக்கான மின்சார இணைப்பு நடவடிக்கைகள் தற்போது மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் வவுனியா மற்றும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களில் 95 வீதமான இடங்களுக்கு மின் சாரம் வழங்கப்பட்டுள்ளது - என்றார். (ஐ-14)

### தமிழரசுக்

ஆனைக்குட்டி மதவடியில் இன்று முற்பகல் 10 மணிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா திறந்து வைக்கவுள்ளார். (ஐ-5)

### ஜே.வி.பி.

குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் காயமடைந்த அநுரகுமார திஸாநாயக்க, இரத்தினபுரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர், மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதேவேளை, இந்த விபத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்கவின் வாகனச் சாரதியும் காயமடைந்துள்ளார்.

### சகோதரத்து

டாடும் அனைத்து முஸ்லிம்களுக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கள்

ளிகளுக்கும் இந்த திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர்.

கள் உற்பத்தியை அதிகரித்து உள்ளூர் மற்றும் வெளியூர் சந்தைகளில் அவர்களுக்கு வாய்ப்பை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது என்று பனை அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது. (ஜ-14)

### கலந்துரையாடல்

மாவட்ட இளைஞர் கழக சம்மேளனமும் இளைஞர் நாடாளு மன்ற உறுப்பினர்களும் தமது அதிருப்தியைத் தெரிவித்திருந் தனர்.

அத்துடன் இளைஞர் நாடாளுமன்றத்தின் ஒன்பதாவது அமர்வையும் யாழ். மாவட்ட உறுப்பினர்கள் புறக்கணித்திருந்தனர். இந்த நிலையில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற தலைமைக் காரியலயத்திலிருந்து வரும் அதிகாரிகள் இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இளைஞர் கழக சம்மேளன உறுப்பினர்களையும் சந்திக்க உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)



# காதலியுடன் கடற்கரையை கலக்கிய நெய்மர்

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் முதுகில் ஏற்பட்ட காயம் சரியாகி விட்டதால் நட்சத்திர வீரர் நெய்மர் தனது காதலியுடன் கடற்கரையில் நேரத்தை கழித்தார்.
உலகக்கிண்ணப் போட்டியின்போது கொலம்பிய வீரர் தாக்கியதில் நெய்மரின் முதுகெலும்பு முறிந்தது. இதனால் அவர் தொடரில் இருந்து வெளியேறினார்.
இதைத் தொடர்ந்து பிரேசில் அணி உலகக்கிண்ணத்தை தவறவிட்டது மட்டுமல்லாமல் ஜேர்மனி அணியிடம் வரலாறு காணாத தோல்வியை சந்தித்தது.
பின்னர் உடல் ஓரளவு சரியான நிலையில் மூன்றாவது இடத்துக்கான ஆட்டத்தில் நெய்மர் தன்னால் முடிந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஆனால் அதிலும் பிரேசில் கோட்டை விட்டது.
இந்நிலையில் உடல்நிலை சரியான நெய்மர் இடுப்பில் பண்டேஜ் போட்டவாறு தனது காதலி புருனாவுடன் ஜேர்மனியில் உள்ள பார்மெண்டிரா கடற்கரையில் நேரத்தைச் செலவிட்டார். (த)

# டோனி, குக்கிற்கு ஐ.சி.சி. அறிவுரை




இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி மற்றும் இங்கிலாந்து அணித்தலைவர் அலெஸ்டயர் குக் ஆகிய இருவரும் ஐ.சி.சியின் சட்ட நடைமுறைகளை மதித்து நடக்க வேண்டும் என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவுரை வழங்கியுள்ளது.
ரவீந்திர ஜடேஜா - ஜேம்ஸ் அன்டர்சன் விவகாரத்தில் ஜடேஜாவுக்கு ஐ.சி.சியினால் ஆட்ட ஊதியத்தின் 50 வீதம் அபராதமாக விதிக்கப்பட்டிருந்தது. இதற்கு இந்திய அணித்தலைவர் மகேந்திரசிங் டோனி கண்டனங்களைத் தெரிவித்திருந்தார். அதேவேளை இங்கிலாந்து அணித் தலைவர் அலெஸ்டயர் குக்கும் இவ் விவகாரம் தொடர்பாக சில கருத்துகளை வெளியிட்டிருந்தார். இந்த நிலையில் டோனியின் பேட்டிக்கு ஐ.சி.சி. கண்டனம் தெரிவித்துள்ளதுடன் இந்தப் பிரச்சினையில் டோனியும், குக்கும் வெளிப்படையாகத் தெரிவித்த சில கருத்துகள் ஐ.சி.சியின் ஒழுங்கு நடவடிக்கைகளைக் குறைத்து மதிப்பிடுவதாக உள்ளது என்றும் கூறியுள்ளது.
இதுகுறித்து ஐ.சி.சியின் தலைமை செயலதிகாரி டேவ் ரிச்சர்ட்சன் கூறுகையில், ஐ.சி.சியின் ஒழுங்கு நடைமுறை நடவடிக்கைகள் குறித்து டோனியும், குக்கும் புரிந்து கொள்ள முன்வர வேண்டும். இதுதொடர்பாக இருவருமே வெளிப்படையாக கருத்துச் சொல்வதைத் தவிர்க்க வேண்டும்.
இதில் டோனியின் கருத்து சற்று தீவிரமாக உள்ளது. இது தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும்.
போட்டி நடுவர் டேவிட் புன் அளித்த தீர்ப்பை ஏற்று ரவீந்திர ஜடேஜாவுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளமை சரியானதே.
சம்பவம் தொடர்பாக டேவிட் பூன் எடுத்த முடிவையும், அதுதொடர்பாக எடுக்கப்பட்ட நடைமுறைகளையும் ஐ.சி.சி. மதிப்பதுடன் ஆதரவும் தெரிவிக்கிறது.
பூன் பல்வேறு ஆதாரங்கள், தீவிர ஆய்வு, விசாரணைகளுக்குப் பின்னர்தான் தனது முடிவை தெரிவித்துள்ளார்.
எனவே அனைவரும் இதை ஏற்று சட்ட நடைமுறைகளை மதித்து நடக்க வேண்டும என்றார்.
இதேவேளை அன்டர்சன் மீது இந்திய அணியினரால் அளிக்கப்பட்டிருந்த புகார் குறித்த விசாரணை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. இதில் அவர மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும் பட்சத்தில் 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவதற்குத் தடை விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

# பொதுநலவாயப் போட்டிகளில் பதக்கம் வென்ற 13 வயது சிறுமி

பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் 13 வயதுச் சிறுமி ஒருவர் நீச்சல் போட்டியில் பதக்கம் வென்று புதிய வரலாறு படைத்துள்ளார்.
ஸ்காட்லாந்தைச் சேர்ந்த எராய்ட் டேவிஸ் என்ற சிறுமி, மாற்றுத் திறனாளிகளுக்கான 100 மீட்டர் ப்ரிஸ்ட்ரொக் நீச்சல் போட்டிகளில் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார்.
பொதுநலவாயப் போட்டிகளில் 13 வயதுச் சிறுமி பதக்கம் வெல்வது இதுவே முதல் முறையாகும்.
போட்டித் தூரத்தை ஒரு நிமிடம் 21.68 செக்கன்களில் கடந்து வெண்கலத்தைத் தட்டிச் சென்றுள்ளார் எராய்ட்.
எராய்ட் டேவிஸ் தனது ஆறாவது வயதில் ஒரு மைல் தூரம் வரை நீந்தி சாதனை படைத்துள்ளார்.
இதற்கு முன்னர் 1974ஆம் ஆண்டு நியூசிலாந்தில் இடம்பெற்ற பொதுநலவாயப் போட்டிகளில் ஆஸ்திரேலியாவின் ஜென்னி டைரல் என்பவர்தான் மிகவும் இளம் வயதில் பதக்கம் வென்றவர் என்ற சாதனையைப் படைத்திருந்தார். (த)






# சமனிலையில் முடிந்தது இரண்டாவது டெஸ்ட்

இலங்கை மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி சமனிலையில் முடிவடைந்துள்ளது.
இரண்டு ஆட்டங்களைக் கொண்ட இத் தொடரின் முதலாவது ஆட்டத்தை தென்னாபிரிக்க அணி வென்றிருந்த நிலையில், இவ் ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தமையால் தொடரை தென்னாபிரிக்க அணி 1-0 என்ற ரீதியில் சுவீகரித்துக் கொண்டது.
கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெற்ற இவ் ஆட்டத்தின் முதல் இன்னிங்ஸில் இலங்கை அணி 421 ஓட்டங்களையும், தென்னாபிரிக்க அணி 282 ஓட்டங்களையும் பெற்றிருந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் 8 இலக்குகளை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்ட இலங்கை அணி தனது இன்னிங்ஸை இடைநிறுத்திக் கொள்ள தென்னாபிரிக்க அணிக்கு 369 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயிக்கப்பட்டது.
நான்காம் நாள் நிறைவில் ஒரு இலக்கினை இழந்து 38 ஓட்டங்களைப் பெற்றிருந்த தென்னாபிரிக்க அணி இறுதி நாளான நேற்றைய ஆட்டநேர முடிவின் போது 8 இலக்குகளை இழந்து ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. ஹேரத், பெரேராவின் சுழலுக்குத் தாக்குப் பிடிக்க முடியாமல் தென்னாபிரிக்க வீரர்கள் சீரான இடைவெளியில் ஆட்டமிழந்த போதும் இலங்கை அணியினால் வெற்றியைப் பெறமுடியவில்லை.
இறுதிநேரம் வரை விறுவிறுப்பாக நடைபெற்ற இவ் ஆட்ட முடிவின் போது தென்னாபிக்க அணி 8 இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்றுக் கொள்ள ஆட்டம் சமனிலையில் முடிவடைந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் தென்னாபிரிக்க அணி சார்பாக டிகொக் 37 ஓட்டங்களையும், அம்லா 25 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் ரங்கண ஹேரத் 5 இலக்குகளையும், தில்ருவான் பெரேரா 3 இலக்குகளையும் கைப்பற்றிக் கொண்டனர். நேற்றைய நாளில் ஆட்டம் மழையினால் இடையிடையே தடைப்பட்டிருந்த போதும் இலங்கை அணியினால் 94 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசப்பட்டிருந்தன. ஆட்டநாயகனாக முதல் இனிங்ஸில் 165 ஓட்டங்களைக் குவித்து அசத்திய மஹேல ஜெய்வர்த்தன தெரிவானார்.
இவ் அணிகளுக்கிடையிலான ஒருநாள் தொடரையும் தென்னாபிரிக்க அணி 2-1 என்ற ரீதியில் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜடேஜாவுக்கு எதிராக சாட்சி



இந்திய வீரர் ஜடேஜாவுக்கு எதிராக இங்கிலாந்து வீரர்கள் சாட்சியம் அளித்துள்ளனர்.
இங்கிலாந்து வீரர் அண்டர்சனுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதாக இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜாவுக்கு அவரது போட்டிச் சம்பளத்தில் இருந்து 50 சதவீதம் அபராதமாக விதிக்கப்பட்டது.
இந்நிலையில் ஜடேஜாவுக்கு எதிராக இங்கிலாந்து வீரர்கள் பென் ஸ்டோக்ஸ், மட் பிரையர் ஆகியோர் சாட்சியம் அளித்திருக்கும் விடயம் கசிந்துள்ளது.
அன்டர்சனை நோக்கி ஜடேஜா எச்சரிப்பது போல் துடுப்பை உயர்த்தியதாக பிரையரும், ஜடேஜா தான் முதலில் அன்டர்சனைத் தள்ளி விட்டார் என்று பிரையரம், ஸ்டோக்சும் ஐ.சி.சி. நடுவரின் விசாரணையின் போது வாக்குமூலம் அளித்துள்ளனர்.
ஆனால் அது போன்ற விதத்தில் ஜடேஜா நடந்து கொள்ளவில்லை என்று இந்திய தரப்பில் மறுக்கப்பட்டுள்ளது. (த)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு



கொழும்பு, ஜூலை 29
ஜா-எல துடெல்ல பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர் சிகிச்சை பயனின்றி உயிரிழந்துள்ளார்.
முற்பகல் 8.30 அளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.
சம்பவத்தில் படுகாயமடைந்தவர் ராகம போதனா வைத்தியசாலையின் தீவிர கண்காணிப்புப் பிரிவில் சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் முற்பகல் 11.30 அளவில் உயிரிழந்துள்ளார். ஜா-எல பகுதியைச் சேர்ந்த ஒருவரே துப்பாக்கிப் பிரயோகத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.
சம்பவத்துடன் தொடர்பான விசாரணைகளுக்கு இரண்டு பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (ற)



கிழக்கு பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாக முதல்வர் வைத்தியகலாநிதி வர்ணகுலேந்திரன் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, பல்கலைக் கழக விடுதிக்கு முன்பாக, பல்கலைக் கழக மாணவர்களால் நேற்றுமுதல் உணவு தவிர்ப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ற-40)

## 1, 202 பேர் விபத்துகளில் சாவு

கொழும்பு, ஜூலை 29
நாடளாவிய ரீதியில் கடந்த ஆறுமாதங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் ஆயிரத்து 202 பேர் உயிரிழந்துள்ளனர் என்று போக்குவரத்துப் பொலிஸாரின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. அவர்களில் மேல் மாகாணத்திலேயே கூடுதலானோர் உயிரிழந்துள்ளனர்.
முதல் ஆறு மாதங்களில் இடம்பெற்ற வீதி விபத்துகளால் 3 ஆயிரத்து 534 பேர் காயமடைந்துள்ளனர். அதில் ஆயிரத்து 49 பேர் படுகாயமடைந்துள்ளனர். 2 ஆயிரத்து 485 பேர் சிறுகாயமடைந்துள்ளனர்.
பொலிஸ் போக்குவரத்து புள்ளிவிவரத்தின் பிரகாரம் நாளொன்றுக்கு ஆறு அல்லது ஏழு வீதி விபத்துகள் இடம்பெறுகின்றது. அதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். (ற)

## இலங்கை, ஜப்பானிடையே புதிய உறவுத் திட்டங்கள்



கொழும்பு, ஜூலை 29
ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான உறவை புதுப்பித்துக் கொள்ள இரண்டு நாடுகளும் இருதரப்பிலும் மேம்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று ஜப்பான் தெரிவித்துள்ளது.
ஜப்பானின் பொருளாதார அமைச்சர் கசுயாசி அகாபா நேற்று இலங்கையின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்த போதே இந்தக் கருத்தை வெளிப்படுத்தியுள்ளார். இதன் போது இரண்டு நாடுகளின் தரப்பிலும் பொருளாதாரம் மற்றும் வர்த்தகத் துறைகள் தொடர்பில் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.
இந்தநிலையில் ஜப்பானின் புதிய முதலீடுகளை தாம் எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.
அதேவேளை இலங்கையின் ஒலிபரப்பு மற்றும் சுற்றுலாத் துறைக்கு உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக ஜப்பானிய அமைச்சர் உறுதியளித்துள்ளார் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (ற)

# கப்பலில் வந்திறங்கிய அனைவரும் பொருளாதாரக் குடிவரவாளர்களே

### ஆஸ்திரேலிய குடியகல்வு - குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிஸன் கூறுகிறார்

சிட்னி, ஜூலை 29
ஆஸ்திரேலிய சுங்க கப்பலில் நடுக்கடலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 157 புகலிட கோரிக்கையாளர்களும் இந்திய பொருளாதார குடிவரவாளர்கள் என்று தெரிவித்துள்ளார் அந்த நாட்டு குடிவரவு அமைச்சர் ஸ்கொட் மொறிஸன்.
இந்த கப்பல் பாதுகாப்பான தேசமான இந்தியாவில் இருந்து எங்கும் தங்காமல் வந்துள்ளது. இவர்கள் இலங்கையில் இருந்தோ அல்லது ஆப்கன் போன்ற நாடுகளிலிருந்தோ வரவில்லை என்றும் அவர் ஆஸ்திரேலிய வானொலி ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.
பாதுகாப்பான இந்தியாவிலிருந்து வந்தமையால் இது சட்ட விரோதமாக ஆஸ்திரேலியாவுக்கு நுழையத்திட்டமிட்ட பொருளாதார குடிவரவாகும்.
அநேகமாக இலங்கையில் இருந்து வந்துள்ள இந்த குழு பாண்டிச்சேரியிலிருந்து கடந்த மாதம் புறப்பட்டு வந்துள்ளனர்.
ஆனால், இவர்கள் ஆஸ்திரேலிய அதிகாரிகளினால் வழிமறிக்கப்பட்டனர்.
இவர்கள் இந்திய அதிகாரிகளால் இந்தியாவிற்கு அழைத்து செல்லப்படுவதற்காக மதிப்பீடு செய்யப்படுவர். இந்தியாவுக்கு செல்ல மறுப்போர் நவுறு மற்றும் பப்புவா நியூகினியா தீவுகளில் உள்ள தீவுகளுக்கு அனுப்பப்படுவர். அங்கு இவர்கள் விசாரிக்கப்பட்டு ஆஸ்திரேலியாவில் இறுக்கமான குடிவரவு கொள்கைகளுக்கு அமைய மீள்குடியேற்றம் செய்யப்படுவர் என்றும் குறிப்பிட்டுள்ள அவர், அவர்கள் இனரீதியான கொடூரங்களிலிருந்து தப்பியோடி வந்தவர்கள் என்பதை நிராகரித்துள்ளார். (ற)




**British College of Higher Studies**
வழங்கும்

**மிகக்குறைந்த கட்டணங்களில் மாணவர்களுக்கான விடுமுறை காலப் பயிற்சி நெறிகள்**

உங்கள் ஒரு மாத பாடசாலை விடுமுறையினை மிகவும் பயனுள்ளதாக்க விரும்புகிறீர்களா? நீங்களும் ஆங்கிலத்தில் சரளமாக ஒரு மாதத்தில் பேச விரும்புகின்றீர்களா? நவீன தொழில்நுட்ப போதனாமுறையின் கீழ் உங்களை மெருகேற்ற முனைகிறீர்களா? சரளமாக ஆங்கிலத்தில் கதைக்க முடியவில்லையென்று ஏக்கத்துடன் இருக்கின்றீர்களா? கவலையை விடுங்கள் இப்பொன்னான விடுமுறை காலத்தில் உங்களுக்காக விசேடமாக வடிவமைக்கப்பட்ட கற்கை நெறிகளை நாம் வழங்கக் காத்திருக்கின்றோம். உங்களின் நேரத்திற்கேற்ப அனைத்து வகுப்புகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

**Spoken English with Grammar**
Duration : 80 Hrs

**Diploma in English**
Duration : 110 Hrs

வகுப்புகள் யாவும் நவீனமயப்படுத்தலின் கீழ் Speaking, Readin( Writing & Listening என வகைப்படுத்தி ஒவ்வொரு பிரிவும் ப ந்தியேக விரிவுரையாளர்களினால் நடாத்தப்படும்.

Batches Starts on
Batch I : 02/08/2014
Batch II: 03/08/2014
Batch III: 04/08/2014
Batch IV: 05/08/2014
08.30am to 12.30pm & 01.00pm to 05.00pm

BCHS
No.15 , Sirambiyady Lane (Off Stanley Road)
Jaffna. (Near Sathosa & Ariyakulam Junction)
Tel : 021-2224550

No.3, 6th Lane, Vairavarkovil Road,
Vairavapuliyankulam (Near Young Star Club)
Vavuniya. Tel :024-3245287

Hotline(s): 0777585913,0777222422, 0714299935



Mega Sale
ARPICO
ஆடி தள்ளுபடி
10% → 50% வரை
அமோக விலை குறைப்பு
மங்க்ளா காட்சியறை
536, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8367 - 021 222 8366 0777 286 069





நவாலியூர் அருள்மிகு
களையோடை கண்ணகை அம்மன் தேவஸ்தானம்
ஆடிப்பூரத் திருவிழா விஞ்ஞாபனம்-2014
நிகழ்ச்சி நிரல்

10ஆம் நாள் 30.07.2014 புதன்கிழமை காலை 9 மணிக்கு விஷேட அபிஷேகமும் நண்பகல் 12 மணிக்கு பூசையும் நடைபெறும். மாலை 6 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று 7.00 மணிக்கு விஷேட தவில் நாதஸ்வரம், முழங்க விஷேட வாண வேடிக்கை நிகழ்வுகளுடன் அம்பாள் மின்சார தீபங்களினால் அலங்கரிக்கப்பட்ட அழகிய முத்துச் சப்பரத்தில் வீதி உலா வருவார். தொடர்ந்து இரவு நிகழ்வுகளாக 9 மணிக்கு விஷேட தவில் நாதஸ்வரக் கச்சேரி நடைபெறும்.

விஷேட ஆன்மீக சொற்பொழிவு:-
பிரமச்சாரி ஜாகர்த சைதன்யா சுவாமிகள்

ஈழத்தின் மற்றும் தென்னிந்திய நாதஸ்வர தவில் கலைஞர்கள் வரிசையில்

நாதஸ்வரம்
கலாபூசணம் அளவையூர் - M.B.பாலகிருஸ்ணன்
நாதஸ்வர இளவரசு தொல்புரம் - R. சிவகுமார்
நாதஸ்வர கானவினோதன் - ஈழநல்லூர் P.S. பாலமுருகன்
சுரஞான ஜோதி தாவடியூர் - K. நாகதீபன்
நாதஸ்வர வித்துவான் - N. ராஜன்



தவில்
லயஞானதவில் அரசன் - N.R.S. சுதாகரன்
தவில் சுடர் ஒளி - N. பிரசன்னா
லயஞான இளவல் யாழ்ப்பாணம் - N. நந்தகுமார்
லயஞானபாலன் ஈழ நல்லூர் - P.S. செந்தில்நாதன்
தவில் நாத நந்திகேஸ்வரன் -இணுவையூர் B. நர்மதன்
தவில் இளந்தென்றல் தொண்டமானாறு -M.S.துளசிபரன்

சிறப்புத் தவில், இவர்களுடன் தென்னிந்தியாவிலிருந்து வருகைதந்த தவில் சக்கரவர்த்தி கலைமாமணி மன்னார்குடி M.R. வாசுதேவன் காஞ்சி காமகோடி ஆஸ்தானவித்துவான் கலைமாமணி கோவிலூர் K.G. கல்யாண சுந்தரம்- தென்னிலங்கையிலிருந்து தருவிக்கப்பட்ட வாண வேடிக்கை நிகழ்வுகள் நடைபெறும்.

அனைவரும் வருக அம்பிகை அருளைப் பெறுக
ஆடிப்பூர திருவிழா உபயகாரர்களும், நிர்வாகமும்.
(C/15303)(10)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 29.07.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.